2

ஆறும் பாட்டு

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்(து) அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

பதவுரை :— புள்ளும் — பறவைகளும், சிலம்பின காண் — கூவிக்கொண்டு செல்லா நின்றன காண்; புள் அரையன் கோ இலில் — பட்சிகளுக்கு அரசனான கருடாழ்வானுக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரனுடைய ஸந்நிதி₄யிலே, வெள்ளை விளி சங்கின் — வெண்மை

---

h ருசியுடையாரிழக்கை h_2 நெடுந்தட்டு என்றிருக்கையாலும், i ததீ₃யரையொழிய அநுப₄விக்கமாட்டாமையாலும், முந்துறவுணர்ந்தவர்கள் உறங்குகிறவர்களை எழுப்பத் தட்டில்லை.

எல்லார்க்கும் ஒக்க க்ருஷ்ணநுப₄வத்தில் J *கௌதுகம் அவிஶிஷ்டமாயிருக்குமாகில், சிலர் எழுப்பச் சிலர் உறங்குகை கௌதுகத்துக்குக் குறையன்றோவென்னில்: — அநுப₄ாவ்யமான க்ருஷ்ணகு₃ணங்கள், நஞ்சுண்டாரைப் போலே சிலரை மயங்கப்பண்ணுகையாலும், சிலரை இருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே துடிக்கப்பண்ணுகையாலும், அவர்கள் கௌதுகத்துக்குக் குறையில்லாமையாலே, சிலரைச் சிலர் எழுப்பத் தட்டில்லை.

k இதில் இப்பாட்டுக்கு வாக்யார்த்த₂ம் :— l ப₄க₃வத்₃விஷயத்தில் புதியளாகையாலே இந்நோன்பின் சுவடறியாதாளொருத்தியை m எழுப்புகிறார்கள்.

பெ. அ. மையாலும்) என்றது "வையத்து வாழ்வீர்காள்"(2) என்று கொண்டாடினமைக்குத்தாத்பர்யமாக, தங்களநுப₄வத்தை ரஸமாக்கித் தருமவர்களென்று சொல்லப்பட்ட ஸ்வபா₄வத்தைப் பற்ற. h (ருசியுடையாரிழக்கை நெடுந்தட்டென்றிருக்கையாலும்) என்றது - "ஐயமும், பிச்சையும்"(2) என்றவிடத்தில் சொல்லப்பட்டதாய், ப₄க₃வத்₃பா₄க₃வதாநுப₄வம் பண்ணுவிப்பவர்களென்னும் ஸ்வபா₄வத்தைப் பற்ற, h_2 "நெடுந்தட்டு" என்றது - மஹாப்ரதிஹதியென்றாய், அத்தால்-அதிது₃ஸ்ஸஹம் என்றபடி, i (ததீ₃யரையொழிய அநுப₄விக்கமாட்டாமையாலும்) என்றது - "செய்யாதனசெய்யோம்" (2) என்றவிடத்திற் சொன்ன புருஷகாராஶ்ரயணத்தைப் பற்ற.

k 'இதில்' என்றது - இப்பத்துப்பாட்டிலென்றபடி. l "பிள்ளாய்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (ப₄க₃வதி₃த்யாதி₃) m 'எழுப்புகிறார்கள்' என்ற அநந்தரம், 'என்று' என்று ஶேஷம்.

சி.அ. j கௌதுகம் - ப்ராவண்யம். l (ப₄க₃வத்₃ விஷயத்தில் புதியளாகையாலே) என்றது - 'பிள்ளாய்' என்றத்தைக் கடாக்ஷித்து.

கு.அ. j (கௌதூஹலம்) உத்ஸாஹம்,

*(பா)கௌதூஹலம்

யானதும், (எல்லாரையும்) கூப்பிடுவதுமான சங்கத்தினுடைய, பேர் அரவம் — பெரிய ஒலியையும், கேட்டிலையோ—கேட்கவில்லையோ?, பிள்ளாய்!—(பகவத்விஷயத்தில் புதியவளான) பெண்ணே!, எழுந்திராய் — (சீக்கிரமாக) எழுந்திரு; பேய் முலை நஞ்சு — (தாய் வடிவுகொண்ட) பேயாகிய பூதனையின் முலையில் (தடவியிருந்த) விஷத்தை, உண்டு—(அவளுடைய ஆவியுடன்) அமுது செய்து, கள்ளச் சகடம்—வஞ்சனை பொருந்திய சகடாஸுரனை, கலக்கு அழிய — கட்டுக் குலையும்படி, கால் ஓச்சி — திருவடிகளை நிமிர்த்து, வெள்ளத்து—திருப்பாற்கடலில், அரவில் —ஆதிசேஷன் மீது, துயில் அமர்ந்த—திருக்கண் வளர்ந்தருளிய, வித்தினை — ஜக₃த்காரணபூ₄தனான எம்பெருமானை, முனிவர்களும் —(பகவானை) மனனம் செய்பவரும், யோகிகளும் — யோகாப்யாஸம் செய்யும் கைங்கர்ய பரர்களும், உள்ளத்துக் கொண்டு—ஹ்ருத₃யத்திலே (எம்பெருமானை) தியானித்து, மெள்ள எழுந்து—(ஹ்ருதயத்திலிருக்கும் அப்பெருமான் அசையாதபடி) ஜாக்₃ரதையாக எழுந்திருந்து, அரி என்ற—''ஹரிர் ஹரி:'' என்ற, பேர் அரவம்—பெரிய ஒலியானது, உள்ளம் புகுந்து—எங்களுடைய நெஞ்சிலே புகுந்து, குளிர்ந்து—குளிர்ந்தது;

வ்யா:— n (புள்ளும் n₂ சிலம்பினகாண்) o இப்பெண்பிள்ளைகள் ''போதோடே வாசலிலே சென்று உணர்த்தக்கடவதாக ஸங்கல்பித்துப் போது விடியச்செய்தே கிடந்து உறங்குவதே!'' என்று o₂ ஶிஷ்டக₃ர்ஹை பண்ணினவாறே, ''போதுவிடியவேண்டாவோ எழுந்திருக்க?'' என்ன, ''போதுவிடிந்தது எழுந்திராய்'' என்ன, ''விடிந்தமைக்கு அடையாளமென்?'' என்று கேட்க; ''நாங்கள் உணர்ந்து வந்தது போதாதோ?'' என்ன; ''உறங்கினருணரிலன்றே விடிவுக்கு அடையாளமாவது. A உண்டோ கண்கள் துஞ்சுதல் என்கிறபடியே உங்களுக்கு உறக்கமுண்டோ? உங்களுணர்த்தி விடிந்தமைக்கு அடையாளமன்று; o₃ வேறு அடையாளமுண்டோ?'' என்ன; p (புள்ளும் சிலம்பினகாண்) q 'போதுவிடிந்(த)து, பக்ஷிகளகப்படக் கிளம்பி இரை தேடிப் q₂ போகாநின்றனகாண்' என்ன, r 'அது விடிந்தமைக்கு அடையாளமோ?' என்ன, 'ஏன் அல்லவோ?' என்ன; 'ஓம், அல்லவீ' என்ன, s 'ஆவதென்?' என்ன; t 'நீங்கள் அவற்றை உறங்கவொட்டாதே கிளப்பினவாறே கிளம்பிற்றினவல்லது விடிந்தமைக்குஅடையாளமோ?' u இவ்விடத்திலே ''பிள்ளைப் பிள்ளையாழ்வான், ப₄க₃வத்

பெ.அ. n, o ''புள்ளும்'' என்ற சகாரத்தாலே - வேறே அடையாளமும் விவக்ஷிதமென்று தோற்றுகையால், இரண்டடையாளம் சொல்லுகைக்கு உக்திப்ரத்யுக்தி ரூபேண தாத்பர்யம் அருளிச்செய்கிறார்(இப்பெண்பிள்ளைகள் இத்யாதி₃) n₂, o₂ ''சிலம்பின'' என்ன அமைந்திருக்க, ''காண்'' என்கையாலும், ''கேட்டிலையோ'' என்றத்தாலும் வெறுப்புத்தோற்றுகையாலே (ஶிஷ்டக₃ர்ஹை பண்ணினவாறே என்றது) p, q சிலம்புகை - ஶப்₃தி₃க்கையாய், ப₄லிதார்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (போது இத்யாதி₃) q₂, u 'இவ்விடத்திலே' இத்யாதி₃ ஐதிஹ்ய வாக்யத்தை 'போகாநின்றனகாண்' என்ற அநந்தரம் அநுஸந்தி₄ப்பது r லோகத்தில் பெண்கள் பேச்சான ரீதி தோற்றும்படி உக்திப்ரத்யுக்திரூபேண மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (அது விடிந்தமைக்கு இத்யாதி₃) s (ஆவதென்னென்ன) என்றது - அடையாளமாகாமையாவதென்னென்ன என்றபடி. t இதுக்கு ஹேதுவை அருளிச்

சி. அ. p, q 'புள்ளும்' என்கிற ஶப்₃த₃த்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் (போது

கு. அ. o₃, p 'ச' ஶப்₃த₃த்துக்குத் தாத்பர்யம்(வேறடையாளமித்யாதி₃)

A திருவிருத்தம் - 97

ஸமாஶ்ரயணத்துக்கு அநுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கிற u, பக்ஷிகளின் நாத3மல்லது இவ்வாத்மாவுக்கு உத்3தே3ஶ்யமில்லை என்று பணிக்கும்'' என்று அருளிச்செய்வர். v 'நீங்கள் பிறந்தவூரில் பக்ஷிகளுக்கு உறக்கமுண்டோ? w A''காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள் - மாலின்வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மை கொலோ'' என்றன்றோ இருப்பது; வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்று கிடந்தாள்;

x (புள்ளரையன் இத்யாதி3) அது கிடக்கிடாய்: இதுவும் உன் செவிப்பட்டதில்லையோ? y புள்ளுக்கு நிர்வாஹகனான பெரியதிருவடியுண்டு, அவனுடைய கோவுண்டு - ஸர்வேஶ்வரன், அவனுடைய இல் என்னுதல்; z ''புள்'' என்று - பக்ஷியாய், அத்தாலே பெரிய திருவடியாய், அவனுக்கு நிர்வாஹகனானவனுடைய கோயில் என்னுதல். திருப்பள்ளியெழுச்சியில் ஶங்க2த்4வநி கேட்டிலையோ? a க்ருஷ்ணன் திருவவதரித்துத் திருவாய்ப்பாடியிலே b இருந்ததே குடியாக அவனகிழலே ப3த்3த4ப4ாவராய்ச் செல்லுகிற காலத்திலே c கொண்டாடுகைக்கு ஒரு d திருமுற்றமுண்டோ? என்னில்; e சக்ரவர்த்தித்திருமகன் திருவவ

பெ. அ. செய்கிறார் (நீங்கள் அவற்றை இத்யாதி3) v உன்னையெழுப்ப வந்த எங்களுக்கு அவற்றையெழுப்புகை பணியோ? நாங்களெழுப்பினோமென்கிறதென்? என்ன, அருளிச்செய்கிறார் (நீங்கள் பிறந்த இத்யாதி3) w நாங்கள் பிறந்த ஊரிலே பக்ஷிகள் உறங்காதிருக்கைக்கு நியாமகம் என்னென்ன, ஸம்வாத3முகே2ந நியாமகம் அருளிச்செய்கிறார் (காலை இத்யாதி3) A [காலையெழுந்திருந்து] 1. 'ப்3ராஹ்மே முஹூர்த்தத்திலே' எழுந்திருந்து. A [கரியகுருவிக்கணங்கள்] க்ருஷ்ணன்வடிவை ஸ்மரிப்பிக்குமவை. A[மாலின் வரவுசொல்லி] அவன் வ்யாமுக்3த4னாய் வரும்படியைச் சொல்லி. A [மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ] ப்ரேமாந்த்4யத்தாலே பாடுகை மெய்யாகப் புகுகிறதோ? என்று இப்படியே பட்சிகளும் உங்களைப்போலே வ்யாமோஹத்தாலே கூப்பிடும்படியிறே நீங்கள் பண்ணிவைப்பது; ஆகையால், உங்கள் ஸ்வப4ாவம்போலே அவையும் உறக்கமற்றுச் சிலம்பிற்றின இத்தனை; இது விடிவுக்கு அடையாளமன்று என்றதாய்த்து.

x, z இரண்டாம் அர்த்த2த்தில் ''கோயில்'' என்றது - முழுச்சொல்லு. a (க்ருஷ்ணன் திருவவதரித்துத் திருவாய்ப்பாடியிலே) என்ற அநந்தரம், ''இருக்கையாலே'' என்று ஶேஷம். b (இருந்ததேகுடியாக) என்றது - குடியிருந்தவர்களெல்லாரும் என்றபடி. c (கொண்டாடுகைக்கு) என்றது - ''புள்ளரையன் கோயில்'' என்று ஸ்துதிக்கைக்கு என்றபடி. e க்ருஷ்ணனிடத்தில் ப3த்3த4ப4ாவராகிலும் அவன் விரும்பின விஷயமென்று கொண்டாடுகைக்குக் கோயிலுண்டென்னுமத்தை ஸத்3ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (சக்ரவர்த்தி இத்யாதி3)

சி. அ. விடிந்தது இத்யாதி3) ''எழுந்திராய்'' என்று ஶேஷம்; s (ஆவதென்? என்ன) என்றது - ''அல்லவாவதென்? என்ன'' என்றபடி. v (நீங்கள் பிறந்த ஊரில்) என்று தொடங்கி அருளிச்செய்தது. தாத்பர்யாந்தரம். u, பக்ஷிகள் நாத3ம் - ஆசார்யோக்தி. x, y புள்ளரையன் - பெரிய திருவடி கோயில் என்றது—திருவடிக்குக்கோவான ஈஶ்வரனுடைய இல் என்றபடி. d (திருமுற்றம்) பெருமாள் கோயில்.

கு. அ. u2 பக்ஷிநாத3மென்றது ஆசார்யனுடைய உக்தி என்றபடி.

A நாச்-திரு 9-8.

தாரம்பண்ணி இருந்ததே குடியாக அவனழகிலே ஈடுபட்டுச் செல்லாநிற்க, 1. ''ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாக3மத்'' என்று - அவர் தாம் பெரியபெருமாளை ஆஶ்ரயிக்குமாபோலே, க்ருஷ்ணனையும் கும்பீடுகொள்கைக்கு ஒரு திருமுற்றமுண்டு. (புள்ளரையன்) பெரியதிருவடியை நிரூபகமாகவுடையவன்; ஆஶ்ரிதர் தனக்கு நிரூபகமாம்படியிறே f இவர்களுக்குக் கொடுத்த ஐஶ்வர்யம்; g 2. ''லக்ஷ்மணபூர்வஜம் ச'' என்றிறே இருப்பது. h ப4க3வத்3 விஷயத்தில் h2 வழியே இழியுமவர்களாகையாலே பெரியதிருவடியை முன்னிடுகிறார்கள். i (வெள்ளை விளி சங்கு) j ''சங்கு வெளுத்திருக்குமது விடிந்தமைக்கு அடையாளமோ? இது, வ்யர்த்த2 விஶேஷணம். k (விளிசங்கு) சாமங்கள் தோறும் l முறையுடையாரை அழைக்கிறார்களாகில் போது விடியவேணுமோ?'' m ''அங்ஙனல்ல; (பேரரவம்) விடிந்தமைக்கு அடையாளமன்றோ, ஸ்ரீபாஞ்சஜந்ய த்4வநியிலும் இது அதி4கமாகவன்றோ த்4வனிக்கிறது. நீயும் உணருகைக்குப் போரும் த்4வநி''; n இவர்கள் சங்கின்வெளுப்புச் சொல்லுவானென்னென்னில்: n2 ஶங்க2த்4வநி வழியே ஊதும்போதை முக2முத்3ரையும் சங்கின் வெளுப்பும் உத்3தே3ஶ்யமாகையாலே. (விளிசங்கு) விளிக்கை-அழைக்கை; A ''கைவிளிக்கின்றதும் கண்டேநின்றேன்'' என்னக்கடவதிறே; கையாலேயழைக்கை என்றபடி.

பெ.அ. f (இவர்களுக்குக்கொடுத்த ஐஶ்வர்யம்) என்றதுக்கு - தன்னையும் தன்விபூ4தியையும் ஆஶ்ரிதரிட்ட வழக்காக்கிவைக்கையாலே அவர்கள் ப்ரஸித்34ராய் அவர்களையிட்டு நிரூபிக்கலாம்படியிருக்கும் என்று கருத்து. h தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ப43வ தி3த்யாதி3) h2 வழியேயிழிகையாவது - புருஷகார புரஸ்ஸரமாகப் பற்றுகை. i, j சங்குக்கு வெளுப்பு ஸித்34மாயிருக்க, ''வெள்ளை'' என்று சொல்லும்போது விடிந்தமைக்கு அடையாளமாகச் சொல்லிற்றாகவேணும்; அது இல்லாமையாலே இது வ்யர்த்த2மாகையால் உங்கள் வார்த்தை விஶ்வஸநீயமன்றென்னும் ஶங்கையை உத்க்ஷேபிக்கிறார் (சங்கு வெளுத்து இத்யாதி3) l முறையுடையார் - அவ்வவ காலத்துக்குத் தக்க கைங்கர்யம்பண்ணும் ப்ராப்தியுடையவர்கள். i, m, ''வெள்ளை'' என்னுமது வ்யர்த்த2மாகிலும் * விளிசங்கின் அரவம் பேரரவமாகையாலே அடையாளமோவென்று திருவுள்ளம்பற்றி இவர்களுடைய ப்ரத்யுக்திமுகே2ந பரிஹரிக்கிறார் (அங்ஙனல்ல இத்யாதி3) i, n ''வெள்ளை'' என்றத்தை அடையாளமாக்காவிடில் அத்தை இவர்கள் சொல்லுகைக்குக் காரணமென்னென்று

சி. அ, g ஆஶ்ரிதரை நிரூபகமாகவுடையராயிருக்குமோ? என்ன அருளிச்செய்கிறார் (லக்ஷ்மண பூர்வஜம்) என்று. h பெரிய திருவடியை ப்ரஸங்கி3த்ததுக்கு ப்ரயோஜனம் — ஈஶ்வரநிரூபகத்வேந வா, தங்களுக்குப் புருஷகாரத்வேந வா; அத்தை அருளிச்செய்கிறார் (ப43வத்3 விஷயத்தில் இத்யாதி3) j, k (சங்கு வெளுத்திருக்குமது) என்ற வாக்யம் — 'விளிசங்கின்' என்ற பத3த்துக்கு அவதாரிகை. i, n2 பின்னை வெளுப்புச் சொன்னதுக்குக் கருத்தென்? என்ன (த்4வநி வழியே இத்யாதி3)

A பெ.-திரு 6-5.

o ஸத்த்வோத்தரமான காலத்திலே அடிமை செய்ய வாருங்கோளென்று அழைக்கிறபடி. p (கேட்டிலையோ) q இது கேட்க பா4க்3யமின்றிக்கேயொழிவதே!

r இவர்கள் இப்படிச் சொல்ல, பின்பு நிருத்தரையாய்க் கிடந்தாள்; s (பிள்ளா யெழுந்திராய்) t ப4க3வத்3 விஷயத்தில் புதியையிறே; u பா4க3வத ஸம்ஶ்லேஷத்தில் இனிமையறியாயிறே; v அநுபா4வ்யங்களில் காஷ்டா2 பூ4மியான பா4க3வத ஸம்ஶ்லேஷரஸம் பிறக்குமளவும் ப4க3வத்3விஷயத்திலே அவகா3ஹிக்கப் பெற்றிலையே. w நாங்கள் உன்னைக்காண ஆசைப்பட்டவோபாதி நீயும் எங்களைக்காண ஆசைப்பட வேண்டாவோ?

x அறிந்திருக்கிற உங்களை எழுப்பினாரென்ன, (பேய்முலை இத்யாதி3) y எங்களை எழுப்பினாரில்லை; y2 தந்தாம் காரியஞ்செய்வார் த்4வநிகேட்டு எழுந்திருந்தோம் என்கிறார்கள்: (பேய்முலை நஞ்சுண்டு) பெற்ற தாயும் உதவாத தனிமையிலே பா3தி4க்கவந்த பூதநையை முடித்து; இத்தலையை z முடிக்க வந்தவள் தன்னோடே போம்படி பண்ணி.

(கள்ளச்சகடம்) பேயாகில் ஆராய்ந்து கொள்ளலாம்; தாயே ரக்ஷையாக வைத்த ஶகடம். அஸுராவேஶத்தாலே பிறந்த அபாயமாகையாலே ''கள்ளச்சகடம்'' என்கிறது. a (கலக்கழியக் காலோச்சி) ஶகடமானது கலக்கழியும்படி திருவடிகளை ஓச்சி. b முலைவரவு தாழ்த்ததென்று மூரிநிமிர்த்த திருவடிகள் பட்டு

பெ. அ. ஶங்கித்து விவரிக்கிறார் (இவர்கள் இத்யாதி3) o சங்காலேயழைக்கிறபடியை அருளிச்செய்கிறார் (ஸத்த்வோத்தரேத்யாதி3) p, q ''சிலம்பினகாண்'' என்னுமாபோலே பேரரவம் முழங்கிற்றென்று சொல்ல அமைந்திருக்க, ''கேட்டிலையோ'' என்கைக்கு உபாலம்ப4ம் தோற்றத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இதுகேட்க இத்யாதி3)

r போது விடிந்தமைக்கு அடையாளம் சொல்லியிருக்கையால், ''எழுந்திராய்'' என்றது அர்த்த2ஸித்3த4மாயிருக்கவும், சொன்னதுக்கு பா4வம் அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி3) s, t, u ''பாவாய்'' என்னலாயிருக்க, ''பிள்ளாய்'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ப4க3வத் இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே.) v, w உக்தவாக்யத்3வயத்தையும் க்ரமேண விவரிக்கிறார் (அநுபா4வ்யங்களில் இத்யாதி3)

x ''பா4க3வதஸம்ஶ்லேஷரஸம் அறிந்திருக்கிற உங்களை யாரேனும் பா4க3வதர் வந்து எழுப்ப அவர்களோடே ஸம்ஶ்லேஷிக்கைக்கு எழுந்திருந்திகோளோ? காலமறியாமல் எழுந்திருந்திகோளித்தனை'' என்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (அறிந்து இத்யாதி3) y ''நாங்கள் வந்து உன்னை எழுப்புகிறப்போலே எழுப்பினாரில்லை, நாங்களே ஸ்வாநுப4வத்துக்கு உடலாக ரிஷிகள் சொல்லும் ஶப்3த3ம்கேட்டு உணர்ந்தோம் பா4க3வத ஸம்ஶ்லேஷத்துக்காக'' என்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி3) z 'முடிக்கவந்தவள்' என்ற அநந்தரம் ''நினைவை அவள்'' என்று ஶேஷம்.

a கலக்கு - அவயவஸந்தி4ப3ந்த4ம். a. b ''கலக்கழியப் பண்ணி'' என்னாதே, ''காலோச்சி'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (முலை இத்யாதி3) இத்தால் –

சி. அ. s 'பிள்ளாய்' என்றது அஜ்ஞை என்றபடியாய், சிந்தயந்தியைப்போலே இருக்கிறவள் என்றபடி. w பா4க3வதஸம்ஶ்லேஷரஸமறிந்தார் இருக்கும் க்ரமமென்? என்ன அருளிச்செய்கிறார் (நாங்கள் உன்னை இத்யாதி3) y2 (தந்தாம் கார்யம் செய்வார்) என்றது நாங்கள் உன்னை எழுப்புகிறப்போலேயன்றியே தங்கள் அநுப4வார்த்த2மாக ப4க3வந்நாமங்களை அநுஸந்தி4க்கிற முனிவர்களையும் யோகி3களையும். a (கலக்கழிய) கட்டுக்குலைய. மங்க3ளாஶாஸனபரையாகையாலே, இவ்வபாயங்களைக் கேட்டுத் துணுக்கென்று எழுந்தி

முறிந்தது. இப்போது இவ்வபதா3நங்கள் சொல்லுகிறது—பிறந்த அபாயங்கள் கேட்டுத் துணுக்கென்று எழுந்திருக்கைக்காக.

c (வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை) d இவ்வபாயப்ரஸங்க3மில்லாத விடத்திலே, பரிவனான திருவநந்தாழ்வான்மேலே சாயப்பெற்றதே! என்று ஹ்ருஷ்டைகளாகிறார்கள், (வெள்ளம்) e ஸௌகுமார்யத்துக்குச்சேரக் குளிர்ச்சியுண்டானபடி. (அரவில்) f அந்நீர் உறுத்தாமைக்குப் படுத்த படுக்கை; மென்மை குளிர்த்தி நாற்றங்கள் ப்ரக்ருதியான திருவநந்தாழ்வான்மேலே. g இவன் மூச்சுப்பட்டு மது4கைடப4ர்கள் பொடிபட்டுப்போகையாலே. பயப்படவும் வேண்டாவென்கை. (துயில்) ஜக3த்3ரக்ஷணசிந்தை. A ''பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டோடி வந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பி'' என்று—ஓராஸ்ரிதனுடைய ஹ்ருத3யத்தைக் கணிசித்துக் கிடக்குமவனென்னவுமாம். (அமர்ந்த) பிராட்டிமார் திருமுலைத் தடத்தாலே நெருக்கினாலும் உணராமை. h (வித்தினை) i திருவவதாரத்துக்கு நாற்றங்கால். பிறந்த பிறவிகள் போராமே திரியப் பிறக்கைக்கு அடியிட்டபடி.

(உள்ளத்துக்கொண்டு) B ''அரவத்தமளியினோடுமழகிய பாற்கடலோடும் அரவிந்தப்பாவையுந்தானு மகம்படி வந்து புகுந்து'' என்கிறபடியே திருப்பாற்கடலோடும் திருவநந்தாழ்வானோடும் நாய்ச்சிமாரோடுங்கூடத் தங்கள் நெஞ்சிலேகொண்டு. j (முனிவர்களும் யோகிகளும்) k யோகா3ப்4யாஸம் பண்ணுகிறவர்களும் மநநசீலரும்; l அவர்களாகிறார் - வ்ருத்தி நிஷ்ட2ரும், கு3ண நிஷ்ட2ரும். m இங்கு m_1 உறங்குகிறவர்களையும் m_2 எழுப்புகிறவர்களையும் போலே இருக்கிறவர்கள். (மெள்ள வெழுந்து) க3ர்ப்பி4ணிகள் ப்ரஜைகளுக்கு நோவுவாராமே

பெ.அ. கள்ளச்சகடு அழியவேணுமென்னும் நினைவாலே கலக்கழியச் செய்தமை தோற்றாதே, முலைவரவு தாழ்த்து நிமிர்த்த திருவடிகளாலே கலக்கழிந்தமை தோற்றுகைக்காக ''காலோச்சி'' என்றது என்றதாய்த்து.

c, d அவள் துணுக்கென்று எழுந்திருக்கைகாக அபாயப்ரஸங்க3ம் பண்ணுவது தங்களுக்கு ப4யஹேதுவாகையாலே, தந்நிவ்ருத்தியாம்படி க்ஷீராப்3தி4ஶாயியை அநுஸந்தி4க்கிறார்களென்கிறார் (இவ்வபாயம் இத்யாதி3) g C ''வெவ்வுயிர்ப்ப வாய்ந்த மதுகைட வரும் வயிறுருகிமாண்டார்'' என்கிற பாசுரத்தை உட்கொண்டு அருளிச்செய்கிறார் (இவன் இத்யாதி3) k (மநநசீலரும் - யோகா3ப்4யாஸம் பண்ணுகிறவர்களும்) என்று அந்வயித்துக்-

---

சி.அ. ருக்குமென்று சொல்லுகிறாள் என்றபடி. c, d, e, f, திருவந்தாழ்வானோட்டைச்சேர்த்தி அவனுடைய ஸௌகுமார்யத்துக்குமுறுப்பாய் அவன் மங்க3ளாஶாஸநபரனாகையாலே தம்முடைய ப4யநிவ்ருத்திக்கும் ஹேதுவாயிருக்கும் என்றபடி. h, i வித்து - காரணம்.

j, k, l, m, 'முனிவர்களும் யோகிகளும்' என்றதுக்கு இரண்டு பொருள். k (யோகா3ப்4யாஸமித்யாதி3) முதல் பொருள். l (அவர்களாகிறார்) என்கிறது இரண்டாம் பொருள். (அவர்களாகிறார்) என்று உக்த விவரணமென்று தோற்றினாலும் (யோகா3ப்4யாஸம்) என்றிருக்கையாலே பே4த3ம் கொள்ளவேணும். m_2 உறங்குகிறவர்கள் கு3ணநிஷ்ட2ர்; m_3 உணர்த்துகிறவர்கள் - கைங்கர்ய நிஷ்ட2ர். o (வளையமலையாமே) என்றது-

---

A பெரியாழ் திரு 5-4-9, B பெரியாழ் திரு 5-2-10, C மூன்-திருவ 66

எழுந்திருக்குமாபோலே: n 1. "ஹ்ருத₃யேநோத்₃வஹந் ஹரிம்" என்று o வளையம் அலையாமே p ஏன்றிறே எழுந்திருப்பது. திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் யோகி₃களுமுண்டோவென்னில்: க்ருஷ்ணன் வந்து அவதரித்தபின்பு இடையருடைய பசுநிரைக்கொட்டில்களிலே வந்து அவர்கள் p₂ எல்லாரும் படுகாடு கிடப்பர்கள். q (அரியென்ற) அரியென்கையாவது r 2. "ஹரிர் ஹரதி பாபாநி" என்கிறபடியே ப₄க₃வத₃நுப₄வவிரோதி₄களைப் போக்கியருளவேணுமென்கை, s பின்னை இவர்களுக்குப் பாபமாவது — க்ருஷ்ணனுக்கு அஸுரர்களாலே வரும் தீங்கு. t அத்தை அவன்தானே போக்கித்தந்தருளவேணுமென்று மங்க₃ளாஶாஸநம்பண்ணுகை என்றுமாம், u 3. "அத₂ ஸோऽப₄யங்க₃தோ ப₄வதி" என்று அவனாலே ப₄யங்கெட்டால் பின்பு அத்தலைக்கு ப₄யப்பட்டுத் திருப்பல்லாண்டு பாடுமித்தனையிறே. ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ ஜ்ஞாநம் பிறப்பதற்குமுன்பு இழவு பேறுகள் தன்னளவிலேயாயிருக்கும்; ஸம்ப₃ந்த₄ஜ்ஞாநம் பிறந்தபின்பு, இழவு பேறுகள் அவனளவிலேயாயிருக்கக்கடவதிறே. (பேரரவம்) பஞ்சலக்ஷம் குடியிலும் இந்த த்₄வநியேயாயிருக்கை. எல்லாரும் ப்ரபு₃த்₃த₄ரான காலமாகையாலே ஒருவர் சொல்லுமளவன்றிக்கே எல்லாரும் சொல்லுகை.

v (உள்ளம்புகுந்து குளிர்ந்து) படுக்கைக்கீழே வெள்ளங்கோத்தாற்போலே, திருநாமம் செவிவழியே புகுந்து w வவ்வலிட்டது; அவன் அவர்கள் நெஞ்சிலே புகுந்து ஆநந்தி₃ப்பித்தாற்போலே க்ருஷ்ணவிரஹத்தாலே கமர் பிளந்து கிடக்கிற நெஞ்சு பத₃ஞ்செய்யும்படி இவர்களுடைய த்₄வநியும் எங்கள் நெஞ்சிலே புகுந்து எங்களை ஆநந்தி₃ப்பித்தது; x ஆகையாலே, எழுந்திராய் என்கிறுர்கள். 6.

பெ. அ. கொள்வது. o வளையம் - திருமாலை. p ஏன்றிறே என்றது – ஏந்திக்கொண்டிறே என்றபடி. p₂ 'எல்லாரும்' என்றது - எல்லா ரிஷிகளும் என்றபடி.

w வவ்வலிட்டது – வவ்வலிடப்பண்ணிற்று. x (ஆகையாலே) என்றது - நாங்களெழுந்திருந்து ஆநந்தி₃க்கும்படி, ஆநந்தி₃ப்பிக்கையாலே என்றபடி. v "உள்ளம் புகுந்து குளிர்ந்து" என்ற அநந்தரம், "நாங்கள் எழுந்திருந்தோம்" என்று பாட்டிலே கூட்டிக் கொள்வது. "ஏல், ஓர்" இத்யாதி₃ - பாத₃ பூரணம். 6.

சி. அ. ஸர்வேஶ்வரன் திருமுடியில் சாத்தின திருமாலை சலியாமே என்றபடி. q 'அரி' என்று விரோதி₄நிரஸன ஶீலனென்றுய் அதுக்கு இரண்டு பொருள். r முந்தினது (ஹரிர்ஹரதிபாபாநி இத்யாதி₃). s, t இரண்டாவது மங்க₃ளாஶாஸனபரதை தோற்ற அருளிச்செய்கிறுர் (பின்னை இவர்களுக்கித்யாதி₃) u தங்களுடைய ப₄யநிவ்ருத்தியை அபேக்ஷியாதே அவனுக்கு ப₄யப்படுகிறதென்? என்ன (அத₂ஸோऽப₄யங்க₃தோ ப₄வதீத்யாதி₃)

இப்பாட்டில் சொல்லிற்றுய்த்து ஸ்வாபதே₃ஶம் — ப₄க₃வதே₃கபோ₄க₃ரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்யப்ரயோஜனராய் இவ்விஷயத்தில் தே₃ஶிகரன்றிக்கே இருக்கிறவர்களை அவர்களிடத்தில் பரிவாலே தே₃ஶிகராக்குகை தங்களுக்குக் க்ருத்யம் என்றிருக்கையாகிற ஸ்ரீவைஷ்ணவத்வஸ்வப₄ாவம். 6.

ரு. அ. n1 'பபாத ஸோப்யதி₄க்ஷிப்தோ ஹ்ருத₃யேநோத்₃வஹந் ஹரிம்' என்றது ப்ரஹ்லாத₃னை. q, r, s பாபம் த்₃விவித₄மாகக்கொள்வது. "புள்ளும் சிலம்பினகாண்" என்று தொடங்கி, "உள்ளம் புகுந்து குளிர்ந்தது; பிள்ளாய் எழுந்திராய்" என்று அந்வயம். 6.

ஆருயிரப்படி—ஆறும்பாட்டு

அவ:—ஆறும்பாட்டு. [மூவாயிரப்படி ஆறும்பாட்டு அவதாரிகையில் உள்ளதை ஏற்றுக்கொண்டு, அதற்குமேல் கீழ்வருவனவற்றை அருளுகிருர் ஆருயிரப்படி ஆசிரியர்.] மேலிற்பாட்டாலும்—'செய்யாதன செய்யோம்' (2) என்று அடியில்பண்ணின ப்ரதிஜ்ஞையைத் தலைக்கட்டுகிருர்கள். பெருமாள் 1. ''ந த்யஜேயம்'' என்ற ப்ரதிஜ்ஞையை 2. '' ஏதத்₂வ்ரதம் மம '' என்று தலைக்கட்டினுற்போலேயும், அர்ஜுநன் பண்ணின ப்ரதிஜ்ஞையை க்ருஷ்ணன் செய்து தலைக்கட்டினுற்போலேயும், பஞ்சலக்ஷம்குடியில் பெண்களும் வந்துதிரண்டு, ''நாம் நீராடவே நம் விரோதி₄களும்போம்'' என்று புறப்பட, சிலர் வாராதொழியப் போகமாட்டிற்றிலர்; உறங்குகிறவர்களை எழுப்பிக்கொண்டுபோகவே அத்தலைக்கும் நமக்கும் புருஷகாரமாவர்களென்றும், 3. ''பே₄ாத₄யந்த:பரஸ்பரம்'' பண்ணுகைக்காகவும் இவர்களிழவு பொறுக்கமாட்டாமையாலும், 4. ''ஏகஸ்ஸ்வாது₃ ந பு₄ஞ்ஜீத'' என்கிறபடியே ஒருவரையொழியவொருவர் பு₄ஜிக்க மாட்டாமையாலும், க்ருஷ்ணனிற்காட்டிலும் இவர்கள் உத்₃தே₃ஶ்யராகையாலும், தனி அநுப₄விக்கும் விஷயமல்லாமையாலும், உணராதவர்களை உணர்ந்தவர்கள் எழுப்புகிருர்களாய்ச் செல்லுகிறது. பரமபத₃த்துக்ககப்பட A ''அடியார்கள் குழாங்களை—உடன்கூடுவதென்று கொலோ'' என்று கூட்டுத்தேடவேண்டாநின்றது, க்ருஷ்ணுநுப₄வத்துக்குக் கூட்டுத்தேடச் சொல்லவேணுமோ? B ''இமையோர் தமக்கும் — செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னு மீனச்சொல்'' என்று—நித்யஸூரிகளுடைய எத்திறமிருக்கும்படி. இத்தையநுப₄வித்த ஆழ்வார் C ''எத்திறம்!'' என்றுர். தன்னையும் 5.''ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம்'' என்னப்பண்ணிற்றிறே. ஒரு விடாயாற்றிக்கு வேண்டும் மனிசர் போரத்திரண்டு இவ்வூருக்காக க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தில் புதியாளொருத்தியை ''போதுவிடிந்ததுகாண்'' என்று எழுப்புகிருர்கள்; 6. ''உத்திஷ்ட₂ நரஶார்த்₃தூ₃ல'' என்று—விஶ்வாமித்திரன், போதுவிடிந்தது என்று எழுப்பினுற்போலே.

வ்யா:— (புள்ளும் சிலம்பினகாண்) இப்பெண்களை, 'போதோடே வாசலிலே உணர்த்தக்கடவதாக ஸங்கல்பித்து, போதுவிடியச்செய்தே கிடந்துறங்குவதே!' என்று ஶிஷ்டகர்ஹை பண்ணினவாறே; 'போதுவிடியவேண்டாவோ எழுந்திருக்க, போது விடிந்தமைக்கு அடையாளமென்?' என்று அவள்கேட்க, 'நாங்கள் உணர்ந்துவந்தது அடையாளமாகப் போராதோ?' என்ன, 'உறங்கினுர் உணரிலன்றோ விடிவுக்கு அடையாளமாவது, D ''உண்டோ கண்கள் துஞ்சுதல்'' என்கிறபடியே உங்களுக்கு உறக்கமுண்டோ? உங்களுணர்த்தி விடிவுக்கு அடையாளமன்று; வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன — (புள்ளும்சிலம்பினகாண்) ''மார்கழி நீராடவேணும்'' என்னும் த்வரையுமின்றிக்கே, வைகியெழுந்திருக்கில் ப்ரத்யவாயமுமின்றிக்கே'' காலமுணர்த்த உணருமவையன்றோ புட்கள். நாழிகை வட்டில் நீர் நிரம்பினவாறே கீழேவிழுமாபோலே, இரையறுதியிலேயுணரும் திர்யக்குக்களுங்கூடவுணர்ந்தன.

A திருவாய் 2-3-10. B திருவிருத்தம் 98. C திருவாய் 1-3-1. D திருவிருத்தம் 97.

(சிலம்பினகாண்) 'தலையிலே இடிவிழுந்ததுமறியாமே உறங்குமத்தனையோ?' என்ன; 'உங்களுணர்த்தி விடிவுக்கடையாளமல்லாதாப்போலே நீங்களிருந்தவூரில் பக்ஷிகளுணர்த்தியும் விடிவுக்கு உடலன்று; A ''ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்'' என்று. B [காலையெழுந்திருந்து] ப்₃ராஹ்மமுஹூர்த்தத்திலே எழுந்திருந்து; B [கரிய குருவிக்கணங்கள்] க்ருஷ்ணனுடைய வடிவை ஸ்மரிப்பிக்குமவை. B [மாலின் வரவு சொல்லி] அவன் வ்யாமுக₃த₄னாய்க்கொண்டு வரும்படியைச் சொல்லி, மருள்பாடக் கடவதாம்படியிறே பண்ணிவைப்பது. 1.'பக்ஷிணோபி ப்ரயாசந்தே'' என்று நீங்களிருந்தவூரில் பக்ஷிகளுடைய உணர்த்தியும் விடிவுக்கு உடலன்று; மற்றுமடையாளங்களுண்டாகில் சொல்லுங்கோள் என்று கிடந்தாள்.

''அது கிடக்கிடாய், இதுவும் உன் செவியில் பட்டதில்லையோ? திருப்பள்ளியெழுச்சிக்கு ஊதின ஶங்க₂த்₄வநியும் விடிவுக்கு உடலன்றோ?'' என்கிறார்கள் — (புள்ளரையன் கோயிலில்) ''க்ருஷ்ணனுடைய கு₃ணங்களிலே ஈடுபட்டிருக்கும் திருவாய்ப்பாடியிலும் ஒரு திருமுற்றமும் திருவடித்தொழுவாருமாய்ச் செல்லுமோ'' என்னில், 2.''ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா₂:''என்றும், 3.''பா₃லா அபி க்ரீட₃மாநா:'' என்றும் சிறுப்ரஜைகளுமகப்படப் பெருமாளுடைய கு₃ணங்களிலே தோற்றுச் செல்லாநிற்கச்செய்தே திருவயோத்₄யையில் 4.''ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாக₃மத்'' என்று பெருமாள் பிராட்டியோடேகூடப் பெரியபெருமாளை உபாஸிப்பரென்றதிறே; அப்படியிலே திருவாய்ப்பாடியிலும் ஒரு திருமுற்றமுண்டுபோலே. (புள் அரையன்) என்று—க்ருஷ்ணன்தன்னைச் சொல்லிற்றாகவுமாம். (புள்ளரையன்) 5.''லக்ஷ்மணபூர்வஜம்'' என்று இளையபெருமாளையிட்டுப் பெருமாளை நிரூபிக்குமாபோலே, திருவடியை நிரூபகமாகவுடையவன், அவர்களையிட்டுத் தன்னை நிரூபிக்கவேண்டும்படியிறே இவர்களுக்கு வைத்துக்கொடுத்த தரம். தாங்கள் இருந்தவிடத்தே கொடுவருமவனாகையாலே ''புள்ளரையன்'' என்றதாகவுமாம். C ''புள்ளின் பின்போன தனிநெஞ்சமே'' என்றிருக்குமவர்களிறே. (வெள்ளையித்யாதி₃) சங்கினுடைய வெளுப்பு, போதுவிடிவுக்கு உடலல்லாமையாலே வ்யர்த₂விஶேஷணம். (விளிசங்கு) சாமங்களிலே பணிக்குக்கடவாரை அழைக்கைக் குறுப்பாகையாலே அநைகாந்திகம். (பேரரவம்) ஏகார்த்த₂ாபி₄லாஷையுண்டு; எனக்குமொக்கக் கேளாமையாலே அப்ரஸித்₃த₄ம்; ஆகையாலே, போதுவிடிவுக்கு உடலன்றென்கிறாள். D ''வெள்ளை விளிசங்கிடங்கையில் கொண்ட விமலன்'' என்று— உங்கள் பா₄வநாப்ரகர்ஷத்தாலே சொல்லுகிறிகோள்; இது போதுவிடிவுக்குஉடலன்று என்ன (பேரரவம் கேட்டிலையோ) இத்₄வநி கேளாதபடி உள்ளுச்செய்கிற அந்யபரதையேதோ? (பேரரவம் கேட்டிலையோ) நாங்கள் சொல்லுகிற இவற்றுக்கு அநுபபத்தி சொல்லுகிற உனக்குமகப்படக் கேட்கும்படியன்றோ த்₄வநியின் பெருமை.

(பிள்ளாய்) ''ப₄க₃வத்₃விஷயத்திலே அவகா₃ஹிக்கையாவது பா₄க₃வதஸம்ஶ்லேஷபர்யந்தமாகை; அவ்வளவன்றிக்கே க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தளவிலே பர்ய

A திருவாய் 6-7-2 B நாச்-திரு 9-8 C திருவிருத்தம்-3 D நாச்-திரு 5-2

வஹிக்கிறது உன்னுடைய மௌக்₃த்₄யமிறே'' என்ன; ''க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத் தளவிலேயோ நான் நிற்கிறது? உங்களுடைய பேச்சே த₃ாரகமாகக் கேட்டுக்கிடக்கிற என்னை 'பிள்ளாய்' என்கிற நீங்களன்றோ பிள்ளைகள்'' என்ன: 'பேச்சுக்கேட்டுக் கிடக்கவமையுமோ? A ''அடியார்கள் தம் ஈட்டங் கண்டிடக்கூடுமேல்'' என்றும், B ''அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ'' என்றும், C ''பேரா ளன் பேரோதும் பெரியோரையொருகாலும் பிரிகிலேன்'' என்றுமன்றோ நம்முடைய பூர்வர்களுடைய வார்த்தை; அப்படியே உன் வடிவை நாங்கள் கண்டு எங்கள் வடிவை நீ கண்டு அநுப₄விக்க ஆசைப்படாதேயிருக்கிற நீயன்றோபிள்ளை: நாங்கள் சொல்லிற்றை யெல்லாம் அழிக்கைக்கடி உன் ப₃ால்யமிறே.' ப₄ட்டர்., ''திருவாய்ப் பாடியிலுள்ளாரில் சிந்தயந்தியோபாதி க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தில் புதியாரில்லை', என்று அருளிச்செய்வர். என்செய்யவென்னில்; கு₃ருத₃ர்ஶநம் பண்ணக்கண் ணுண்டாய்த்தே; 1. ''தச்சித்தவிமலாஹ்லாத₃'' இத்யாதி₃. 2. ''யயௌ ச காசித் ப்ரே மாந்த₄ா'' என்று ஒருத்திக்குப்ரேமமானது இருளைப்பண்ணுகையாலே காவல் கிடந்தாரைக் காணுமைக்குடலாய்த்து; அது தானே வழிபோகைக்குடலாய்த்து; 3. ''கு₃ரவ: கிங்கரிஷ்யந்தி'' — கு₃ருக்கள்கிடாயென்ன; அவர்கள் விரஹாக்₃நிக்கு ஒரு குடநீர்சொரிய வல்லர்களோ? அன்றியே வழித்துணையாவர்களோ? என்கிறாள்.

நீங்கள் சொன்னபடியே நான் பிள்ளையாகிறேன், உங்களுணர்த்திக்கு அடியே தென்ன; தாங்களுணர்ந்தமைக்கு ஹேதுசொல்லுகிறார்கள் — (பேய்முலைநஞ்சுண்டு) தாய்வடிவு கொண்டுவந்த பூதனையுடைய ஸ்தந்யபாநத்தைப் பண்ணி, இது சொல்லு கிறதென்னென்னில்; இவள் ப₄யப்பட்டுக் கடுக எழுந்திருக்கைக்காக; ஸர்வேஶ் வரனை து₃:க்க₂நிவர்த்தகனென்றிருப்பார் அல்லாதாரிறே; பெரியாழ்வார் ஸம்ப₃ந் தி₄கள் ''அங்குத்தைக்கு என்புகுருகிறதோ?'' என்று வயிறுபிடிக்குமவர்களிறே. அவள் ப₄யநிவ்ருத்தியளவுமனுஸந்தி₄த்து பயங்கெட்டுக் கிடக்கிறாள். (கள்ளச்சகடம்) க்ருத்ரிம ஶகடமானது. (கலக்கழியக்காலோச்சி) கட்டழிந்து சிதறும்படியாகத் திரு வடிகளை நிமிர்த்து. (கள்ளச்சகடம்) நம்மை முடிக்க வந்த ஶகடம். பூதனை தாய் வடிவுகொண்டாகிலும் வந்தாள்; அப்படியன்றிக்கே காவலாகவைத்த ஶகடந் தானே அஸுராவேஶத்தாலே தன்மேலே ஊரப்புக, தன்னினைவன்றிக்கே முலை வரவு தாழ்த்து ஸ்தந்யார்த்தி₂யாய்த் தொட்டிலையுதைத்த திருவடிகள் புறப்பட்டு முடித்தவத்தனையிறே. D [ஊர்ந்த சகடமுதைத்த பாதத்தன்] ப்ரேமத்தாலே ப₄யப் படுகைக்குடலாய் அச்சங்கெடுகைக்கும் உடலாயிருக்கும். [பாதத்தன்] இவன் மௌக்₃த்₄யத்தாலே உறங்க, திருவடிகளாலே பெற்றோம். அவனுடைய ஆபத் துக்கும் ஶேஷபூ₄தனுடைய ஆபத்துக்கும் ரக்ஷகமான திருவடிகள். E. ''திருக் காலாண்ட பெருமானே'' ராமாவதாரத்துக்கு இளையபெருமாளைப்போலே. (வெள்ளத் தரவில்) விரோதி₄ப்ரஸங்க₃மில்லாததொரு தே₃ஶவிஶேஷமும், ஒருபரிவனையும் பெறு வதே! (வெள்ளத்தரவில்) நீருறுத்தாதபடி, நாற்றம், மென்மை, குளிர்த்தி தொடக்க

A பெரு-திரு 2-1. B திருவாய் 2-3-10. C பெரியதிரு 7-4-4 D திருவாய் 5-?-3. E திருவாய் 6-9-4.

மான ஸ்வபாவங்களையுடைய திருவநந்தாழ்வான்மேலே. (துயிலமர்ந்த) பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலும் நெருக்கி எழுப்பினாலும் கிளம்பாதபடியாயிருக்கை. (வித்தினை) க்ருஷிகர் விரையை நீரிலே சேர்க்குமாபோலே, பிறந்தது நினையாதிருக்கையும், பிறந்ததெல்லாம் கிடக்க இன்னமும் பிறக்கைக் கடியாயிருக்கையும். இவ்வருகுண்டான கார்யவர்க்கத்துக்கெல்லாம் காரணமாயிருக்கிறவனை. (உள்ளத்துக்கொண்டு) திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான்மேலே அவதார கந்தமாய், அநிருத்த ரூபியாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனை A "அரவத்தமளியினோடும்" என்கிறபடியே தங்கள் B நெஞ்சாகிற நாடுகளிலே குடிகொள்ளும்படி பண்ணி. (முனிவர்களும் யோகிகளும்) ஒரு ப்ரவ்ருத்திக்கு க்ஷமரன்றிக்கேயிருக்கிற குணநிஷ்டரும், கைங்கர்யநிஷ்டரும்; லக்ஷ்மணபரதர்களைப்போலே யிருக்குமவர்கள். பரமபதத்திலும், C "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்று இரண்டுகோடியாயிறேயிருப்பது; திருவாய்ப்பாடியில் அவர்களுண்டோவென்னில்; க்ருஷ்ணன் இங்கே அவதரிக்கையாலே, ஊரில் பசுநிரைக்கொட்டில்களிலே படுகாடுகிடப்பர்கள்; பாண்டவர்கள் வர்த்திக்கிற பணிக்கொட்டில்களிலும் இடைச்சேரியிலும் க்ருஷ்ணன் படுகாடு கிடக்குமாபோலே. (மெள்ளவெழுந்து) கர்ப்பிணிகள் பிள்ளைக்கு நோவுவாராதபடி மெள்ளவெழுந்திருக்குமாபோலேயும், 1. "ஹ்ருதயேநோத்வஹந் ஹரிம்" என்று—ப்ரஹ்லாதாழ்வான் தான் மலையில்நின்றும் விழாநிற்கச்செய்தேயும் "பார்த்தருள், பார்த்தருள்" என்று ஸர்வேஶ்வரனைப் பிடித்துக்கொண்டாற்போலேயும், ஹ்ருதயத்திலிருக்கிற ஸர்வேஶ்வரன் தளும்பாதபடி எழுந்திருந்து. (அரியென்ற) 2. "ரக்ஷது த்வாமஶேஷாணும்" என்னுமாபோலே நீயே உன்னை நோக்கிக்கொள்ளவேணுமென்று மங்களாஶாஸனம் பண்ணின. 3. "அத ஸோऽபயங் கதோ பவதி" தன்பயங்கெட்டால் அங்குத்தைக்குப் பரிகையிறேயுள்ளது. (பேரரவம்) ஒருத்தன் அரியென்றதுகேட்டு ஒருவரிருவராய் ஊராக "ஹரி:" என்கையாலே ப்ராதேஶிகமன்றிக்கே திருவாய்ப்பாடியெல்லாம் இந்த மஹாத்வநியேயாய்த்து. (உள்ளம்புகுந்து) க்ருஷ்ணவிரஹத்தாலே கமர்பிளந்துகிடந்த ஹ்ருதயமானது ஒருநீர்ப் பாய்ச்சினாற்போலே பதஞ்செய்து. (குளிர்ந்து) மறுநீர்பாய்ந்தாற்போலே குளிர்ந்தது; அத்தாலே நாங்களுமுணர்ந்தோம்—பிள்ளாயெழுந்திராய். 6.

ஈராயிரப்படி — ஆறும்பாட்டு

அவ :— ஆறும் பாட்டு, உணர்ந்தவர்களடையச் சென்று உணராதவர்களை எழுப்புகிறார்கள். (புள்ளுமித்யாதி) பகவத் விஷயத்தில் புதியாள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா :— (புள்ளுமித்யாதி) "போது விடிந்தது எழுந்திராய்" என்று ஶிஷ்டகூர்ஹை பண்ணுகிறார்கள். நாழிகைவட்டில் நீர் நிரம்பினால் விழுமாபோலே இரையறுதியிலே உணரும் புள்ளும் சிலம்பினகாண். காலமுணர்த்துவதாக முன்னே புள்ளுமுணர்ந்தன என்றுமாம். (புள்ளரையனித்யாதி) திருப்பள்ளி

A பெரியாழ் திரு 5-2-10, B திருவாய் 8-6-4. C திருவாய் 10-9-9.

யெழுச்சியில் ஶங்க₂த்₄வனியும் கேட்டிலையோ? திருவாய்ப்பாடியில் திருமுற்ற முண்டோவென்னில்; உண்டு. 1. "ப₃ாலா அபி க்ரீட₃மாநா:" இத்யாதி₃ப்படியே, ஒரு தோளே! தோள் மாலையே! ஒருவளப்பமே! ஒரு முறுவலே! ஒரு நோக்கே! என்றாற்போலே சக்ரவர்த்தித்திருமகன் பக்கலிலே பிள்ளைகளுமகப்படச் செல்லா நிற்க, 2. ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா" என்று அவர் தாமும் பெரிய பெருமாளை ஆஶ்ரயிக்குமாபோலே க்ருஷ்ணனையும் கும்பிடு கொள்வானொரு எம்பெருமா னுண்டு. (புள்ளரையன்) அவனுக்கு நிரூபகத₄ர்மமாகப் பெரிய திருவடியை முன்னிடுகிறார்கள். A "அப்புள்ளின் பின்போன தனி நெஞ்சமே" யிறே. "சங்கு வெளுக்குங்காட்டில் போது விடியுமோ? அழைக்குங்காட்டில் நமக்குப் புறப்பட வேணுமோ? உங்களுக்கெப்போதும் ப₄ாவனை இதுவேயிறே". B "வெள்ளை விளிசங்கிடங்கையில் கொண்ட விமலன்" என்றும், C "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்" என்றுமுண்டிறே. (பேரரவம்) நீ உணரும் படிக்குப் போரும் த்₄வனி என்கிறார்கள். (கேட்டிலையோ) "இதுவும் கேளாத படியோ அங்குத்தை அன்யபரதை" என்று பழியிடுகிறார்கள் இவள் அது கேட்டு எழுந்திருக்கைக்கு.

(பிள்ளாய்) "உன்னுடைய இளமையிறே — ப₄க₃வத்₃ விஷயத்துக்கும் ப₄ாக₃வத விஷயத்துக்கும் வாசியறியாமை' என்ன, 'நீங்களன்றோ பிள்ளைகள்; D "ஒருகாலும் பிரிகிலேனே" இத்யாதி₃வத்'. (பேய்முலையித்யாதி₃) போது விடிந்தது, ஈண்டென எழுந்திருக்க வேணும் என்று இவள் துணுக்கென்று புறப்படுகைக்காக "புகுந்த அபாயம் கேட்டிலையோ" என்கிறார்கள். (பேய்முலை நஞ்சுண்டு) பெற்ற தாயும் கூட உதவாத தனிமையில் ப₃ாதி₄க்க வந்த பூதனையை முடித்து. (கள்ளச் சகடமித்யாதி₃) காவலாக வைத்த ஶகடமும் அஸுராவேஶத்தாலே தன் மேலே ஊரப்புக, அதுக ட்டழிந்து சிதறும்படியாகத் திருவடிகளாலே உதைத்து, பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே திருவ நந்தாழ்வான் மேலே யோக₃நித்₃ரையிலே மிகவுமவகா₃ஹித்து ராமாத்₃ யவதாரகந்த₃மாய் அநிருத்₃த₄ ரூபியாய்க் கண்வளர்ந்தருளுகிற எம்பெருமானை.

(உள்ளத்துக்கொண்டு) ஹ்ருத₃யங்களிலே வைத்துக்கொண்டு; ப₄க₃வத்₃ கு₃ணங்களை நினைத்து. (முனிவர்களும்) ப்ரவ்ருத்திக்ஷமரன்றிக்கே மனன ஶீலரான முனிவர்களும். (யோகிகளும்) நாராயணனை க்ஷணகாலவிஶ்லேஷத் திலும் ஸஹியாத யோகி₃களும். (மெள்ளவித்யாதி₃) "ஸ்தனந்த₄ய ப்ரஜையை மார்பிலேயேறிட்டுக்கொண்டு உறங்கின மாதா, ப்ரஜை உணராமல் க்ரமத் தாலே எழுந்திருக்குமாபோலே அவஹிதராய்க் கொண்டு எழுந்திருந்து 'ஹரிஹரி' என்று எம்பெருமானும் உணர்ந்து கேட்டாரும் வாழும்படி பண்ணின திருநாம ஸங்கீர்த்தனமானது படுக்கைக் கீழே வெள்ளம் கோத்தாற் போலே க்ருஷ்ணவிஶ்லேஷத்தாலே கமர்பிளந்த எங்கள்ஹ்ருத₃யங்கள் நனைந்து தேறிக் குளிரும்படி வெள்ளமிட்டது; அதுகாண் எங்களை எழுப்பிற்று" என் கிறார்கள். (வெள்ளம்) திருமேனியிலே ஸௌகுமார்யத்துக்குச் சேரும்படி குளிர்த்தியுண்டானபடி, (அரவு) 3. "ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநப₃லைகத₄ாமநி" ஜ்ஞானம்— இருவரையுமறிகை; விஜ்ஞானம்—எல்லாக் கைங்கர்யமும் பண்ணுகை, ப்ரக்

A திருவிருத்தம் 3, B நாச் திரு 5-2. C நாச்-திரு 9-9. D பெரியதிரு 7-4-4.

ருஷ்டம்—தன்னை மறக்கை. பூலம்—பெரிய பிராட்டியாரும் தானும் துகைக் கைக்குப் பாங்கான சக்தி. (அமர்ந்த) பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கிலும் உணராமை. (வித்தினை) வித்தை விதைக்கைக்கு நீரிலே சேர்த்தாற் போலே. காரணமிருக்கக் கார்யமுண்டாகச் சொல்ல வேணுமோ? (உள்ளத்துக் கொண்டு) மதுகைடபாதிகள் இல்லாதவிடம். A பனிக்கடலிலே நீராடி உண்ட விடாய்தீர. A மனக்கடலிலே கொண்டு.(முனிவர்களும் யோகிகளும்) B "வைகுந்தத் தமரரும் முனிவரும்" போலே. குணவித்தரும் கைங்கர்யபரரும்; இளையபெருமாளும் பரதாழ்வானும் போலே. திருவாய்ப் பாடியில் முனிவர்களும் யோகிகளும் உண்டோவென்ன; அவன் இங்கே வந்து அவதரிக்கையாலே அவர்களுமுண்டு. (மெள்ளவெழுந்து) கர்ப்பிணிகளைப்போலே. 1. "ஹ்ருதயேனோத்வஹந் ஹரிம்" (அரியென்ற பேரரவம்) "ஹரி ஹரி" என்கையாவது 2."ரக்ஷது த்வாமமேஷாணும்" என்னும்படியே உன்னை நீயே காத்துத் தரவேணுமென்று திருப்பல்லாண்டு பாடுகை. (பேரரவம்) பஞ்சலக்ஷம் குடியில் ஒருத்தி த்வனியாயெழுந்த இத்திருநாமம் செவி வழியே புக்கு உடம்பு வவ்வலிட உணர்ந்தோம். 6.

நாலாயிரப்படி—ஆறும் பாட்டு

அவ:— ஆறும்பாட்டு. ஒரு விடாயாற்றிக்கு வேண்டும் பெண்கள் திரண்டு சிலர் இழக்கச் சிலர் புசிக்கமாட்டாமையாலும், எம்பெருமானிலும் இவர்கள் உத்தேஸ்யராயிருக்கையாலும், இவ்விஷயம் தனி அனுபவிக்கவொண்ணாதே திரளாக அனுபவிக்க வேண்டும் விஷயமாகையாலும், மேல் பத்துப்பாட்டாலும் ஒருவரையொருவர் எழுப்புகிறார்கள். இவ்வநுபவம் ஆண்டாள் இங்கேயிருந்து அநுபவித்தல், பரமபதத்திலுள்ளார் அங்கேயிருந்து அநுபவித்தல் செய்யுமத்தனை, ஸம்ஸாரிகளுக்கு நிலமல்ல; ஸம்ஸாரிகளுறங்குகைக்கு ஹேதுவும் வேறே; உணர்ந்தால் அனுபவிக்கைக்கு விஷயமும் வேறே; தமஸ்ஸு அபிபவிக்க உறங்கிக் காலமுணர்த்த உணர்ந்து, விஷய ப்ரவணராவர்கள்; எம்பெருமானுடைய உறக்கமும் உணர்ச்சியும் வேறுபட்டிருக்கும்; எங்ஙனேயென்னில்; ஆஸ்ரித ஸம்ரக்ஷணோபாய சிந்தை பண்ணுகை உறக்கம்; உணருகையாவது அவர்களுடைய ஆர்த்தநாதம் பொறுக்கமாட்டாமை. உணர்ந்தால் அவர்கள் விரோதியைப் போக்கி அவர்களோடே கலக்கை பேராகுமாயிருக்கும். இவர்களுக்கு உறங்கப் பண்ணுவதும், உணரப்பண்ணுவதும், உணர்ந்தால் மறக்கப்பண்ணுவதும், போய் அநுபவிக்கப் பண்ணுவதும் க்ருஷ்ணகுணங்களே. 3." சிந்நம் பிந்நம் " இத்யாதிப்படியே ஜ்ரும்பணாஸ்த்ரம் மோஹநாஸ்த்ரம்; சில மோஹிக்கப்பண்ண, சில துடிக்கப்பண்ணுமாபோலே.

மநோரதம் முடிந்து ஓலக்கம் கிளம்பினபோதே தொடங்கி ஒருவரையொருவர் எழுப்பத் தொடங்கினர்கள். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானும் ஆஸுரப்ரக்ருதிகளாபத்து கண்டு பொறுக்க மாட்டாமே திருத்தப் பார்த்தான். இவர்கள் ராவணனுபத்து கண்டு பொறுக்க மாட்டாமே திருத்தப் பார்க்குமவர்கள்; தந்தாமாபத்து பொறுக்க வல்லவர்களோ?

'செய்யாதன செய்யோம்' என்று இவர்களுடைய ப்ரதிஜ்ஞைதான் ததீயர் முன்னிலையாக எம்பெருமான்பாடே செல்லுகையும், கூட அநுபவிக்கையும்; இது

A பெரியாழ் திரு 5-4-9. B திருவாய் 10-9-9.

ஸ்வரூபமாகையாலும் அவஶ்யம் ஒருவரையொருவர் எழுப்பவேணும். பரத₃ஶைக்கப்பட அநுப₄விக்கக் குழாங்கள் வேண்டாநின்றது. திருவாய்ப்பாடி வ்ருத்தாந்தத்தில் தனி இழியப்போமோ? 1. "வர்ஷாயுதைரித்யாதி₃" 2. "சதுர்முக₂ாயுரித்யாதி₃" A 'இமையோர் தமக்கும் நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னு மீனச் சொல்லே" என்கிறபடியே நித்யஸூரிகளும் B 'எத்திறம்' என்னுமத்தனை. C மயர்வறமதி நலம் பெற்றரும் B 'எத்திறம்' என்னுமத்தனை தான் தன்னை அநுஸந்தி₄த்தாலும் 3: "ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம்" என்று "எத்திறம்" என்னுமத்தனை,

'நாராயணனே நமக்கே பறைதருவான்' (1) என்று முதலிலே திருமந்த்ரத்தை எடுத்தாள். திருமந்த்ரத்தினுடைய மூன்று பத₃த்தாலும் மூன்றர்த்த₂ம் சொல்லுகிறது; முதற்பத₃ம் ஆத்மாவினுடைய ஸ்வாப₄ாவிக ஶேஷத்வத்தைச் சொல்லுகிறது; இரண்டாம் பத₃ம் அதுக்கு எதிர்த்தட்டான அந்யஶேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமும் அஸஹ்யமாம்படி சொல்லுகிறது. மூன்றும் பத₃ம் அந்த ஶேஷத்வத்தினுடைய ஸீமையாவது ததீ₃யஶேஷத்வ பர்யந்தமாயிருக்கை என்கிறது. முதற் பத₃த்திற்சொன்ன அர்த்த₂த்துக்கு த்₃ருஷ்டாந்தபூ₄தர் இளையபெருமாள்; மத்₄யமபத₃த்தில் சொன்ன அர்த்த₂த்துக்கு த்₃ருஷ்டாந்தபூ₄தர் ஸ்ரீப₄ரதாழ்வான்; மூன்றும் பத₃த்தில் சொன்ன அர்த்த₂த்துக்கு த்₃ருஷ்டாந்தபூ₄தர் ஸ்ரீஶத்ருக்₄நாழ்வான். அவன்படி இவர்களது. D "உற்றதுமுன்னடியார்க் கடிமை நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத் துறையம்மானே" E "அவனடியார் நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்க" என்னுமவர்களுடைய பெண்பிள்ளையிறே; ஆகையால் ஒருவரையொழிய ஒருவர்க்குச் செல்லாமை. உணர்ந்தவர்களடையச் சென்று உணராதார் வாசல்களைப்பற்றி எழுப்புகிறார்கள்.

வ்யா:—(புள்ளும் சிலம்பினகாண்) ப₄க₃வத்₃ விஷயத்தில் புதியவளா யிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். "போது விடிந்தபின்பும் எழுந்திராதொழிவதே" என்று ஶிஷ்டகூர்ஹை பண்ணுகிறார்கள். 'விடிந்தமைக்கு ப்ரமாணமென்?' என்ன' நாங்களுணர்ந்து வந்தது 'போராதோ' என்ன 'உறங்கினரன்றோ உணருவார்; அது வார்த்தையோ' என்ன, 'நாங்களேயல்லோம்' நோன்பும் உணர்ச்சியுமறியாதே காலமுணர்த்த பூவலருமாபோலேயும், நாழிகை வட்டில் நீர் நிரம்பினல் விழுமாபோலேயும் இரையறுதியிலே உணரும் புள்ளும் சிலம்பிற்றின' என்கிறார்கள். 'மின்னலே இடித்தாப்போலே உனக்கு முன்னே உணர்ந்தனகிடாய்' என்றுமாம். "இது திருவாய்ப்பாடியன்றோ?" F "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்" G "மரங்களுமிரங்கும்வகை" 4. "பக்ஷிணோபி ப்ரயாசந்தே ஸர்வபூ₄தாநுகம்பிநம்" 5. 'மமத்வஶ்வா நிவ்ருத்தஸ்ய" 6. "விஷயே தே மஹாராஜ" 7. "ராமோ ராமோ ராம இதி" H "காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின்வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மைகொலோ" "ஆண்டாள் பிறந்த ஊரில் பக்ஷிகளுக்குத்தான் உறக்கமுண்டோ" என்று ஆச்சான்பிள்ளை,

மற்றையடையாளம் சொல்லுங்கோளென்ன; (புள்ளரையன்கோயில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ) திருப்பள்ளியெழுச்சியில் ஶங்க₂த்₄வநி கேட்டிலையோ? திருவாய்ப்பாடியிலும் ஒரு திருமுற்றமுண்டோ? என்ன, உண்டு 8. "பா₃லா

A திருவிருத்தம் 98. B திருவாய் 1-3-1. C திருவாய் 1-1-1.
D பெரியதிரு 8-10-3. E திருவாய் 8-10-7. F திருவாய் 6-7-2
G திருவாய் 6-5-9. H நாச் திரு 9-8.

அபி க்ரீடமாநா:'' இத்யாதி, 'ஒருதோளே! தோள்வளையே! ஒருவளையமே! முறுவலே! ஒரு நோக்கமே!' என்று சக்ரவர்த்தித் திருமகன் பக்கலிலே பிள்ளைகளுமகப்பட ஈடுபட்டுச் செல்லாநிற்க, 1. ''ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்'' என்று அவன்தான் பெரியபெருமாளை ஆஶ்ரயிக்குமாபோலே, க்ருஷ்ணனையும் கும்பிடுகொள்வானொரு எம்பெருமானுண்டு. (புள்ளரையன்) அவனுக்கு நிரூபக தர்மம்; 2. ''ராமாநுஜம் லக்ஷ்மணபூர்வஜம் ச'' 3. ''அகஸத்யப்ராதரம்'' ''நாராயணன்'' (1) என்னுமாபோலே. வழியே இழியுமவர்களாகையாலே பெரிய திருவடியை முன்னிடுகிறார்கள். A ''அப்புள்ளின் பின்போன தனிநெஞ்சமே'' என்னக்கடவதிறே.

(வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ) ''சங்கு வெளுக்குங்காட்டில் போதுவிடியுமோ? அழைக்குங்காட்டில் நாமாகவேணுமோ? சங்குமுழங்குங்காட்டில் நமக்குப் புறப்பட வேணுமோ? உங்களுக்கெப்போதும்'' பாவனை அதுவேயிறே.'' B''வெள்ளை விளிசங்கிடங்கையில் கொண்ட விமலன்'' C''பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்''. (பேரரவம்) நீயுமுணருகைக்குப்போரும் சங்கின் த்வநி. ''மஹாராஜர் வாசலிலே சென்று இளையபெருமாள் சிறுநாணேற்றியெறிந்தார்'' என்ன, ஆழ்தாழ்வான் 'தாரையினுடைய ஸ்தநோஷ்மாவைப்பற்றிக் கிடந்த மஹாராஜர் ஆந்த்யமும் தீருகைக்குப் போரும் த்வநி' என்றான்.

(கேட்டிலையோ) 'இதுவும் கேளாதபடியே அங்குத்தையில் அந்யபரதை' என்று பழியிடுகிறார்கள் இவள் துணுக்கென்றெழுந்திருக்கைக்காக. 'போதுவிடிந்து சங்கூதுகிறார்களல்லர்; பணிக்குக் கடவர்களை அழைக்கிறார்கள்' என்ன, 'தூஷணங்கள் தேடிச்சொல்லிப் போதுவிடியப் பார்த்திருப்பதே' என்று இவர்கள் சொல்ல, 'அந்தியம் போதே உணரவேணுமோ? அவர்கள் போதறியாதே சங்கூதினாரத்தனை' என்ன. (பிள்ளாயெழுந்திராய்) ''இந்நோன்புக்குப் புதியையாயிறே நீ உறங்குகிறது; உனக்கு இன்னும் இளமையிறே; அந்தியம்போதுதான் இக்கோஷ்டி உத்தேஶ்யமன்றோ? பகவத் ஸம்ஶ்லேஷத்துக்கும் பாகவதஸம்ஶ்லேஷத்துக்கும் வாசியறியாயீ'' என்ன, ''நீங்களன்றோ பிள்ளைகள், அவன்பாடு கார்யங்கொள்ளவிறே புகுகிறது; விடிய வேணும், நீங்களுத்தேஶ்யைகளாகில் உங்கள் பேச்சேயமையும்'' என்ன; அவளுக்கு இவர்கள்பேச்சே அமையாநின்றது. இவர்களுக்கு அவள் வடிவுகாண வேண்டாநின்றது. D 'இன்பமே நாளும் வாய்க்க'' E ''ஒருகாலும் பிரிகிலேனே'' என்கிற இது ஆண்டாளுக்கு முதலிலே பிறந்து ப்ரக்ருதியாயிருக்கிறது. ''இது காண்கைக்கு மேலே அவனோடே அநுபவிக்க வேண்டாவோ'' என்ன, மாறிமாறி இரண்டும் உத்தேஶ்யமாகக்கடவது. (பிள்ளாய்) எல்லாரும் 4. ''குரவ: கிம் கரிஷ்யந்தி'' என்று போகாநிற்க, சிந்தயந்தி குருதர்ஶனம் பண்ண, 'ப்ரணயித்வத்தில் புதியள்' என்றாற்போலே இங்குமிவளை — 'பிள்ளை' என்கிறது.

''நானோ புதியை? நீங்களன்றோ; காலமறியாதே எழுப்பினிகோள்; உங்களை உணர்த்தினாரார்?'' என்ன, தங்களை உணர்த்தினவர்களைச் சொல்லுகிறார்கள் - (பேய்முலையித்யாதி) ''போது விடிந்தது, பெண்ணே எழுந்திரு'' என்ன, இவள் துணுக்கென்று புறப்படுகைக்காக, ''புகுந்த அபாயம் கேட்டிலையோ? பெரியாழ்வாரோடு குடல்துடக்குடையார்க்கு உறங்க விரகுண்டோ?'' என்கிறார்கள். ''பெற்றதாயுமுதவாத தனிமையிலே பாதிக்கவந்த பூதனையை முடித்துக் காவலாக வைத்த ஶகடம் அஸுரா

A திருவிருத்தம் 3, B நாச் - திரு 5-2, C நாச் - திரு 9-9, D தி வாய் 8-10-7, E பெரியதிரு 7-4-4.

வேகத்தாலே தன்மேலே ஊரப்புக, அதுகட்டழிந்து சிதறும்படியாகத் திருவடிகளாலே உதைத்து, கண்வளர்ந்தருளுகைக்கீடாம்படி பரப்பையுடைத்தான திருப்பாற் கடலிலே அக்கடல் போலேயாய் ஸர்ப்பஜாதிக்கு அஸாத4ாரணமான ஶைத்ய ஸௌகந்த்4ய ஸௌகுமார்யப்ரசுரமான திருவநந்தாழ்வான் மேலே ஜக3த்3ரக்ஷண சிந்தாத்மகமான யோக3நித்3ரையிலே மிகவும் அவகா3ஹித்து, ராமக்ருஷ்ணாத்3யவதார கந்த4மாய், அநிருத்3த4ரூபியாய்க் கண்வளர்ந்தருளுகிற எம்பெருமானை ஸபரிகரமாக அடக்கவற்றான ஹ்ருத4யங்களிலே கொண்டு, ப4க3வத்3கு3ணங்கள் ஸ்ம்ருதமானால் ப்ரவ்ருத்திக்ஷமரன்றிக்கே ஶிதி2லாந்த:கரணரான முனிவர்களும், அவனோடு சேர்ந்து கொண்டல்லது நிற்கமாட்டாதே க்ஷணமாத்ரவிஶ்லேஷத்திலே மாந்துமவரான யோகி3 களும் தங்கள் திருவுள்ளத்திலே கண்வளர்ந்தருளுகிற எம்பெருமானைத் திருப்பள்ளி யுணர்த்துகைக்காக அவனலசாதபடி ஸ்தநந்த4யப்ரஜையை மார்பிலே ஏறிட்டுக் கொண்டு உறங்கும் மாதா அந்த ப்ரஜை உணராமல் க்ரமத்தாலே எழுந்திருக்குமா போலேயும், ஸ்ரீப்ரஹ்லாத3ாழ்வானைப் பெரிய கற்களோடே கட்டி மலையில் நின்றும் கீழே தள்ளுகிறபோது, அவன் தன்னுடைய நோவு பாராதே 'எம்பெருமானுக்கு என் புகுகிறதோ?' என்னும் ப4யத்தாலே தன் கைகளாலே மார்வைப் புதைத்துக்கொண்டு 'பார்த்தருளீர்' என்றாற்போலேயும் அவஹிதராய்க்கொண்டு எழுந்திருந்து 'ஹரி:' என்று, எம்பெருமானுமுணர்ந்து கேட்டாரும் வாழும்படிபண்ணின திருநாம ஸங்கீர்த்தநம், உறங்குவாருடைய படுக்கையிலே வெள்ளம்கோத்தாற்போலே க்ருஷ்ண விஶ்லேஷத்தாலே கமர்பிளந்த எங்கள் ஹ்ருத3யங்களும் நனைந்து தேறிக் குளிரும்படி வெள்ளமிட்டது. அதுகாண் எங்களை எழுப்பிற்று'' என்கிறார்கள்.

(பேய்முலை நஞ்சுண்டு இத்யாதி3) அவர்கள் ப4யப்படுகைக்குச் சொன்னார்கள். 'விரோதி4 போகப்பெற்றதே' என்று இவள் ப4யம் கெடுகைக்கு உடலாய்த்து. (கள்ளச் சகடம்) நம்மை முடிக்கவந்ததென்கை. பேயை ஆராய்ந்து கொள்ளலாம்; தாய் ரக்ஷகமாகவைத்த ஶகடங்கிடீர் என்றஞ்சுகை. (கலக்கழியக் காலோச்சி) அவனகப்பட்டுக் கொண்டு நின்றான். முலை தாழ்த்ததென்று மூரி நிமிர்ந்த திருவடிகள் அத்தை முடித்ததென்கை. அவனாபத்துக்கும் நம்மாபத்துக்கும் ரக்ஷை அவன் திருவடிகள். ஆகையாலேயன்றோ நம் இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் அவற்றையே பற்றுகிறது. (வெள்ளத்தரவில் துயிலமர்ந்த) 'கீழே பிறந்த ஆபத்துக்குத் தப்பிப் போய், திருவநந்தாழ்வான் மேலே சாயப்பெறுவதே' என்கிறார்கள். (வெள்ளம்) திரு மேனியில் ஸௌகுமார்யத்துக்குச்சேர குளிர்த்தியுண்டானபடி. (அரவு) 1.''ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநப4லைகதா4மநி'' ஜ்ஞாநம் — இருவரையுமறிகை. விஜ்ஞானம் — எல்லாக் கைங்கர்யமும் பண்ணுகை. எல்லாவடிமையாகிறது - A ''சென்றால் குடையாம்'' இத்யாதி3. ப்ரக்ருஷ்டம் – தன்னை மறக்கை, ப3லம்—பெரியபிராட்டியாரும் தானும் துகைக்கைக்குப் பாங்கானஶக்தி. திருமேனிக்கு உறுத்தாமைக்குப்படுத்த பரிமளப் படுக்கை. பாம்புக்கு நாற்றம் குளிர்த்தி மென்மைகள் ஸ்வப4ாவம். இனி, திருவிளை யாட்டத்தில் பாம்புக்கு வாசிவைத்துக் கொள்ளுமத்தனை. இவன் மூச்சுப்பட்டு மது4 கைடப4ர்கள் பொடிபட்டுப்போகையாலே, இப்படுக்கையுடையவனுக்கு ப4யப்படவேண்டா வென்கை. (அமர்ந்த) பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கினாலும் உணராமை. (வித்தினை) வித்தை விரைக்கைக்கு நீரிலே சேர்த்தாப்போலே யிருக்கை. காரணமிருக் கக்கார்யமுண்டாகச் சொல்லவேணுமோ? என்கை. இதுக்கு முன்பு பிறந்த பிறவிகள் போராமை இனி பிறக்கைக்கு அடியிட்டிருக்கிறபடி.

A முதல் திருவ 53

(உள்ளத்துக்கொண்டு) மது₄கைடபர்களில்லாத இடம். A பகடலில் விடாய்த்தே A மனக்கடலிலே கொண்டு. (முனிவர்களும் யோகிகளும்) B "வைகுந்தத்தமரரும் முனிவரும்" போலே கு₃ணநிஷ்ட₂ரும் கைங்கர்யபரரும். இளையபெருமாளையும் ஸ்ரீப₄ர தாழ்வானையும்போலேயிருப்பார். உறங்குகிறவர்களையும் உணர்த்துகிறவர்களையும் போலேயிருப்பார். 'திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் யோகிகளுமுண்டோ' என்னில்: அவன்இங்கே வந்தவதரிக்க, பின்பு இடையர் பசுநிரைக் கொட்டில்களிலே படுகாடு கிடப் பர்கள். (மெள்ளவெழுந்து) க₃ர்ப்பி₄ணிகளைப்போலே. 1. "ஹ்ருத₃யேநோத்₃வஹந்" (அரியென்ற பேரரவம்) 'ஹரிஹரி' என்கையாவது — 2."ரக்ஷது த்வாமஶேஷாணும்" என்னும்படியே 'உன்னை நீயே காத்துத்தரவேணும்' என்று திருப்பல்லாண்டு பாடுகை. பேரரவமாவது—ஒருவர் 'ஹரி' என்ன, பஞ்சலக்ஷம் குடியிலும் ஒருத்₃வநியாயெழுகை. முந்துற 3. "அத₂ ஸோSப₄யங்க₃தோ ப₄வதி" என்று இத்தலையில் ப₄யம் கெட்டால் பின்னை அத்தலைக்கு ப₄யப்பட்டுத் திருப்பல்லாண்டு பாடுமத்தனையிறே. பண்டு இழவு பேறுகள் தன்னளவிலே. இப்போது பேறிழவுகள் அவனளவிலே. ருஷிகளும் முந்துற, 4. "நாக₃ பர்யங்கமுத்ஸ்ருஜ்ய" என்று தொடங்கி 5. "க₃தஸ் ஸ்வம் ஸ்தா₂நமுத்தமம்" என்று ப₄யம் கெடுவர்கள். ஸ்ரீப₄ரத்₃வாஜ ப₄க₃வான் பெருமாள் எழுந்தருளுந்தனையும், 6. "வவந்தே₃ நியதோ முநிம்" என்று வயிறெரிந்தபடியே இருந்தான். (உள்ளம் புகுந்து குளிர்ந்து) படுக்கைக்கீழே வெள்ளம் புகுந்தாற்போலே திருநாமம் செவிவழியே புக்கு உடம்பு வவ்வலிட உணர்ந்தோம். 6.

ஸ்வாபதே₃ஶவ்யாக்₂யாநம்—ஆரும்பாட்டு

அவதாரிகை:—ஆரும்பாட்டு. (புள்ளும் இத்யாதி₃) முதற்பாட்டில் ப்ராப்ய ஸ்வரூபத்தையும் ப்ராபக ஸ்வரூபத்தையும் அதி₄காரி ஸ்வரூபத்தையும் ஸங்க்₃ரஹேண அருளிச்செய்து, இரண்டாம்பாட்டில் அவ்வதி₄காரிக்கு ஸம்பா₄விதமான ஸ்வரூபத₄ர்மங்களை அருளிச்செய்து, மூன்றாம்பாட்டில் அவ்வதி₄காரிகளநுஷ்ட₂ாநத்தாலே அவர்களிருக்கும் நாட்டிற்பிறக்கும் ஸம்ருத்₃தி₄யைச் சொல்லி, நாலாம் பாட்டில் அவ்வதி₄காரிகளுக்கு ப₄க₃வத₃நுகூலரானவர்கள் கிஞ்சித்கரிக்கும்படி சொல்லி, அஞ்சாம்பாட்டில்—அவ்வதி₄காரிகளுக்குப் பூர்வாக₄ உத்தராக₄ங்கள் ஸித்₃தோ₄பாயப₃லத்தாலே நெருப்பிலிட்ட பஞ்சுபோலே தன்னடையே நசித்துப் போம்படி சொல்லி, இனி மேல் பத்துப்பாட்டாலே—ப₄க₃வத₃நுப₄வஸஹகாரிகளை எழுப்புகிறபடியைச் சொல்லுகிறது; அதில், இப்பாட்டில்—நூதநமாக ப₄க₃வத் ஸம்ப₃ந்த₄ம் பெற்ற அதி₄காரியை எழுப்புகிறார்கள்.

வ்யா;—(புள்ளும் சிலம்பினகாண்) இப்போது இவள் புள்ளென்கிறது— C "சேர்ப்பாரை"'யில் சொல்லுகிறபடியே ஜ்ஞாநாநுஷ்ட₂ாநங்களாலே ப₄க₃வத் ஸம்ப₃ந்த₄க₄டகரான ப₄ாக₃வதர்களை. ஆகையாலே, ஸத்வோத்தரகாலமான வாறே ஸாத்விகரான ப₄ாக₃வதர்கள் ப₄க₃வத்₃கு₃ணாநுஸந்தா₄ந பூர்வகமாக ப₄க₃வத்கைங்கர்யரூபங்களாய்த் தத்தத்₃வர்ணாஶ்ரமோசிதங்களான காலிகங்களை அனுஷ்டி₂க்கைக்காக ஸர்வதோதி₃க்கமாக எழுந்திருந்து புறப்பட்டார்கள். (பிள்ளாயெழுந்திராய்) 'ப₄க₃வத₃ாராத₄நகாலமாய்த்து எழுந்திராய்' என்ன,

---

A பெரியாழ் திரு 5-4-9, B திருவாய் 10-9-9, C ஆசார்ய 3-1 (சூர்ணை 150).

அவர்களும் 'உங்களாரவாரம் கண்டு எழுந்திருந்தார்கள், வேறு அடையாள முண்டோ?' என்ன; (புள்ளரையன்கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலேயோ) புள்ளுக்கு—பெரியதிருவடிக்கு, அரையன்—அரையனான எம்பெருமானுக்கு ப்ரதிபாதகத்வேந கோயிலான திருமந்த்ரத்தில் உகாரத்தை மத்யத்திலேயுடைத்தாகையாலே பரிஶுத்தமாய் அகிலாத்மவர்க்கத்துக்கும் பகவத்கைங்கர்யோபயுக்தமாய், பகவத்ஸம்பந்த ஜ்ஞாபகமாய், தக்ஷிணாவர்த்தஶங்கதுல்யமான ப்ரணவத்தின் மஹாத்வநியைக் கேட்டிலேயோ? (பேய் இத்யாதி) பேயுண்டு—ப்ரக்ருதி; முலையுண்டு—அஹங்காரமமகாரங்கள், நஞ்சுண்டு—அவைகளாகிற விஷம்; உண்டு—அநுபவித்து; அதாவது—ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமாய்ச் சேதநருக்கு வரும் அஹங்காரமமகாரங்களைப் போக்கி என்றபடி. (கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி) காமக்ரோதங்களையும் நிவர்த்திப்பித்து. (வெள்ளத்து) திருப்பாற்கடலிலே. (அரவில்) திருவநந்தாழ்வான்மேலே. (துயிலமர்ந்த) யோகநித்ரையிலே அந்யபரதையில்லாமல் அமர்ந்திருக்கிற. (வித்தினை) ஜகத்காரணபூதனை. (உள்ளத்துக்கொண்டு) ஹ்ருதயத்தில் த்யாநித்து. (முனிவர்களும் யோகிகளும்) குணாநுபவபரரும், கைங்கர்யபரரும். (மெள்ள) ஸாவதாநமாக. (எழுந்து) ஜாகரூகராய். (அரியென்ற) 'ஹரிர்ஹரி:' என்ற. (பேரரவம்) மஹாத்வநியானது. (உள்ளம் புகுந்து) ஹ்ருதயத்தில் ப்ரவேஶித்து. (குளிர்ந்து) குளிர்ந்தது, எழுந்திராய் இத்யந்வய:. 6.

மூவாயிரப்படி—ஏழாம் பாட்டு

அவ:—ஏழாம்பாட்டு. பகவத்விஷயத்தில் a சுவடறிந்தே b மறந்து கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— c "போது விடிந்தது, எழுந்திராய்" என்ன, d 'விடிந்தமைக்கு அடையாளம் என்?' என்ன; e ஆனைச்சாத்தன் கீசு கீசு என்னாநின்றது — (கீசு) f அநக்ஷரரஸமாயிருக்கை; g "ஓரானைச்சாத்தன் பேசுங்காட்டில் போதுவிடிந்ததாக வேணுமோ?" என்ன, h 'எங்கும் பேசாநின்றது' என்ன, i 'அவற்றைக் i₂ கலக்குகைக்கு நீங்களுண்டே' என்ன, j 'எங்களாலன்று. தாமே உணர்ந்தன' என்ன;

பெ.அ. ஏழாம்பாட்டு. (கீசுகீசு என்று இத்யாதி) a "நாயகப்பெண்பிள்ளாய்" என்றதைப்பற்ற (சுவடறிந்தே என்றது) b "பேய்ப்பெண்ணே" என்றதைக் கடாக்ஷித்து (மறந்து கிடக்கிறாள் என்றது)

c, d, e அப்ருஷ்டோத்தரமாகாமைக்காகப் பாதுராவதாரிகை அருளிச்செய்கிறார் (போது இத்யாதி வாக்யத்ரயத்தாலே.) f 'ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சு' என்று இவ்வளவே அமைந்திருக்க "கீசுகீசு" என்னவேணுமோ? என்ன, அதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் (அநக்ஷரேத்யாதி) அவ்யக்த மதுரதையை ஸூசிப்பிக்கிறது என்று கருத்து. g, h, i, j "எங்கும்" என்றதுக்கு ப்ரஶ்நப்ரதிவசநரூபேண தாத்பர்யம் அருளிச்செய்கிறார்

சி.அ. ஏழாம்பாட்டு (கீசு) c,d,e உள்ளே இருக்கிறவள் அடையாளம் கேட்டாலொழிய "கீசு கீசு" என்று அடையாளம் சொல்லக்கூடாமையாலே கல்பிக்கிறார் (போதுவிடிந்தது இத்யாதி) e ஆனைச்சாத்தன் - பரத்வாஜபக்ஷி. - வலியன்,

ஏழாம் பாட்டு

கீசுகீ சென்(று)எங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

பதவுரை :— பேய்ப் பெண்ணே! — (பகவத்விஷய ரஸத்தை அறிந்தும் மறந்து கிடக்கிற) மதிகேடீ!, எங்கும் — எல்லா திசைகளிலும், ஆனைச் சாத்தன் — வலியன் என்னும் பாரத்வாஜபக்ஷிகள், கீசு கீசு என்று—கீச்சு கீச்சு என்று, கலந்து பேசின—கலந்து பேசிய, பேச்சு அரவம்—பேச்சின் ஒலியை, கேட்டிலையோ—(நீ) கேட்கவில்லையோ?, வாசம் நறும் குழல் — மிக்க பரிமளத்தையுடைய மயிர் முடியையுடைய, ஆய்ச்சியர் — இடைச்சிகளுடைய, காசும் — அச்சுத்தாலியும், பிறப்பும் — முளைத்தாலியும், கலகலப்ப — கலகல வென்று ஒலிக்கும்படியாக, கை பேர்த்து — கைகளை அசைத்து, மத்தினால் — மத்தினாலே, ஓசை படுத்த — ஓசைப்படுத்திய, தயிர் அரவம் — தயிரோசையும், கேட்டிலையோ — (நீ) கேட்கவில்லையோ?, நாயகப் பெண் பிள்ளாய்—பெண்களுக்கெல்லாம் தலைவியாயிருப்பவளே! நாராயணன் மூர்த்தி கேசவனை—நாராயணனுடைய அவதாரமான கண்ணனை, பாடவும்—(நாங்கள்) பாடச்செய்தேயும், நீ — நீ, கேட்டே கிடத்தியோ — (அப்பாட்டைக்) கேட்டும் (இப்படிக்) கிடக்கலாமோ? தேசம் உடையாய் — மிகுந்த தேஜஸ்ஸை உடையவளே!, திற — கதவைத் திறந்துவிடு.

'அதுக்கு அடையாளம் என்?' என்ன; k (கலந்துபேசின பேச்சரவம் கேட்டிலையோ' l 'கலந்து பேசினபடி அறிந்தபடியென்?' என்ன, — பிரிந்துபோனால் பகலெல்லாம் தரிக்கும்படி கலந்து, 'பிரியப் புகாநின்றோம்' என்னும் தளர்த்தி தோற்றப் பேசுகிற மிடற்றோசை கேட்டிலையோ? m 'கேளாமைக்கு அங்கே m_2 ஆரவார முண்டாயாகாதே செல்லுகிறது' என்று மர்மம் சொல்லுகிறார்கள் 'கேட்டிலையோ) என்று. n (பேய்ப்பெண்ணே) o 'இவர்களாகில் இப்படிசொல்லுகையே பணி'

பெ. அ. (ஓரானைச்சாத்தன் இத்யாதி, வாக்யசதுஷ்டயத்தாலே) i_2 கலக்குகையாவது—உறங்கவொட்டாதே கிளப்புகை. k கலந்து - ஸம்ஸ்லேஷித்து. l அநந்தரம் விஸ்லேஷிக்கப் புகுகிறபோது பேசின பேச்சென்று திருவுள்ளம்பற்றி, ப்ரஸ்நப்ரதிவசநரூபேண அபிப்ராயத்தை அருளிச்செய்கிறார் (கலந்து இத்யாதி) m "கேட்டிலையோ" என்றதுக்கு 'அவற்றின் தளர்த்தி ஸ்பஷ்டமாகத் தோன்றும்படி பேசின மிடற்றோசையைக் கேளாதே போனாயோ? கேட்டிருந்தாய்' என்று ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, 'இப்படி ஸ்பஷ்டமான இதுவும் க்ருஷ்ணநுபவத்தில் ஆதரத்தாலே கேளாதிருந்தாயோ' என்று தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (கேளாமைக்கு இத்யாதி) n, o "பெண்ணே" என்னாதே "பேய்ப்

சி. அ. k பேசின அரவமென்னாதே "பேசின பேச்சரவம்" என்றதுக்குத் தாத்பர்யம் (கலந்து பேசினபடி இத்யாதி) m 'கேட்டிலையோ' என்றதுக்கு 'கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ' என்று கீழ்ப்பதத்தோடே கூட்டி அருளிச்செய்து, 'கேட்டிலையோ' என்றதுக்கு அர்த்தாந்தரம் (கேளாமைக்கு அங்கே இத்யாதி) m_2 (ஆரவாரம்) க்ருஷ்ண ஸம்ஸ்லேஷம்

என்று பேசாதே கிடக்க, o$_2$ 'அறிந்துவைத்துக் காற்கடைக்கொள்வாயே! மதி கேடீ!' என்கிறுர்கள். p இவர்களுக்கு அறிவாகிறது — ப$_4$க$_3$வத்$_2$விஷயத்திலும் ததீ$_3$யவிஷயம் நன்றென்று அறிகை. அத்தை அறிந்துவைத்துப் பேசாதே கிடக்கையாலே சொல்லுகிருர்கள்.

q என்னறியாமை சொல்லாதே விடிந்தமைக்கு அடையாளஞ் சொல்லுங்கோளென்ன; தயிர் கடைகிற ஓசை கேட்டிலேயோ? — (காசும் பிறப்பும்) r அச்சுத்தாலியும் s முளைத்தாலியும். (கலகலப்ப) கடைகிறபோதை வ்யாபாரத்தாலே t, A ''அரவூறுசுலாய் மலைதேய்க்குமொலி'' என்னுமாபோலே த்$_4$வனிக்கை. u (கைபேர்த்து) v தயிரின் பெருமையாலும் இவர்கள் ஸௌகுமார்யத்தாலும் மலைபேர்த்தாற்போலே கைபேர்க்கப் போகாதபடி. w க்ருஷ்ணன் ஸந்நிதி$_4$யில் லஜ்ஜையாலே கைசோர்ந்தது என்னவுமாம்; x அன்றியே, அவன்தானே ஸந்நிஹிதனாய் நின்று ''தயிரை மோராக்கவொட்டேன்'' என்று கையைப்பற்றி நாலுகையாலே என்றுமாம். B ''மோரார் குடமுருட்டி'' என்னக்கடவதிறே. y (வாசம் இத்யாதி$_3$) z ஆயாஸத்தாலே மயிர்முடி நெகிழ்ந்து பரிமளந்தானே

ஜீ. ப. அ. பெண்ணே'' என்றதுக்கு ப்ரஸக்தி பூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (இவர்களாலே இத்யாதி$_3$) o$_2$ தாங்கள் விஶ்லேஷ து$_3$:க்கி$_2$களாகையாலே அவற்றின் மிடற்றோசையிலே மும்தளர்த்தியை ஆரோபித்துச் சொல்லுகிருர்களித்தனை: இது விடிவுக்கு அடையாளமன்றென்று பேசாதே கிடந்தாள் என்று இப்படி ஸம்போ$_3$தி$_4$க்கிருர்களென்று இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம் அருளிச்செய்திருக்கிருர் (அறிந்துவைத்து இத்யாதி$_3$) p மதியை இன்னதென்று நின்றுகொண்டு, மதிகேட்டை விவரிக்கிருர் (இவர்களுக்கு இத்யாதி$_3$)

q ''காசும்'' இத்யாதி$_3$க்கு ப்ரஶ்நோத்தரரூபேண ஸங்க்$_3$ரஹமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (என்னறியாமை இத்யாதி$_3$) r அச்சுத்தாலியாவது — அச்சாலே போட்டு அடித்து மாலையாகக் கோத்துக் கழுத்திலே த$_4$ரித்த ஆப$_4$ரணம். s முளைத்தாலியாவது —முளைமுளையாகப்பண்ணிக் கோத்து த$_4$ரித்த ஆப$_4$ரணம். t அரவு—வாஸுகி. u.v,w.x. ''கை'' என்றது—மத்தைப்பற்றின கையென்ருய், பேர்க்கை—சலிப்பிக்கையாய், அதிலருமைக்கு நாலு ஹேதுக்களை அருளிச்செய்கிருர் (தயிரின் இத்யாதி$_3$ வாக்யத்ரயத்தாலே) x நப்பின்னைப் பிராட்டி திருமாளிகையிலே க்ருஷ்ணன் உறங்குகிறதாகவும் தாங்கள் ஒருவரையொருவர் எழுப்பி அவனையும் எழுப்புகிறதாகவும் வருகிற ப்ரகரணத்தில் க்ருஷ்ணன் கையைப்பிடித்து நாலுகிறது சொல்லும்படி எங்ஙனேயென்ன; அவன் விசித்ரஶக்தியோக$_3$த்தாலே அகங்கள்தோறும் நாநாப்ரகாரேண வர்த்தித்துக்கொண்டிருப்பனென்று இவர்களறிந்தபடியாலே இப்படி சொல்லுகிருர்களென்னுமது கூடுமென்று கொள்ளக்கடவது. y,z ''வாசம்'' என்றும் ''நறு'' என்றும் பரிமளத்தைச் சொல்லுகையால், அதன் மிகுதியைத்

ஜீ. ஆ. r (அச்சுத்தாலி) வட்டத்தாலி. s (முளைத்தாலி) நீண்ட தாலி.

ஆ. அ. ஏழாம் பாட்டு (கீசுகீசென்றித்யாதி$_3$) r அச்சுத்தாலி வட்டணித்திருக்கும்; s முளைத்தாலி நீளமாயிருக்கும்.

A திருவாய் 7-4-2. B சிறியதிரு 33.

புறப்பட்டு ப்ரவஹிக்கிறபடி. a (மத்தினுலோசைபடுத்த a₁ தயிரரவம் கேட்டிலேயோ) b மந்த₃ரத்தாலே கடலைக் கலக்கினுற்போலே b₁ இந்த கோ₄ஷமும் செவியில் பட்டதில்லேயோ? c 1. "உத்₃கா₃யதிநாமரவிந்த₃லோசநம் வ்ரஜாங்க₃நாநாம் தி₃வமஸ்ப்ருஶத் த்₄வநி: l c₁ த₃த்₄நஶ்ச நிர்மந்த₂ந ஶப்₃த₃ மிஶ்ரிதோ நிரஸ்யதே யேந தி₃ஶாமமங்க₃ளம் ll" என்று c₃ அவன் கண்ணழகிலே தோற்றுப் பாடுகிற த்₄வநியும் கடைகிற தயிரோசையும் c₄ ஆப₄ரணவோசையும் கிளர்ந்து ஊர்த்₄வலோகங்களிலே சென்று கிட்டுவதான ஓசை உன் செவியிற் படாதொழிவதே!

d இவ்வூரில் A "முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெய்" d₁ என்று இரவும் பகலும் இடைவிடாதே தயிர்கடைகை ஸ்வப₄ாவமன்றோ? என்று பேசாதே கிடக்க — e (நாயகப் பெண்பிள்ளாய்) f "இப்பெண்களுக்கெல்லாம் நிர்வாஹகையானபடி இதுவோ?" என்கிறுர்கள்; g சொல்லிற்றுக்கெல்லாம் மறுமாற்றம் சொல்லிக்கிடக்கிறது — உன்னுடைய g₁ ஐஶ்வர்யச்செருக்காலே என்னவுமாம், h "பேய்ப்பெண்ணே" என்றதோடு "நாயகப் பெண்பிள்ளாய்"

பெ.அ. திருவுள்ளம்பற்றி ஸஹேதுகமாக அருளிச்செய்கிறுர் (ஆயாஸத்தாலே இத்யாதி₃) a, b "ஆய்ச்சியர்—ஓசைபடுத்த தயிரரவம்" என்னவே,மத்து அர்த்த₂ஸித்₃த₄மாயிருக்கவும், விஶேஷித்ததுக்குப் புந:ப்ரதீகக்₃ரஹணபூர்வகம் த்₃ருஷ்டாந்தமுகே₂ந தாத்பர்யம் அருளிச்செய்கிறுர் (மத்தினுல் இத்யாதி₃) b₂ கீழ் எடுத்த ப்ரதீகஶேஷத்துக்கு ப₄ாவம் அருளிச்செய்கிறுர் (இந்த இத்யாதி₃) a₂ அரவம்—ஶப்₃த₃ம். c "காசும் பிறப்பும்" இத்யாதி₃யிற் சொன்ன அர்த்த₂ங்களுக்கும் ஸம்வாத₃ம் காட்டாநின்றுகொண்டு அதுக்கு அர்த்த₂ம் அருளிச்செய்கிறுர் (உத்₃கா₃யதீநாம் இத்யாதி₃) 1, "வ்ரஜாங்க₃நாநாம் த₃த்₄நஶ்ச—த்₄வநி: நிர்மந்த₂நஶப்₃த₃மிஶ்ரிதஸ்ஸந்—தி₃வமஸ்ப்ருஶத்" இத்யந்வய:. நிர்மந்த₂நத்தில்—கடைகிற போதையில் உண்டான ஶப்₃த₃மாவது—பூ₄ஷணத்₄வநியென்று திருவுள்ளம். d "தயிரரவம் கேட்டிலேயோ" என்று அடையாளமாகச்சொன்ன அநந்தரமே இவளெழுந்திருந்தாளாகில் மேலே "கேட்டேகிடத்தியோ" என்னக்கூடாமையாலே எழுந்திராமை ஸித்₃த₄மாகையால் அதுக்கு ஹேதுவாக இவ்வடையாளத்தையும் அந்யத₂ாகரித்தாளென்று உத்தரார்த்த₂த்துக்கெல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறுர் (இவ்வூரில் இத்யாதி₃) d₂ (என்று) என்றது—என்று சொல்லியபடி என்றபடி. n, e, h கீழே "பேய்ப்பெண்ணே" என்றுசொல்லிவைத்து, இங்கே "நாயகப் பெண்பிள்ளாய்" என்று தங்களுக்கு ஶேஷியாகச்சொல்லி வெறுக்கக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறுர் (பேய்ப்பெண்ணே இத்யாதி₃) h₂ (அகவாயில் ப₄ாவமொன்ருகையாலே) என்றதுக்கு 2. "ப்ரணயாச்சாபி₄மாநாச்ச பரிசிக்ஷேப

சி. அ. c₃ (அவன் கண்ணழகில்) என்றருளிச்செய்தது ஶ்லோக தாத்பர்யம். c₂, c₄ "த₃த்₄நஶ்ச" என்ற சஶப்₃த₃த்தாலே ஆப₄ரணத்₄வநியைச் சொல்லுகிறது.

e, f, g "நாயகப்பெண்பிள்ளாய்" என்றதுக்கு இரண்டு பொருள்—நிர்வாஹகை என்னுதல், ஐஶ்வர்யயுக்தை என்னுதல். g இரண்டாமர்த்த₂த்தில் ஐஶ்வர்யமாவது க்ருஷ்ணநுப₄வம். n, e, h "பேய்ப் பெண்ணே" என்று வைத்து. "நாயகப் பெண் பிள்ளாய்"

ரு. அ. c₂, c₄ "த₃த்₄நஶ்ச" என்ற 'ச' ஶப்₃த₃த்துக்குத் தாத்பர்யம் (ஆப₄ரணஓசை) என்றது. e, h "நாயகப்பெண்பிள்ளாய்" என்றதுக்கு இப்படி வ்யங்க்₃யமாகச்

A பெரியாழ்திரு 3-1-5

என்றதோடு வாசியில்லையிறே, h2 அகவாயில் h3 ப4ாவ(ப3ந்த4)ம் ஒன்றுகையாலே. i என்றவிடத்திலும் i2 வாய்திறவாமையாலே — j (நாராயணன் மூர்த்தி கேசவனைப்பாடவும் நீ கேட்டே கிடத்தியோ) k நீ எழுந்திருப்புதியென்று நாங்கள்பாட, அதுவே k2 குறங்குகுத்தக்கிடந்து உறங்குகிருயோ? l(நாராயணன்) முகம் தோற்றுமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன். m (மூர்த்தி) தன்னுடைய ஸௌஶீல்யத்தாலே m2 பிறந்தது. n (கேசவனை) o கண்ணுக்குத் தோற்ற நின்று நம் விரோதி4களைப் போக்குமவனை. (பாடவும்) இப்படி வாத்ஸல்யத்தையும் ஸௌஶீல்யத்தையும் ஆஶ்ரிதவிரோதி4 நிரஸநத்தையும் பேசினவிடத்திலும், பின்னையும் இவர்கள் பேச்சே தனக்கு த4ாரகமாய்க் கிடக்கையாலே, 'கேட்டேகிடத்தியோ' o என்கிருர்கள் p இவள் துணுக்கென்

பெ.அ. ராக4வம்'' என்கிறபடியே ''பேய்ப்பெண்ணே'' என்கிறபோதும் தங்களுக்கு ஶேஷி யென்னும் நினைவுண்டாய் வெறுத்தார்களென்று கருத்து.

i மேலுக்கு அவதாரிகை (என்ற விடத்திலும் இத்யாதி3) i2 ''வாய்திறவாமையாலே'' என்ற அநந்தரம், ''சொல்லுகிருர்கள்'' என்று ஶேஷம். j, k ''பாடவும்'' என்ற சகாரத்தாலே எழுந்திருக்கைக்கு ஹேதுவாகத் தோன்றுகையாலும் ''கேட்டே'' என்ற ஏகாரத்தாலே அதுவே கிடக்கைக்கு ஹேதுவாய்த் தோன்றுகையாலும் அருளிச்செய்கிருர் (நீ எழுந்திருப்புதி இத்யாதி3) k2 குறங்கு—துடை. l, m. n, o, o2 ''நாராயணன், மூர்த்தி. கேசவன்'' என்ற மூன்று பத3ங்களைத் தனித்தனியே ப்ரத4ாநமாக்கி, நாராயண ஶப்3த3த்துக்கு ப3ஹுவ்ரீஹ்யர்த்த2ம் விவக்ஷித்து, தனித்தனியே பத3ார்த்த2ங்களை அருளிச்செய்யா நின்றுகொண்டு உக்தார்த்த2த்தைத் தொகுத்து அருளிச்செய்கிருர் (நாராயணனென்று தொடங்கி, என்கிருர்கள் என்னுமளவும்) m2 (பிறந்தது) என்றது—பிறந்தவன் என்றபடி, o 1. ''யஸ்மாத் த்வயைவ து3ஷ்டாத்மா ஹத: கேஶீ ஜநார்த்த3ந | தஸ்மாத் கேஶவநாமா த்வம் லோகே க்2யாதிம் க3மிஷ்யஸி ||'' என்கிற நிருக்தியைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிருர் (கண்ணுக்கு இத்யாதி3) 2. ''கேஶிஶப்3த3 உபபதே3 'வஷ ஹிம்ஸாயாம்' இதி த4ாதோ: 'அந்யேஷ்வபி த்3ருஶ்யதே' இதி ட3ப்ரத்யயே 'அசோந்த்யாதி3டி' இதி டிஸம்ஜ்ஞகஸ்ய அஷ் இத்யேதஸ்ய லோபே ப்ருஷோத3ராதி3த்வாத் இகாரஸ்ய அகாரே கேஶவ ஶப்3தே3ா நிஷ்பந்ந:'' என்று ப்ரக்ரியை கண்டுகொள்வது. p 'நாராயணன் மூர்த்தி' என்ற இரண்டையும் விஶேஷணமாக்கி, கேசவபத3த்தை விஶேஷ்யமாக்கி, நாராயணபத3த்துக்குத் தத்புருஷார்த்த2த்தைத் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யாந்தரம்

சி.அ.என்னக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிருர் (பேய்ப்பெண்ணே இத்யாதி3) h2 (அகவாயில் ப4ாவமொன்றுகையாலே) என்றது ஸ்நேஹத்தாலே வந்த கோபமொன்றுகையாலே என்றபடி.

கு. அ. சொல்லுகிருர்கள் என்று நிர்வஹிக்கிறதென்? ஶ்லாக்4யதை தோற்ற ஸ்தோத்ரம் பண்ணுகிருர்கள் என்றுலாகாதோ? என்ன, ஆகாது என்று அருளிச்செய்கிருர் (பேய்ப் பெண்ணே என்றதோடு இத்யாதி3) ஆகையாலே வ்யங்க்3யமே தப்பாதென்றபடி. h3 ப4ாவ ப3ந்த4மென்றது—ஸ்நேஹத்தாலே வந்த கோபம் என்றபடி. j, k ''நாராயணன் மூர்த்திகேசவனைப்பாடவும் நீ'' என்றதுக்கு இரண்டு பொருள் அதாவது துணுக்கென்று எழுந்திருக்கைக்காக என்னுதல், 3. ''ப4ர்த்தாரம் பரிஷஸ்வஜே''என்கிறபடியே அணைக்கைக்குப்புறப்படுதியா என்னுதல்.

றெழுந்திருக்கைக்காக. ‘நிருபாதி$_4$கஸ்வாமியான ஸர்வேஶ்வரன் ஆஶ்ரிதவத்ஸலனாய் க்ருஷ்ணனாய் வந்து அவதரித்தவிடத்திலே கேஶி வந்து நலியப்புக, ‘அவனை க்ருஷ்ணன் கொன்றான்காண்’ என்ன, அதுக்கும் பேசாதே கிடந்தாள். (பாடவும் நீ கேட்டே கிடத்தியோ) q அவனுடைய விஜயத்தைக் கேட்டு, கேஶி வந்து நலியப்புக்கான் என்கிற துணுக்கும் கேட்டு, க$_3$ரவத$_4$ாநந்தரம், 1. ‘‘ப$_4$ர்த்தாரம் பரிஷஸ்வஜே’’ என்று சக்ரவர்த்தித் திருமகனை ஸ்ரீஜநகராஜன் திருமகள் அணைத்தாற்போலே, நீயும் க்ருஷ்ணனை அணைக்கப் புறப்படுவாயோ? என்று சொன்னோம்; அதுவும் உனக்கு க்ருஷ்ணவிரோதி$_4$ப$_4$யம் தீர்ந்து மார்பிலே கைவைத்து உறங்கலாம்படியாய்விடுவதே! என்றுமாம்.

r (தேசமுடையாய் திற) s உன்னைக் காணப்பெறாதே அந்த$_4$காரமாய்க் கிடக்கிற எங்களுக்கு இத்தைத் திறந்து புறப்பட்டு, உன்னுடைய நிரவதி$_4$க தேஜஸ்ஸாலே வெளிச்செறிப்பிக்கைக்காகவும், உன்னுடைய அழகு காண்கைக்காகவும் நீயே வந்து திற. (தேசமுடையாய் திற) t இவள் t$_2$ பின்னையும் பேசாதே கிடக்கையாலே, ஜாலக ரந்த்$_4$ரத்தாலே பார்த்தார்கள்; இவளுக்கு க்ருஷ்ண விஜயாநுஸந்த$_4$ாந ப்ரீதியாலே வடிவிற் பிறந்த புகரைக் கண்டு t$_3$ ‘கிண்ணகத்தை அணைசெய்யாதே t$_4$ வெட்டிவிடாய்’ என்கிறார்களாகவுமாம். 7.

பெ. அ. அருளிச்செய்கிறார் (இவள் துணுக்கு இத்யாதி$_3$) q விவரணம் (அவனுடைய இத்யாதி$_3$) r,s. ‘‘கிடத்தியோ’’ என்கையாலே—எழுந்திருந்து வரச்சொல்லுகை அர்த்த$_2$ஸித்$_3$த$_4$மாகையாலே, கதவுதிறவாமல் வரக்கூடாமையால் அதுவும் அர்த்த$_2$ஸித்$_3$த$_4$மாயிருக்க ‘‘தேசமுடையாய்திற’’ என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உன்னை இத்யாதி$_3$) t முன்பு தாங்கள் கண்டிருக்கும் ஸ்வாப$_4$ாவிக தேஜஸ்ஸைப்பற்ற ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, கேசவனைப் பாடினபின்பு பிறந்த தேஜஸ்ஸாகத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (இவள் பின்னையும் இத்யாதி$_3$) t$_2$ (பின்னையும்) என்றது — ‘‘கிடத்தியோ’’ என்ற அநந்தரமும் என்றபடி. t$_3$ (கிண்ணகத்தை அணைசெய்யாதே) என்றது — இப்போதையில் புகரின் ப்ரவாஹத்தைக் கதவால் அணைசெய்யாதேகொள் என்றபடி. t$_4$ ‘‘வெட்டி விடாய்’’ என்றது—கதவைத் திறந்துவிடாய் என்றபடி.

‘‘ஆனைச்சாத்தன்—கீசுகீசென்று எங்கும்—கலந்துபேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே! வாசநறுங்குழலாய்ச்சியர்—காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து—மத்தினாலோசை இத்யாதி$_3$’’ அந்வயம் கண்டுகொள்வது. ஏல் இத்யாதி$_3$—பாத$_3$பூரணம். 7.

சி. அ. r, s, t ‘‘தேசமுடையாய்’’ என்றதுக்கு இரண்டு பொருள். s முந்தினது ஸௌந்த$_3$ர்ய லாவண்யங்கள்; t இரண்டாவது க்ருஷ்ணாநுப$_4$வத்தாலே வந்த தேஜஸ்.

இப்பாட்டில் சொல்லுகிற ஸ்வாபதே$_3$ஶம்:— ப$_4$க$_3$வத்$_3$ விஷயத்திலே ஜ்ஞாதமான அர்த்த$_2$ம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானால் தங்கள்படியாலே 2. ‘‘பே$_3$ாத$_4$யந்த: பரஸ்பரம்’’ பண்ணி ஸ்ம்ருதிவிஷயமாம்படி அறிவிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வபூ$_4$ர்வம் என்கிறது. 7.

ஆறாயிரப்படி — ஏழாம்பாட்டு

அவ :— ஏழாம்பாட்டு. ஆறும்பாட்டில், ப4க3வத்3 விஷயத்தில் புதியாளொருத்தியை எழுப்பிற்று; இதில், பழையளாயிருந்துவைத்து, புதுமைபா4விக்கிறுளொருத்தியை எழுப்புகிறார்கள். சிலரை எழுப்பினால் ''எழுந்திருந்தவர்களைக் கொண்டு க்ருஷ்ணன்பாடேறப் போகிறோம்'' என்னுமவர்களன்றிறே; ''எல்லார்க்கும் நன்மை வேணும்'' என்றிருக்குமவர்களிறே. ப4க3வத்ஸம்ப3ந்த4ம் மெய்யாகில் தங்கள் வயிற்றில் பிறந்த ப்ரஜையினுடைய ஸம்ருத்3தி4க்கு உகக்குமாபோலே, எல்லாருடைய ஸம்ருத்3தி4க்கும் உகக்கவேணுமிறே. A ''அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்று கொலோ'' என்றும், B ''அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை'' என்றும் சொல்லுகிறபடியே - இக்குழாத்திலினிமை உண்டானாலிறே அங்கும் இனிமையுண்டாவது. ஆட்கொண்டவில்லிஜீயர் எழுந்தருளாநிற்கச்செய்தே, நஞ்ஜீயர் தண்டனிட்டுநிற்க; ''ப4க3வத்3விஷயத்தில் ருசி நமக்கு மெய்யாகப் பிறந்ததில்லைகாணும்'' என்றருளிச்செய்ய; ''உம்மைப்போலே ஆசார்யவான்களுண்டோ? இங்ஙனே அருளிச்செய்வானென்?'' என்ன; ''ப4க3வத்3விஷயத்திலே மெய்யே ருசியுண்டென்றிருக்கையாவது - பா4க3வதர்களைக்கண்டால் உகக்குமன்றுகாணும்'' என்றருளிச்செய்தார். இப்படி எல்லார்க்குமொக்க இந்நன்மை உண்டாகவேணுமென்று எல்லாரையுங் கூட்டிக்கொண்டு ஒருத்தி வாசலிலேசென்று, ''போதுவிடிந்ததுகாண், எழுந்திராய்'' என்ன; ''விடிந்தமைக்கு அடையாளமென்?'' என்ன, 'ஆனைச்சாத்தனுடைய த்4வநி அடையாளமன்றோ' என்கிறார்கள். கீழ்ச்சொன்ன ''முனிவர்களும் யோகிகளும்'' (6) என்றதோடு, ''ஆனைச்சாத்தன்'' என்றதோடு, அவர்கள் ''ஹரிர்ஹரி:'' என்றதோடு, இவை ''கீசுகீசு'' என்றதோடு வாசியற எல்லாம் உத்3தே3ஶ்யமாயிருக்கிறபடி,

வ்யா :— (கீசுகீசு) இது அநக்ஷரரஸமாயிருக்கிறபடி. 'ஆனைச்சாத்தனுடைய த்4வநி விடிவுக்கடையாளமன்றோ?' என்ன; 'ஒரு ஆனைச்சாத்தனுணர்ந்தவிது விடிவுக்கு அடையாளமாகப் போருமோ?' என்ன; ''எங்கும்'' என்று இவர்கள் சொல்ல; 'எங்கும் நீங்களில்லையோ அவற்றையுணர்த்துகைக்கு?' என்ன; 'நாங்களுணர்த்தவுணர்ந்ததன்று, கலந்து பேசின பேச்சுக்காண்' என்ன; 'இராவெல்லாமுறங்கிப் போதுவிடிந்தவாறேயோ கலப்பது?' என்று அவள் சொல்ல; 'இரவெல்லாங்கலந்து, மரக்கலமேறுமவன் மீண்டுவருமளவும் ஜீவநமேற்றிக்கொண்டு போமாபோலே, பகல் முப்பது நாழிகைக்கும் விளைநீரடைத்துக் கொண்டு ''பிரிவு வருகிறது'' என்னும் தளர்த்திதோற்றப் பேசுகிற பேச்சு விடிவுக்குடலன்றோ?' என்கிறார்கள். (கேட்டிலையோ) 'இத்த்4வநிகேளாதபடியோ அங்கோடுகிறது?' என்கிறார்கள். 1, ''நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய'' என்கிறபடியே இவற்றின் த்4வநியைக் கேட்டால் கடுக க்ருஷ்ணன் பக்கலிலே சென்று நிற்கவேண்டவோ? என்ன;

A திருவாய் 2-3-10. B திருவாய் 10-9-11.

'மாளிகைகளிலே ஏத்தாளிகள் வம்ஶாவளி சொல்லக்கேட்டு எழுந்திருக்கு மவர்கள், பக்ஷிகளினுடைய பேச்சுக்கேட்டு எழுந்திருக்கும்படியாவதே! இதென்ன து₄ர்மஹாநி!' என்று அவள் வெறுத்துக் கிடக்க, (பேய்ப்பெண்ணே) என்கிறார்கள். 'உன்னுடைய அந்யத₂ாஜ்ஞாநமிருந்தபடியென்! ப₄க₃வத்ஸம்ஶ்லேஷம் ப₄ாக₃வத ஸம்ஶ்லேஷபர்யந்தம் என்றறிந்துவைத்து ஆறியிருப்பதே!' என்று க்ஷேபிக்க, 'போது விடியாதிருக்கச்செய்தே ''விடிந்தது'' என்று சொல்லுகிற நீங்களன்றோ பேய்ப்பெண்கள்' என்ன; 'போது விடியச்செய்தே ''விடிந்ததில்லை'' என்று சொல்லுகிற நீயன்றோ பேய்ப்பெண்' என்ன; 'இது போதாது, வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன; 'இவ்வூரில் தயிர்கடைகிற ஓசை விடிவுக்கு அடையாளமன்றோ?' என்கிறார்கள். காம்யத்தில் ப₂ல ஶ்ரத்₃தை₄யில்லையாகில் தவிரலாம்; நித்யகர்மம் அவஶ்யம் அநுஷ்டி₂த்தே அறவேணும், அநுஷ்ட₂ா நத்துக்குப் ப₂லமில்லை, அகரணே ப்ரத்யவாயமுண்டு; அப்படியே ஜாத்யுசிதமான நித்யாநுஷ்ட₂ாநமன்றோ இவர்களுக்குத் தயிர் கடைகை; 'இது விடிவுக்கடையாளம் போராதோ?' என்கிறார்கள். (காசும்பிறப்பும்) அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும். (கலகலப்ப) ஆப₄ரணத்₄வநியும் இவர்களுக்கு உத்₃தே₃ஶ்யமாயிருக்கை. (கைபேர்த்து) தயிர் ஸம்ருத்₃தி₄யாலும், தங்களுடைய ஸௌகுமார்யத்தாலும், க்ருஷ்ணனுடைய அஸந்நிதி₄யாலே கைசோருகையாலும், ஸந்நிதி₄யில் ''தயிரை மோராக்கவொட்டேன்'' என்று பிடித்து வலிக்கையாலே கடைகையிலுண்டான அருமையைச் சொல்லுகிறது. (வாசநறுங்குழல்) கடைகிற ஆயாஸத்தாலே மயிர்முடி கட்டு நெகிழ்ந்து முடைநாற்றத்தை மறைக்கும்படியாய்த்து பரிமளம் வெள்ளமிடுகிறபடி. A ''தெருவெல்லாங் காவிகமழ் திருக்காட்கரை'' என்னக்கடவதிறே. (ஆய்ச்சியர்) ஒருத்தியன்றோ என்று சொல்லவொண்ணாதபடி இருந்ததேகுடியாக. (மத்தினால் ஓசைபடுத்த தயிரரவம்) மந்த₂ரத்தாலே கடலைக்கடைகிறபோது, B ''அரவூறுசுலாய் மலைதேய்க்குமொலி'' என்றபடி. 1. ''உத்₃கா₃யதீநாமரவிந்த₃லோசநம் வ்ரஜாங்க₃நாநாம் தி₃வமஸ்ப்ருஶத்₃த்₄வநி: । த₃த்₄நஶ்ச நிர்மந்த₂நஶப்₃த₃மிஶ்ரிதோ நிரஸ்யதே யேந தி₃ஶாமமங்க₃ளம் ॥'' க்ருஷ்ணனுடைய கண்ணழகுக்குத் தோற்றுப்பாடுகிற இடைப்பெண்களுடைய த்₄வநி, தயிர்கடைகிற ஓசையோடே கலசி பரமபத₃த்திலே சென்று த்₄வனித்தது, அப்போது, ''க்ருஷ்ணகு₃ணங்கள் பூ₄மியிலே நடையாடாநிற்க, மலையிலேயிருப்பாரைப்போலே உயர இருப்பதே!'' என்று அவர்களை வசைபாடினாற்போலேயிருந்தது. 2. ''விக்ரேதுகாமா கில கோ₃பகந்யா முராரிபாத₃ார்ப்பிதசித்தவ்ருத்தி: । த₃த்₄யாதி₃கம் மோஹவஶாத₃வோசத் கோ₃விந்த₃ தா₃மோத₃ர மாத₄வேதி ॥'' — முரனைக்கொன்ற வீரத்திலே தோற்று க்ருஷ்ணன் பக்கலிலே ப₃த்₃த₄ப₄ாவையாயிருக்க, 'இதினின்றும் இவளை மீட்கும் விரகேதோ' என்று பார்த்து, தாயார், பாலையும் தயிரையும் நெய்யையுங்கொடுத்து ''இத்தை விற்றுக்கொண்டுவா'' என்று சொல்ல; விற்கப்போனவிடத்திலும் நினைவு இங்கேயாகையாலே, ''கோ₃விந்த₃னைக் கொள்ளுங்கோள், க்ருஷ்ணனைக் கொள்ளுங்கோள், ஶ்ரிய:பதியைக் கொள்ளுங்கோள்'' என்று கூறிக்கொண்டு திரிந்தாள்.

A திருவாய் 9-6-1, B திருவாய் 7-4-2

(ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலேயோ) இது கேளாதபடி உள்ளேயும் ஒரு தயிருண்டோ கடைகிறது? A ''கெண்டை இத்யாதி, தாமோதரா மெய்யறிவன் நானே.

''பண்டுபோலேயோ? க்ருஷ்ணன் பிறந்த பின்பு 'வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்' (3) ஆகையாலே, அறுபதுநாழிகையும் கறப்பது கடைவதாய்ச் செல்லுமத்தனையன்றோ? இது விடிவுக்குடலாமோ?'' என்று அவர்கள் நிருத்தரராம் படிசொல்ல – (நாயகப்பெண்பிள்ளாய்) என்கிறார்கள். ஆகையாலே சொன்னதுக்கெல்லாம் மறுமாற்றம் சொல்லிக்கிடக்கிறது உன் செல்வக்கிடப்பிறே. ''பேய்ப் பெண்ணே'' என்றதோடு ''நாயகப்பெண்பிள்ளாய்'' என்றதோடு வாசியற்றிருக்கிறது. ஒரு மிது₂நமாய்ப் பரிமாறுநின்றால் தாழச்சொன்னபோதும் உயரச் சொன்னபோதுமாயிறேயிருப்பது. 1.''நித்யாபி₄வாஞ்சி₂த பரஸ்பர நீசப₄ாவை:'' ''ஶேஷபூ₄தர் ஶேஷிபக்கல் சொல்லுவதொன்றுண்டோ இதுக்கெல்லாம்? அழகிதாய் நிர்வாஹகையானாய்'' என்று இவர்கள் பேசாதிருக்க; ''நான் உங்களுக்கடிமையன்றோ; திறக்கிறேன்'' என்ன; இவள் துணுக்கென்று எழுந்திருந்து கடுகத் திறக்கைக்காக, கேசிவத₄வ்ருத்தாந்தத்தை ஸ்மரிப்பிப்போமென்று அத்தை ப்ரஸங்கிக்கிறார்கள், பெரியாழ்வார் பெண்பிள்ளையாகையாலே துணுக்கென்று உணருமென்று. (நாராயணன்மூர்த்தி கேசவனைப்பாடவும்) ''கண்ணுக்குத்தோற்றாதே நின்று ரக்ஷிக்கும் ஸர்வேஶ்வரன் ஆஶ்ரிதவத்ஸலனாய் இங்கே வந்து அவதீர்ணனானான்; அங்கே கேசி வந்து கிட்டினான்காண்'' என்கிறார்கள். அதுதன்னை விஜயாந்தமாக அநுஸந்தி₄த்துப் பேசாதே கிடந்தாள். — (நீ கேட்டேகிடத்தியோ) அழகிதாக உன்னையெழுப்ப வழி பார்த்தோம்; தொடைகுத்தி உறக்கினோமாகாதே? கேஶிபட்டவநந்தரம், கூ₃ரவத₄த்தினன்று, பிராட்டி 2. ''ப₄ர்த்தாரம் பரிஷஸ்வஜே'' என்று – பெருமாளை அணைத்தாற்போலே க்ருஷ்ணனை எழுந்திருந்து அணைக்கப்பாராய். பேச்சிலினிமையைக்கேட்டு இவள் வாய்திறவாதே கிடந்தவாறே, ஜாலகத்₃வாரத்தாலே பார்த்தார்கள்; அவனுடைய விஜயத்தை அநுஸந்தி₄க்கையால் வந்த புகரடைய வடிவிலே காணலாம்படி கிடந்தாள். (தேசமுடையாய் திற) கிண்ணகத்துக்கு அணை செய்யாதே வெட்டிவிடாய்; நாங்கள் வாழ்ந்துபோக. எங்களுடைய ஹ்ருத₃யத்தில் அந்த₄காரம்போம்படி உன் வடிவைக்காட்டி எங்களை அநுப₄விப்பிக்கப்பாராய். 7.

ஈராயிரப்படி — ஏழாம்பாட்டு

அவ:— ஏழாம்பாட்டு. இப்பாட்டில் பழையளாய்வைத்து, புதுமை ப₄ாவித்துக் கிடப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— ''போது விடிந்தது எழுந்திராய்'' என்ன; ''விடிந்தமைக்கு அடையாளமென்?'' என்ன; ''கீசுகீசு என்று—எங்குமானைச் சாத்தன் கலந்து பேசாநின்றன'' என்கிறார்கள். (கீசு) அநக்ஷரமாயிருக்கை. ''ஒரானைச் சாத்தன் பேசுங்காட்டில் விடியுமோ?'' என்ன, எங்கும் பேசாநிற்பதென்ன, நீங்கள் அதுக்கில்லையோ? என்ன, ''எங்களாலன்றிக்கே தானேயுணர்ந்தன'' என்ன, ''அதுக்கடையாளமென்?'' என்ன; ''கலந்து பேசுகிற பேச்சு கேட்டிலேயோ? கேளாமைக்கு

மற்றுரவாரமுண்டோ?'' 1. "நிஸ்வநம் சக்ரவாகாநாம்'' இத்யாதி, இப்பேச்சுக் கேட்டுவைத்து க்ருஷ்ணன் முகத்திலே விழித்துக்கொண்டு நில்லாதே தரிக்க வல்லையாவதே! 2. "ஸௌமித்ரே ஶ்ருணு வந்யாநாம்'' இத்யாதி — "விடிவோறே மாளிகையிலே சென்றெழுப்புவாரும் கவிசொல்லுவாரும் வம்சாவளி ஓதுவாருமாக எழுந்திருக்கக் கடவ இவர் பக்ஷிகளுக்கு முன்னே உணரும்படியாவதே! என்ன தர்மஹாநி!'' என்று ஆய்த்தானருளிச்செய்வர். (பேய்ப் பெண்ணே) பகவத் விஷயத்திலும் ததீய விஷயம் தன்னேற்றமென்றறிருந்துவைத்துப் பேசாதே கிடக்கையாலே சொல்லுகிறுர்கள்; என்ன அறிவுதான்? "பேய்ப் பெண்ணே'' என்றதோடு "நாயகப் பெண்பிள்ளாய்'' என்றதோடு வாசியில்லை, அகவாயில் பாவமொன்றுகையாலே.

பின்னையுமெழுப்புகிறுர்கள் — (காசும் பிறப்பும்) அச்சுத்தாலியும் முளைத்தாலி யும். இடைச்சிகள் பூணுமாபரணம். (கலகலப்ப) A "அரவூறு சுலாய்மலை தேய்க்கு மொலி'' என்னுமாபோலே. (கைபேர்த்து) தயிரின் பெருமையாலும், இவர்கள் ஸௌகுமார்யத்தாலும் கைபேர்க்கப் போகாது. அதுக்குமேலே அவன் ஸன்னிதி யிலும் கடையப்போகாது. அவன் அஸன்னிதியிலுமப்படியே.

(வாச நறுங்குழல்) தயிர்கடைகைக்கு நியமித்து முடித்துக்கட்டிய மயிர்முடி கடைகிற ஆயாஸத்தாலே குலைந்து, கடைந்த வேர்ப்பாலே அதிபரிமளிதமாய் முடை நாற்றமும் தோற்றுதபடி கிண்ணகவெள்ளம் கரையை உடைத்துப் பெருகுமாபோலே எங்கும் சுற்று வெள்ளமிடாநின்றது. பரிமளம் ஊரை உறங்க வொட்டுகிறதில்லை. (ஆய்ச்சியர்) க்ருஹிணிகளெல்லாரும். 3. விக்ரேதுகாமா கில கோபகந்யா'' இத்யாதி. ஊராகக்கிளர்ந்தது; மத்தினுலோசை படுத்துகிற த்வனி யும், இவர்கள் சிலம்பின் த்வனியும், குழல்களில் வண்டுகளின் த்வனியும், ஆபரணம் தன்னில் கலகலவென்கிற ஒலியும், கைகளில் வளைகளினெலியும் கிளர்ந்து பரமபதத்திலே சென்று கிட்டி க்ருஷ்ணகுணங்களாய் எங்கும் பரப்புகை. 3. "கோவிந்த தாமோதர மாதவேதி'' போலே. (அரவங்கேட்டிலை யோ) B "கெண்டையொண்கண் மடவாளொருத்தி'' இத்யாதிப்படியே. ஆண் களான தேவஜாதிக்கு ஒருகைபற்றுமவன் பெண்களைக் கைவிடான். இக்கோலா ஹலங்களடையக் காண எழுந்திராய் என்கிறுர்கள். "விடிந்ததமைக்கடையாளம் கேட்டிலையோ தயிர் கடைகிற ஓசை?'' என்ன, "க்ருஷ்ணனவதரித்த பின்பு நல்ல டிக்காலமாகையாலே எப்போதுமுண்டு'' என்ன! — (நாயகப் பெண்பிள்ளாய்) "ஶேஷபூதர் ஶேஷிகளுக்குச் சொல்லுவாருண்டோ? அழகிதாக நிர்வாஹகை யானுய்'' என்று, அவள் துணுக்கென்று புறப்படுகைக்காக, கேஶிவதவ்ருத் தாந்தத்தைச் சொல்லுகிறுர்கள். — (நாராயணன் மூர்த்தி) முகம் தோற்றுதே நின்று வாத்ஸல்யத்தாலே விடாதே ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன். (மூர்த்தி) ஆஶ்ரிதரக்ஷணர்த்தமாக, 4. "பரித்ராணுய'' இத்யாதிப்படியே அவதரிக்கை, (கேசவனை) பின்னும் நம்முடைய விரோதிகளைப் போக்குமவனை. (பாடவும் நீ கேட்டே கிடத்தியோ தேசமுடையாய்) "உன்னைக்கண்டு நாங்கள் வாழும்படி வாய் திறவாய்'' என்கிறுர்கள். 7.

A திருவாய் 7-4-2 B பெரு திரு 6-2

நாலாயிரப்படி—ஏழாம்பாட்டு

அவ:—ஏழாம்பாட்டு. சிலரைச்சிலர் எழுப்பினுல் அவர்களைக்கொண்டு நோன்புக்குப் போமவர்களல்லரே இவர்கள்; பிறருடைய நன்மையே தங்களுக்கு ப்ரயோஜநமென்றிருக்குமவர்களிறே; நாம், வைஷ்ணவர்கள் தந்தாமே சில நன்மைகள் ஸம்பாதி₃த்துக்கொண்டாலும் பொறுக்கமாட்டோமே; ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம் மெய்யாகில் தன்வயிற்றில் பிறந்த ப்ரஜையினுடைய ஸம்ருத்₃தி₄ தன்னதென்றிருக்குமாபோலேயிருக்கவேணுமிறே. நாம் இவ்வர்த்த₂ம் சொல்லுகை பறையர் ஓத்துச்சொல்லுமாபோலேயிறே. ஆசாரத்திலும் சிறிதுண்டாகாவிடில் ஜ்ஞாநமில்லை என்னுமத்தனை. ஆட்கொண்ட வில்லிஜீயர் அருளிச்செய்த வார்த்தைக்கு நஞ்ஜீயரருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஸ்ரீதே₃விமங்க₃லத்தில் கமுகிலே நஞ்ஜீயர் ஸ்ரீபாத₃த்தையுடையார் சிலர் இருப்போரையடைய அமுது செய்விக்கக் கண்டு ப₄ட்டர் பிடாத்தையிட்டுக்கொண்டிருந்து ப்ரீதராய் "நம்முடைய கையிலே சில மெய்யுண்டாயன்று; அடியிலே சில மெய்யருண்டாய் அவர்களுடைய மெய் இவ்வளவும் வரப் பேசுகிறது" என்று அருளிச்செய்தார். A "அடியார்கள் குழாங்களை—கூடுவது" என்றுர் — 1. "யத₂ாக்ரது ரஸ்மிந் லோகே புருஷோ ப₄வதி ததே₂த: ப்ரேத்ய ப₄வதி" என்கிற தத்க்ரது ந்யாயத்தாலே B "அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை" என்றுர். இங்கே இக்குழாம் இனிதானுலிறே அக்குழாம் ஸித்₃தி₄ப்பது. கலியர் சோறுடையார் வாசலிலே சென்று கூப்பிடுமாபோலே சென்றெழுப்புகிறுர்கள்.

கீழ் ப₄க₃வத்₃விஷயத்தில் புதியாளொருத்தியை எழுப்பிற்று; இப்பாட்டில், பழையளாயிருந்துவைத்து, புதுமைபா₄வித்துக் கிடக்கிறுளொருத்தியை எழுப்புகிறது.

வ்யா:—(கீசுகீசு) 'போதுவிடிந்தது, எழுந்திராய்' என்ன, 'விடிந்தமைக்கடையாளமென்?' என்ன, 'ஆனைச்சாத்தன் பேசாநின்றது' என்கிறுர்கள். (கீசு) அநக்ஷரரஸமாயிருக்கை. கீழிற்பாட்டில் மெள்ளவெழுந்தரியென்ற பேரரவத்தோடு இவற்றினுடைய ஶப்₃த₃த்தோடு வாசியற்றிருக்கிறது. விவக்ஷித்தால், திருநாமம் சொன்னத்தோடு அநக்ஷரமான இவற்றின் த்₄வநியோடு வாசியற உத்₃தே₃ஶ்யமாயிருக்கிறபடி. 'நாராயணுய' என்றத்தோடு 'நாராயண' என்றத்தோடு வாசியற்று அவனுக்கு உத்₃தே₃ஶ்யமாயிருக்குமாபோலே. 'ஓரானைச்சாத்தன் பேசுங்காட்டில் விடியுமோ?' என்ன, 'எங்கும் பேசாநின்றது' என்ன, 'நீங்கள் அங்கில்லையோ?' என்ன. 'எங்களாலன்று தானே உணர்ந்தன' என்ன, 'அதுக்கடையாளமென்' என்ன—(கலந்து) 'கலந்து பேசுகிறபேச்சு கேட்டிலையோ?' என்ன, 'இராவெல்லாமுறங்கி விடியாநிற்கவோ கலப்பது?' என்ன, "இரவெல்லாம் கலந்து இப்போது பிரிகிறோம் என்று பகலெல்லாம் பிரிந்திருக்கைக்கு விலைநீரடைத்து 'பிரியப்புகுகிறோம்' என்று தளர்த்திதோற்றப்பேசுகிற பேச்சு கேட்டிலையோ?" என்ன, "மரக்கலமேறுவார் ஆறுமாஸத்துக்குத் தண்ணீரும் சோறும் ஏற்றுமாபோலே இக்கலவியர்வம் கேட்டிலையோ? கேளாமைக்கு மற்று ஆரவாரமுண்டோ செல்லுகிறது?" 2. "நிஸ்வநம் சக்ரவாகாநாம்" இத்யாதி. இப்பேச்சைக் கேட்டுவைத்து, க்ருஷ்ணன் முகத்திலே விழித்துக்கொண்டு நில்லாதே த₄ரிக்கவல்லையாவதே! 3. ஸௌமித்ரே ஶ்ருணு வந்யாநாம் வல்கு₃ வ்யாஹரதாம்

A திருவாய் 2-3-10 B திருவாய் 10-9-11.

ஸ்வநம்''—''விடிவோறே பெருமாள் திருமாளிகையிலே சென்று எழுப்புவாரும் கவி பாடுவாரும் வம்ஸாவளி சொல்லி ஏத்துவாருமாக எழுந்திருக்கக்கடவ அவர்கள் பக்ஷி களுக்கு முன்னே உணரும்படியாய், வேறேசிலரையும் 'இப்பேச்சும் உன் செவியில் பட்டதில்லையோ' என்றெழுப்புவதாய்த்தே! என்ன தர்மஹாநி!'' என்கிறுன் ருஷி. பெரியாழ்வார் வயிற்றிலே பிறந்து இடைச்சியாய், கண்ணுறங்காதே எழுப்பித்திரிகி ருப்போலே இவர்களும்.

(பேய்ப்பெண்ணே) அறிந்துவைத்து அறியாதார் பேச்சைச் சொல்லுகை. 'இவர்களாகில் இப்படி சொல்லுகை பணி' என்று பேசாதே கிடக்க, அறிந்துவைத் துக் காற்கடைக் கொள்ளுகையாலே 'பேய்ப் பெண்ணே' என்கிறுர்கள். 'தத்விஷயத் திலும் ததீயவிஷயம் நன்று' என்று அறிந்துவைத்துப் பேசாதே கிடக்கையால் சொல்லுகிறுர்கள். என்ன அறிவுதான்! மிதுநமாய்க்கலந்தால் 'அடியேன்' என்னிலும் என்பர், எதிர்த்தலையைத் தாழச் சொல்லிலும் சொல்லுவர். ''பேய்ப் பெண்ணே'' என்றத்தோடு ''நாயகப் பெண்பிள்ளாய்'' என்றத்தோடு வாசியில்லை அகவாயில் பாவமொன்றுகையால்.

'போது விடியாதிருக்க, விடிந்ததென்கிற நீங்களோ நானே பேய்ப்பெண்?' என்ன, ''விடியச் செய்தே 'விடிந்ததில்லை' என்கிற நீயே பேய்ப் பெண்'' என்ன. 'விடிந்தபடி எங்ஙனே?' என்ன; 'தயிர்கடைகிற ஓசை கேட்டிலையோ' என்கிறுர்கள். (காசும் பிறப்பும்) அச்சுத்தாலியும் முளைத்தாலியும். இடைச்சிகள் பூணுமாபரணம். ப்ராஹ்மணர் ஸந்த்யா வேளையில் பூணூலிடுமாபோலே, தங்கள் அநுஷ்டாந வேளையில் இவர்களுக்கு ஆபரணம் பூணவேணுமென்கை. (கலகலப்ப) A ''அரவூறு சுலாய் மலை தேய்க்குமொலி'' என்னுமாபோலே. (கைபேர்த்து) தயிரின் பெருமை யாலும் இவர்கள் ஸௌகுமார்யத்தாலும் பேர்க்கப்போகாது; அதுக்குமேலே அவன் ஸந்நிதியிலும் கடையப்போகாது; அஸந்நிதியிலும் கடையப்போகாது, என்னென் னில்; காணவிடில் கை சோரும்; காணில் 'தயிரை மோராக்கவொட்டேன்' என்று கையைப் பிடிக்கும். B ''மோரார் குடமுருட்டி'' என்னக்கடவதிறே.

(வாச நறுங்குழல்) தயிர் கடைகைக்கு நியமித்து முடிக்கும் மயிர்முடி கடைகிற ஆயாஸத்தாலே குலைந்து கடைந்த வேர்ப்பாலே அதிபரிமளமாய், முடைநாற்றம் தோற்றுதபடி, கிண்ணகவெள்ளம் கரையையுடைத்துப் பரம்புமாபோலே எங்கும் சுழித்து வெள்ளமிடாநின்றது. C ''தெருவெல்லாம் காவிகமழ் திருக்காட்கரை'' என்னுமாபோலே, பரிமளம் ஊரை உறங்கவொட்டுகிறதில்லை. (ஆய்ச்சியர்) ஊராகக் கிளர்ந்தது.

(மத்தினுலோசை படுத்த) ஒரு மந்த்ரத்தாலே கடலைப்படுத்துமாபோலே முழங்காநின்றது. 1. ''உத்கூாயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ருஶத் த்வநி: | தத்நஶ்ச நிர்மந்தந ஶப்தமிஶ்ரிதோ நிரஸ்யதே யேந திஶாமமங்கலம் ||''—''அவன் கண்ணழகிலே தோற்றுப் பாடுகிற த்வநியும், இவர் கள் காலில் சிலம்பில் த்வநியும், குழலில் வண்டுகளினுடைய த்வநியும், ஆபரணங் கள் தன்னில்தான் கலகலவென்கிற த்வநியும், கையில் வளையொலியும் கிளர்ந்து

A திருவாய் 7-4-2. B சிறியதிரு 33. C திருவாய் 9-6-1

பரமபத₃த்திலே சென்றுகிட்டி 'க்ருஷ்ண கு₃ணங்கள் திருவாய்ப்பாடியிலே பரிமாறா நிற்க, இவ்வுயரத்திலே என்ன இருப்பு இருக்கிறிகோள்' என்று அங்குள்ளாரை வசைபாடுவாரைப்போலேயிருக்கிற த்₄வநியும் கேட்டிலையோ?'' என்கிறார்கள்.
1. ''விக்ரேதுகாமா கில கோ₃பகந்யா முராரிபாதா₃ர்ப்பிதசித்த வ்ருத்தி:|
த₃த்₄யாதி₃கம் மோஹவஶாத₃வோசத் கோ₃விந்த₃ தா₃மோத₃ர மாத₄வேதி''||
எம்பெருமான் பக்கலிலே பிச்சேறிக்கிடக்கிற பெண்களை இவர்கள் அந்யபரதை தீர வேணுமென்று பார்த்து 'தயிரும் பாலும் நெய்யும் விற்று வாருங்கோள்' என்று கொடுத்துவிட, விற்கும்போது நெஞ்சில் நினைப்பது க்ருஷ்ணனையாகையாலே 'கோவிந்த₃னைக் கொள்ளுங்கோள், க்ருஷ்ணனைக் கொள்ளுங்கோள், ஶ்ரிய:பதியைக் கொள்ளுங்கோள்' என்னுநிற்பர்கள். (அரவம் கேட்டிலையோ) A ''வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய்துடிப்ப, தண்டயிர் நீ கடைந்திட்ட வண்ணம் தாமோதரா! மெய்யறிவன் நானே'' என்று சொல்லும்படி, ஆண்களான தே₃வஜாதிக்கு ஒரு கைப்பற்றுமவன் பெண்களைக் கைவிடானே; அக்கோலாஹலங்களடையக் காண எழுந்திராயென்கிறார்கள். (தயிரரவம் கேட்டிலையோ) ''இதுகேளாதபடி தயிர் கடையாநின்றதோ?'' என்கை. ''ப்ரணயரஸம் செல்லாநின்றதோ?'' என்கை.

இதுக்கு ''இன்று இங்ஙனே கொடுமை சொல்லுகிறிகோள். வந்த கார்யத்துக்குடலானவற்றைச் சொல்லமாட்டிகோளோ?'' என்ன, ''நாங்கள் தவிருவோமோ நீ பேசாதே கிடந்தால்?'' என்ன; ''விடிந்தமைக்கடையாளம் தயிர்கடைகிற ஓசை கேட்டிலையோ என்பானென்? பண்டுபோலே பசுக்களும் பால்களும் அளவுபட்டிருந்ததோ? க்ருஷ்ணன் பிறந்து நல்லடிக்காலமாய், பசுக்களும் பாலும் பெருத்து, கறக்கும்போதறியாதே கடையும்போதறியாதே செல்லுகிற ஊரிலே இதோரடையாளமாகமாட்டாது; வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்'' என்று பேசாதே கிடந்தாள்—(நாயகப் பெண்பிள்ளாய்) ஶேஷிக்கு ஶேஷபூ₄தர் தான் சொல்ல விரகுண்டோ? அழகிதாக நிர்வாஹகையானாய்; 'உனக்கிது பா₄ரமன்றாகில் எங்களுக்கோ பா₄ரம்'? என்று 2. ''ததோ மௌநமுபாக₃மத்'' என்கிறபடியே பேசாதேகிடக்க, 'உங்களடியேனை இங்ஙனே சொல்லுவதே!' என்ன, 'நீ வாய்திறவாவிட்டால் நாங்கள் செய்வதென்?' என்ன, 'ஆனால் திறக்கிறேன்' என்ன; இவள் துணுக்கென்று எழுந்திருக்கைக்காகக் கேஶிவத₄ வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்—(நாராயணன் மூர்த்தி) முகம் தோற்றாதே வாத்ஸல்யத்தாலே விடாதேநின்று ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து; (கேசவனை) கண்ணுக்குத்தோற்றி நின்று நம் விரோதி₄களைப் போக்குமவனை. அவன் சேஷ்டிதங்கள் சிலரை அச்சங்கெடுக்கும்; (கேசவனைப் பாடவும் நீ கேட்டேகிடத்தியோ) ஶ்ரோத்ரஸுக₂மாயிருந்ததுதானே நீர்வாய்ப்பாக உறங்குகிறாயோ? க₂ரவத₄த்தினன்று போலே தழுவப்பாராய். 3. ''தம் த்₃ருஷ்ட்வா'' இத்யாதி₃.

3. [தம் த்₃ருஷ்ட்வா] பண்டு மணக்கோலமிறே கண்டது; இப்போது வீரக்கோலத்தோடே காணப்பெற்றாள். 3. [ஶத்ருஹந்தாரம்] தமக்கொரு வாட்டமின்றிக்கே எதிரிகளை அழியச்செய்யப்பெற்றபடி. 3. [மஹர்ஷீணாம் ஸுகா₂வஹம்] ப்ரஜையினுடைய ஆர்த்தி தீர்ந்து ஸுகி₂க்கக் காண்கையிறே தாய்க்கு ஸுக₂ம். ப₄ர்த்தாவானவன் பா₄ர்யைபக்கல் முகம்பெறாவிட்டால் ப்ரஜையை எடுத்துக்கொண்டு வருமாபோலே

A பெரு-திரு. 6-2.

பிராட்டி முகம் பெறுகைக்காகப் பச்சையிடும்படி. 1. [ப₃பூ₄வ] ஶரணுக₃தருடைய ஆர்த்தியாலும், 'பெருமாளுக்கு என்புகுகிறதோ?' என்னும் ப₄யத்தாலுமழிந்த ஸ்வரூபம் அவர்களும் அவரும் உளராகப் போருகையாலே இப்போதுண்டாய்த்தது. இரண்டு தலையுமுண்டாக உண்டாய், இல்லையாகில் இல்லையாமவளிறே. 1. [ஹ்ருஷ்டா] அதுக்கு மேலே நிரதிஶய ப்ரீதியுண்டாயிற்று. 1. [வைதே₃ஹீ] அவதாரம் ஸப்ரயோஜநமாய்த்து. 1. [வைதே₃ஹீ] வீரவாசி அறியும் குடியிலே பிறந்தவள். ஒருவில் முறிக்க ஐயர் என்றும் உகந்தபடிக்கும், இன்று தனியே பதினாலாயிரம் ராக்ஷஸரைப் பொடி படுத்திநின்ற பெரிய பராக்ரமம் காணப்பெற்றுதோம். 1.[ப₄ர்த்தாரம் பரிஷஸ்வஜே] பண்டு ஐயர் கொடுத்தாரென்று அந்த மணக்கோலத்தை த₄ர்மத்துக்குத் தழுவினாள். இப்போது வீரக்கோலங்கண்டு 'ஆண்' என்று தழுவினாள், அம்புவாய் தெரியாதபடி தனது ஸ்தநோஷ்மதையாலே வேதுகொண்டாள். இவர்க்கு ஸந்த₄ாநகரணியும் விஶல்யகரணியுமதுவே. ஜக₃த்துக்குத் தாயும் தமப்பனும். (கேட்டே கிடத்தியோ) இப்ரமாத₃ம் தப்பப்பெற்றுக் கிடக்கிறாயோ? என்ன; இவர்கள் பேசின பேச்சிலே ஈடுபட்டுக்கிடக்கிற பெண்பிள்ளையைத் திருஜாலகத்தாலே [சென்று] எட்டிப்பார்த்து—(தேசமுடையாய்திற) என்கிறார்கள். இவளுடைய நிரவதி₄க தேஜஸ்ஸைக்கண்டு "உன்னைக் கண்டுவாழ, தேசமுடையாய் திறவாய்" என்கிறார்கள். 7.

ஸ்வாபதே₃ஶவ்யாக்₂யாநம்—ஏழாம்பாட்டு

அவ:—ஏழாம்பாட்டு. (கீசுகீசு இத்யாதி₃) இப்பாட்டில், ப₄க₃வத்₃ விஷயத்திலும் பா₄க₃வதவிஷயம் நன்று என்று அறிந்தும் மறந்திருப்பாரொருவரை எழுப்புகிறார்கள்;

வ்யா:—(எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து—கீசு கீசு என்று பேசின பேச்சரவம் கேட்டிலையோ) ஸர்வதோதி₃க்கமாக அஹங்கார நிவர்த்தகரான மஹாபா₄க₃வதர் "நாம் பிரியப்புகாநின்றோமே!" என்று பிரிந்தால் மறுபடி கூடுந்தனையும் த₄ரித்திருக்கைக்காகப் பரஸ்பரம் ஸம்ஶ்லேஷித்து க₃த்₃க₃த₃ஸ்வரமாகையாலே அநக்ஷரரஸமாக, பேசின பேச்சரவம்—விஶ்லேஷவ்யஸநம் தோற்றும்படியாகப் பேசின பேச்சினுடைய த்₄வநியைக் கேட்டிலையோ? (பேய்ப்பெண்ணே) அறிந்து வைத்துப் பேசாதே கிடக்கையாலே, 'மதிகேடி!' என்கிறார்கள்.

'அவர்களை எழுப்புகைக்கு நீங்களுண்டே; வேறு அடையாளமுண்டோ?' என்ன, சொல்லுகிறார்கள் — (காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து) திருமந்த்ரமும் த்₃வயசரமஶ்லோகங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து த்₄வனிக்க, ஸ்வரூபோபாய புருஷார்த்த₂ ஜ்ஞாநம் தலையெடுத்து. (வாசநறுங்குழல் இத்யாதி₃) மிக்க பரிமளத்தையுடைய ப₄க₃வத்₃விஷய வ்யாமோஹத்தையுடைய அநந்யார்ஹ ஶேஷபூ₄தரான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸங்கல்பத்தாலே ஶிக்ஷிதரான ஸம்ஸாரிசேதநருடைய தி₃வ்ய ப்ரப₃ந்த₄ாநுஸந்த₄ாந த்₄வநியைக் கேட்டிலையோ?

(நாயகப் பெண்பிள்ளாய்) இதுவன்றோ நமக்கு நீ நிர்வாஹகையானமைக்கு அடையாளம்; அதாவது—சொன்னதுக்கெல்லாம் மறுமாற்றஞ்சொல்லி

திருப்பாவை எட்டாம் பாட்டு

கீழ்வானம் வெள்ளென்(று) எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்(து)உன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென்(று) ஆராய்ந்(து) அருளேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—கோதுகலம் உடைய பாவாய்—(கிருஷ்ணனுடைய) விருப்பத்தையுடைய பெண்ணே! கீழ்வானம்—கிழக்கு திக்கில் ஆகாசமானது, வெள்ளென்று—வெளுத்தது; எருமை—எருமைகள். மேய்வான்—(பனிப்புல்) மேய்கைக்காக, சிறுவீடு—(விடியற்காலையில்) சிறிதுநேரம் அவிழ்த்துவிடப்பட்டு, பரந்தன காண்—(வயல்களெங்கும்) பரவின; போவான் போகின்றார்—போவதையே ப்ரயோஜனமாகக்கொண்டு போகின்றவர்களான, மிக்குள்ள பிள்ளைகளும்—மற்றுமுள்ள பெண்பிள்ளைகளையும், போகாமல் காத்து — போகாதபடி தடுத்து. உன்னைக் கூவுவான் — உன்னைக் கூப்பிடுவதற்காக, வந்து நின்றோம்—(உன் வாசலில்) வந்து நிலையாக நின்றோம், எழுந்திராய்—எழுந்திரு; பாடி—(கண்ணனுடைய குணங்களைப்) பாடி. பறை கொண்டு—(அவனிடம்) பறையைப்பெற்று, மா வாய் பிளந்தானை—குதிரை வடிவுகொண்ட கேசியின் வாயைப் பிளந்தவனும், மல்லரை மாட்டிய—(சாணூரமுஷ்டிகர்கள் என்னும்) மல்லர்களை அழியச் செய்தவனும், தேவாதி தேவனை—நித்யஸூரிகளுக்கெல்லாம் தலைவனுமான அவனை, நாம் சென்று சேவித்தால்—நாம் (அவனிடம்) சென்று பணிந்தால், ஆராய்ந்து—(நம்முடைய குறைகளை) விசாரித்து, ஆ ஆ என்று அருள்—ஐயோ! என்று தயை பண்ணுவன்.

மூவாயிரப்படி—எட்டாம்பாட்டு

அவ:—எட்டாம்பாட்டு. a எல்லாரும் வந்து அழைக்கும்படி க்ருஷ்ணனாலே a₂ வேண்டற்பாடுடையாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

பெ.அ. எட்டாம்பாட்டு. (கீழ்வானம் இத்யாதி₃) a "கோதுகலமுடையபாவாய்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகையிடுகிறார் (எல்லாரும் இத்யாதி₃) 'எல்லாரும்' என்றது—"மிக்குள்ளபிள்ளைகளும்" என்றத்தைப்பற்ற. a₂ வேண்டற்பாடு — வால்லப்₄யம்.

ஸ்வா:- எழுந்திராமலிருக்கை. (நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ) ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுடைய அவதாரமாய், கேஸிஹந்தாவான க்ருஷ்ணனைப் பாடச்செய்தேயும், 1. "தம் த்₃ருஷ்ட்வா" என்கிறபடியே க்ருஷ்ணவிஜயத்தைக் கேட்டுப் புறப்பட்டு அவனை அணைக்கக்கடவ நீ அதுவே துடைகுத்தாக ப₄க₃வத₃பாயப₄யம் தீர்ந்து உறங்கக்கடவையோ? (தேசமுடையாய் திற) இப்படி சொன்னவிடத்திலும் எழுந்திராமையாலே ஜாலகரந்த்₄ரத்தாலே பார்த்து "ப₄க₃வத்₃கு₃ணநுப₄வத்தாலுண்டான மஹாதேஜஸ்ஸையுடையவளே! இத்தேஜஸ்ஸூ காட்டிலெரித்த நிலாவாகாமே நாங்கள் அநுப₄விக்கலாம்படி எங்கள் அஜ்ஞானத்தை நீக்காய்" என்கிறார்கள்.

வ்யா:—(கீழ்வானம் b வெள்ளென்று) c ''கிழக்கு வெளுத்தாலும் கிடந்து உறங்குமித்தனையோ? எழுந்திராய்'' என்கிறார்கள். ''கிழக்கு வெளுத்ததன்று. உங்களிலே யாரேனும் அத்திக்கைப் பார்க்கையாலே உங்கள் முகத்திலொளி d ப்ரதிப2லிக்கையாலே கிழக்கு வெளுத்ததாயிருக்கிறது; இவர்கள் தாங்கள் 'திங்கள் திருமுகத்துச் சேயிழையார்' (30) இறே. e அது அந்யதா2ஜ்ஞானம்: மற்று அடையாளமுண்டோ?'' என்ன, — f (எருமை f_2 சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) g பனிப்புல் மேயக் காலத்திலேவிட்டு வயல்களெங்கும் பரந்தன காண்; h ஸ்ரீ நந்த3கோ3பர்க்கு h_2 முத்திறமும் உண்டே; i அவற்றின்பின்னே க்ருஷ்ணன்போம்; பின்னை யாரைக் காண்பது? எழுந்திராயென்ன;

j உங்கள் முகத்திலொளியைக்கண்டு j_2 இருள் j_3 திரைந்துபோகிறது இத்தனை. * [அது உங்களுடைய விபரீதஜ்ஞாநமிருக்கிறபடி; ஸத்வநிஷ்ட2ர் ஸந்நி

பெ.அ. b, c ''வெள்ளென்று'' என்றதுக்கு—வெளுத்ததென்று அர்த்த2மாய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கிழக்கு இத்யாதி3) 'கிழக்கு வெளுத்தாலும்' என்ற சகாரத்தாலே—''புள்ளும்சிலம்பினகாண்'', ''கீசுகீசு'' என்கிற பாட்டுக்களிற் சொன்ன காலங்களுமெல்லாம் தப்பிப்போய், அதுக்குமேலே கிழக்கும் வெளுத்ததென்று தோற்றுகிறது. d ப்ரதிப2லிக்கையாலே—வ்யாபிக்கையாலே.

f, g ''எருமை--மேய்வான்—சிறுவீடு—பரந்தனகாண்'' என்று அந்வயித்து, எருமைகள் பனிப்புல் மேய்கைக்காகச் சிறுவீடு காலத்திலே விடப்பட்டுப் பரம்பினவென்று அருளிச்செய்கிறார் (பனிஇத்யாதி3) h_2 முத்திறம்-மூன்றுவகைப்பட்ட ப்3ருந்த3ம் - ஆட்டுத் திறம், மாட்டுத் திறம். எருமைத்திறம். i பால் கறக்கை முதலான அடையாளம் சொல்லாமல் எருமை விடுகையைச் சொல்லுகைக்கு ப4ாவம் அருளிச்செய்கிறார் (அவற்றின் இத்யாதி3)

j,k ''மிக்குள்ளபிள்ளைகளும்'' இத்யாதி3க்கு உக்திப்ரத்யுக்திரூபமாக அவதாரிகை அருளிச்செய்வதாக, கீழ்ச்சொன்ன அடையாளத்தை அந்யதா2கரிக்கிறபடியை இரண்டு வகையாகக் காட்டுகிறார் (உங்கள் இத்யாதி3 வாக்ய த்3வயத்தாலே.) j_2 (இருள் திரைந்து போகிறதித்தனை) என்றது—இருள் கூட்டம் கூட்டமாகப் போகிறதித்தனை, எருமை போகிறதன்று என்றபடி, l இப்படி அந்யதா2கரிக்கும்படி எருமைகளைச் சொல்லுவானென்? முத்திறமுண்டாயிருக்கப் பசுக்களைச் சொல்லவொண்ணாதோ? என்று தடஸ்த2ஶங்கையை த்3ருஷ்

சி.அ. எட்டாம்பாட்டு. (கீழ்வானம்) b வெள்ளென்று—வெளுத்தது. f_2 சிறுவீடு—கறப்பதற்கு முன்னே பனிப்புல்மேய விடுகை. h நந்த3கோ3பர்க்கு எருமைகள் உண்டோ? என்ன (நந்த3கோ3பர்க்கித்யாதி3) h_2 முத்திறம்-பசுக்கள், எருமைகள், ஆடுகள்; திறம்-கூட்டம். g,h அன்றிக்கே (பனிப்புல்மேயக் காலத்தில் விட்டு) என்கைக்கு-பனிப்புல்மேய்கிறவை சில, மற்றவை சில உண்டோ? என்ன (ஸ்ரீநந்த3கோ3பர்க்கித்யாதி3) என்னவுமாம்: h_2 அப்போது (முத்திறம்) என்றது கறப்பனவும், மறுத்தவையும், சினையாயிருப்பனவும். i எருமைகள் பனிப்புல்மேயப்போனால் நமக்கு நஷ்டம் என்? என்ன - (அவற்றின் பின்னே இத்யாதி3) f, j_2 எருமைக்கு ஸ்வாபதே3ஶார்த்த2ம் இருள்.

ஆ.அ. எட்டாம்பாட்டு (கீழ்வானமித்யாதி3) e (அது அந்யதா2ஜ்ஞானம்) என்றது—கீழ்வானம் வெளுத்ததென்றது அந்யதா2ஜ்ஞானமென்றபடி. h_2 முத்திறம் என்றது—பசுக்கள், எருமைகள், ஆடுகள். J_3 (திரைந்து) கூட்டம் கூடிக்கொண்டென்றபடி.

---

*(பா) அதுவும் அந்யதா2ஜ்ஞாநம்.

தி$_{4}$யில் அந்த$_{4}$காரம் நில்லாதிறே. பெரியாழ்வார் பெண்பிள்ளை அக்$_{3}$நிஹோத்$_{3}$ராநுஷ்ட$_{2}$ாநம் அறிகையொழிய, சிறுவீடு வாசியறியும்படியான மெய்ப்பாடு.] k அருணோத$_{3}$யத்துக்கு அஞ்சி இருள் சிதறிப்போகிறதென்னவுமாம், l A "மேட்டிள மேதிகள் தளைவிடுமாயர்கள்" என்று இவள் தகப்பனார் எம்பெருமானை எழுப்பினார்; இவள் இவர்களை எழுப்புகிறாள். l$_{2}$ 'நாங்கள் ப்$_{4}$ரமித்தோமாயிடுக; நீ விடிந்ததில்லையென்று அறிந்தபடி எங்ஙனே?' என்ன; 'பஞ்சலக்ஷம்குடியில் பெண்களில் உங்களையொழிய அல்லாதாருணராமையாலே' என்ன, m (மிக்குள்ள பிள்ளைகளும்) உன்னையொழிந்தாரெல்லாரும் n ஆற்றாமையாலே போனார்கள்; நீயே எழுப்பக்கிடந்தாய். o (போவான் போகின்றாரை) p அர்ச்சிராதி$_{3}$க$_{3}$தி, அக்ரூரயாநம், திருவேங்கடயாத்ரைபோலே போகையே ப்ரயோஜநமாகப் போகாநின்றார்கள்; 'நான் இனி எங்கேபோக அவர்கள் போனார்களாகில்?' என்ன, (போகாமல்காத்து) "செய்யாதன செய்யோம்" (2) என்று அடியில் நம்முடைய வ்யவஸ்தை$_{2}$யை உணர்த்தி, நீ வந்ததில்லையென்று அவர்கள் போகாதபடி தடுத்து. (உன்னைக் கூவுவான்) உன் வாசலிலே வந்து எழுப்பினோமென்னும் q தரம் பெறுகைக்கு. r (வந்து) s 1. "உத்தரம் தீரமாஸாத்$_{3}$ய" என்னுமாபோலே. t (நின்றோம்) u "க$_{2}$ஸ்த$_{2}$ ஏவ வ்யதிஷ்ட$_{2}$த" என்று நிலைபெற்று நின்றோம்.

பெ.அ. டாந்த முகே$_{2}$ந பரிஹரியாநின்றுகொண்டு ஈடுபடுகிறார் (மேட்டிள இத்யாதி$_{3}$) A "மேட்டிளமேதிகள் தளைவிடுமாயர்" என்றது — பெருத்து இளைசான எருமைகளுடைய காலில்கட்டுகிற கயிற்றினை விடுகிற இடையர் என்றபடி. m "மிக்குள்ள" என்றது–அவஶிஷ்டமான என்றபடி. o,m "போவான் போகின்றாரான-மிக்குள்ள பிள்ளைகளையும்" என்று அந்வயம். o,p "போவான்" என்று - போகை உத்$_{3}$தே$_{3}$ஶ்யமாகத் தோற்றச் சொல்லுகையாலே - அத்தை த்$_{3}$ருஷ்டாந்தமுகே$_{2}$ந அருளிச்செய்கிறார் (அர்ச்சிராதி$_{3}$ இத்யாதி$_{3}$) q தரம்-அதிஶய:. r,s,t "கூவுவான்-நின்றோம்" என்றுதல், "வந்தோம்" என்றுதல் சொல்ல அமைந்திருக்க, இரண்டும் சொல்லுகைக்கு த்$_{3}$ருஷ்டாந்தமுகே$_{2}$ந ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் (உத்தரம் இத்யாதி$_{3}$) s "உத்தரே தீரே க$_{2}$ஸ்த$_{2}$ ஏவ வ்யதிஷ்ட$_{2}$த" என்றதே, 1. "தீரமாஸாத்$_{3}$ய" என்கையாலே-அத்தே$_{3}$ஶப்ராப்தியே ப்ரயோஜநமென்று தோற்றுகிறது. u "க$_{2}$ஸ்த$_{2}$ ஏவ அதிஷ்ட$_{2}$த" என்றதே "வி" என்று சொன்னதால்-நிற்கையே

சி.அ. j, k அதுபோகைக்கு இரண்டு ஹேதுவை அருளிச்செய்கிறார் — இவர்கள் முகத்தில் ஒளியாதல், அருணோத$_{3}$யமாதல். l எருமை விடுகையை அடையாளமாகச் சொன்ன பேருண்டோ? என்ன (மேட்டிளமேதிகள்) என்று. n (ஆற்றாமையாலே போனார்கள்) என்றது—"செய்யாதன செய்யோம்" (2) என்றிருக்கிறவர்கள் முன்னே போகிறதென்? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம்.

கு.அ. l ஆழ்வார்க்கும் இவளுக்கும் வாசி அருளிச்செய்கிறார்-(மேட்டிளமேதிகள்) என்று; அதாவது — அவர் ப$_{4}$க$_{3}$வத்$_{3}$விஷயத்தில் செய்தது இவள் பா$_{4}$க$_{3}$வத விஷயத்திலே செய்கிறாள் என்றபடி. அன்றிக்கே, ஆழ்வார் அருளிச்செய்ததுகொண்டு இவளும் எருமைகளை விடிந்தமைக்கடையாளமாகச் சொல்லுகிறாள் என்றபடி. l$_{2}$, m "மிக்குள்ள பிள்ளைகளும்" என்ற 'ச' ஶப்$_{3}$த$_{3}$த்துக்குத் தாத்பர்யம் (நாங்கள் ப்$_{4}$ரமித்தோமாயிடுக இத்யாதி$_{3}$)

A திருப்பள்ளி-4

பாஸ்யதி | மதுராம் ப்ராப்ய கோவிந்த: கதம் கோகுலமேஷ்யதி ||'' என்கிற படியே பெரிய மேன்மையுடையவனுயிருக்கிறவன் ஸ்ரீ மதுரையிலே போய்க் குவலயாபீட சாணூர முஷ்டிகரை அழியச்செய்து படைவீட்டிற் பெண்பிள்ளைக ளோட்டைப் பழக்கத்தாலே பெரிய விதக்தனுனவன் இடக்கையும் வலக்கையு மறியாத நம்பக்கலிலே வரக்கூடுமோ? என்ன.—q (சென்று) r விரஹம்தின்று குறைக்கொள்ளியான நம் ஶரீரத்தை அவன் கண்டு புண்படும்படி அவனிருந்த விடத்தே செல்லக்கடவோம். s அவன் வேண்டற்பாட்டிலே இருக்கிலோவென்னில் — (சென்று) t அவன்வர ப்ராப்தமாயிருக்க நாம் சென்று. u 1. ''உபஸ்தேயை ருபஸ்தித:'' என்றும், 2. ''பத்ப்யாமபிகமாச்சைவ'' என்றும் இவர்கள் செல்லுகை அத்தலைக்கு மிகுதியாயிறேயிருப்பது. (நாம் சேவித்தால்) அத்தலை இத்தலையானுல்.

v (ஆவாவென்று ஆராய்ந்து v_2 அருளும்) w ''நம்மாலே பேறு என்று நாம் வரப் பார்த்திருக்குமவர்கள் நாமிருந்தவிடத்தே வந்தது இவர்கள் செல்லாமை யிறே'' என்று w_2 இரங்கி நமக்கும் உகந்தருளுங்காண். x ப்ரணயித்வம் போனு லும் ஆர்த்தரக்ஷணம் தவிருமோ? 3. ''ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம:'' என்று சொல்லிவைத்து, அநுஷ்டியாதொழியுமோ? ஆனபின்பு, அவனருளுக்கு ஹேது பூதையான நீ எழுந்திராய்.

y ''ஆவாவென்று ஆராய்ந்தருளும்; கோதுகலமுடைய பாவாய் எழுந்திராய்'' என்று அந்வயம். 8.

பெ.அ. தேவனை'' என்றதை மாத்ரம் கடாக்ஷித்து அவதாரிகாந்தரம் அருளிச்செய்கிருர் (அவன் வேண்டற்பாடு இத்யாதி) 'வேண்டற்பாட்டிலே' என்றது-ப்ரணயித்வத்தை விட்டுப் பெருமையிலே என்றபடி. t ''நாம்-சென்று'' என்று அந்வயித்து ஶப்தார்த்தம் அருளிச் செய்கிருர் (அவன்வர இத்யாதி)

v, w 'ஆராய்ந்து-ஆவாவென்று-அருளும்' என்று அந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத் பர்யம் அருளிச்செய்கிருர் (நம்மாலே இத்யாதி) v, w_2 'ஆ ஆ' என்றதுக்கு—ஐயோ! என்று ஶப்தார்த்தமாய், பலிதம் (இரங்கி) என்றது. v_2, x இரண்டாம் அவதாரிகாநுகுணமாக 'அருளும்' என்றதுக்கு பாவம் அருளிச்செய்கிருர் (ப்ரணயித்வம் இத்யாதி)

y ''பாடிப் பறைகொண்டு என்று தொடங்கி, அருளும், கீழ்வானம் என்று தொடங்கி எழுந்திராய்'' என்று அந்வயமென்று காட்டுகிருர் (ஆவா இத்யாதி) 8.

சி.அ. q, r, t ''நாம் சென்று'' விரஹம் தின்ற நாம் என்னுதல், அவன் வர இருக்கக் கடவ நாம் என்னுதல். u அப்படி அவன்வர ப்ராப்தமோ? என்ன அருளிச்செய்கிருர் (உபஸ்தேயை: இத்யாதி) v ஆஆ-அய்யய்யோ! v ''அருள்'' என்றது அருளும் என்றபடி. a,c,f ''பாடிப்பறைகொள்ளுகைக்காக - பாவாய் எழுந்திராய்'' என்று அந்வயம்.

இப்பாட்டுக்கு ஸ்வாபதேஶம்—பகவதநுபவத்தில் ப்ரத்யாஸந்நராயிருப்பார் திறத் தில் ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை முன்னிட்டு ஈஶ்வரனைக் கிட்டுகையும் ஸ்ரீ வைஷ்ண வர்களுக்கு ஸ்வரூபமென்கிறது. 8.

ஆருயிரப்படி — எட்டாம் பாட்டு

அவ:— எட்டாம்பாட்டு. இதுக்கு முன்பு உணர்ந்த பெண்களெல்லாம் திரண்டு, தங்கள் அபி4மதலாப4ம் யாவளொருத்தி முன்னாகப் பெறலாயிருக்கிறது, அதுக்கீடாக க்ருஷ்ணன் கொண்டாடும்படி செல்வக்கிடப்புடையாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா— ஸம்ஸாரிகளுக்கு ராத்ரியில் பரஹிம்ஸாதி3 சிந்தநமும், நரகாவஹமான விஷயாநுப4வமும், தமோகு3ணாபி4ப4வத்தால் வந்த நித்3ரையுமாய்ச் செல்லுகையாலே, ராத்ரி தண்ணியதென்று புருஷார்த்தோ2பயோகி3யான பகல் விருப்பத்துக்கு உடலாயிருக்கும்; இவர்கள் க்ருஷ்ணாநுப4வம் பண்ணப் பெறுகையாலே ராத்ரி அடிக்கழஞ்சு பெற்று, விடியில் கோ3பவ்ருத்3த4ர்கள் விரோதி4ப்பார்களென்று விடியப்புகாநின்றதென்று ப4யப்பட்டு, ''க்ருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாதவர்கள் உணருங்காலம் வந்து தோற்றச்செய்தே நீ கிடந்து உறங்குகையாவதென்?'' என்ன; அவள் உள்ளேகிடந்து 'அக்காலம் வருகையாவதென்?' என்ன—(கீழ்வானம்வெள்ளென்று) ''இதுக்கு முன்பு விடிவுக்குடலாகச் சொன்னது போலன்று; கிழக்குவெளுத்தது காண்'' என்கிறார்கள். A' ''அஞ்சுடர வெய்யோனணி நெடுந்தேர் தோன்றுதால்'' என்று, போது புக்கபோதே பிடித்து கீழைத்தி3க்கைப் பார்த்துக்கொண்டிருப்புதிகோள்; '' திங்கள் திருமுகத்துச் சேயிழையார்'' (30) ஆன உங்களுடைய முக2ஜ்யோத்ஸ்நை கீழைத்தி3க்கிலே சென்று தட்டி உங்கள் முக2த்திலே வந்து ப்ரதிபி3ம்பி3க்கையாலே கிழக்கு வெளுத்தது போலே தோற்றுகிறதித்தனை, கிழக்கு வெளுத்ததன்று, இது உங்களுடைய அந்யதா2ஜ்ஞாநம், இத்தையொழிய விடிவுக்கு வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன—

(எருமைசிறுவீடு) ''எருமைகள் பனிப்புல் மேய்கைக்காக வயலெங்கும் பரந்தன; இது விடிவுக்கு அடையாளமன்றோ?'' என்கிறார்கள். B ''மேட்டிளமேதிகள் தளைவிடுமாயர்கள்'' என்று பெரியபெருமாளை இவள் தமப்பன்மாரிலே ஒருவரெழுப் பினார்; இவளை இவர்களெழுப்புகிறார்கள். இது ஆழ்வார்களுக்கும் இவளுக்கும் வாசி. (சிறுவீடு) பெரியாழ்வார் மகளாய் அக்3நிஹோத்ர ஹோமங்களுக்கு உள் மானம் புறமானம் ஆராய்கை தவிர்ந்து, இடைச்சியாய், எருமையினுடைய சிறு வீடு பெருவீடென்னுமிவற்றில் வாசியறிகையே யாத்ரையானபடி. (பரந்தனகாண்) ''படஅடிப்பட்டாலும் உறங்குமத்தனையோ? நம்முடைய உத்3தே3ஶ்யவஸ்து அவற்றின் பின் கைகழியப்போனால் என்படக்கடவோம்? ஸ்ரீநந்த3கோ3பர்க்கு முத்திறமுமுண்டா கையாலே க்ருஷ்ணன் அவற்றின் பின்னேபோம்; பின்னை நாம் ஆரைக் காணப் போகிறது? கெடுவாய்! எழுந்திராய். எருமை, பனிப்புல் மேய்கைக்கு வயலெங்கும் பரந்தனவென்று சொன்ன இது விடிவுக்கடையாளமன்றோ'' என்ன; ''உங்களுடைய முக2ஜ்யோத்ஸ்நையாலே சிதறிப்போகிற இருளத்தனை இவையல்லது எருமைக ளன்று; இது உங்களுடைய விபரீதஜ்ஞாநமிருக்கிறபடி; விடிவுக்கு உடலன்று'' என்ன;

''கீழ்ச்சொன்னவை எங்களுடைய அந்யதா2ஜ்ஞாநமும் விபரீதஜ்ஞாநமுமா கிறது; விடிந்ததில்லை என்கைக்கு அடையாளம் நீ சொல்லாய்'' என்ன; ''அஞ்சுலக்ஷம்

A திருவாய் 5-4-9. B திருப்பள்ளி-4.

குடியிலுள்ள பெண்களுக்கெல்லாம் அவதியில்லை; இங்கெல்லாமாக ஆயிரம்பேர் போராது காண் வந்தது; அல்லாதாருணர்ந்துவர வேண்டாவோ? அவர்களுணர்ந்து வாராதொழிந்தது விடியாததுக்கடையாளம்'' என்ன — (மிக்குள்ள பிள்ளைகளும்) 'உன்னையொழிந்தாரடையப் போனார்காண்' என்ன; — அவர்களோத, வந்தவர் மறுத்தோதுகிறார்கள்; ''அவர்கள் என்னை அழையாதேபோனார்களே !'' என்ன; ''பெருந்திரளாகையாலே, நீ போய்த்தில்லை என்றறியாமையாலும், போகிறவர்களோடே கூடப்போகைதானும் ப்ரயோஜனமாகையாலும் போனார்களத்தனை; உன்னை ஆராயாதே போனார்களல்ல'' என்ன; ''என்ன கார்யத்துக்குத்தான் அவர்கள் போய்த்து?'' என்ன — (போவான்போகின்றார்) வழிபோகையே உத்₃தே₃ஶ்யமாகப் போனார்கள்; தே₃ஶப்ராப்தியிலும் அர்ச்சிராதி₃மார்க்₃மே பே₄ாக₃ரூபமாயிருக்கக்கடவதிறே. ''கைகழியப் போனார்களாகில் இனி நான் என்? என்னையொழியவும் போகவல்லார்களானார்களே'' என்ன; ''அது செய்தபடி கேட்டிலையோ? நீ வாராமை அறிந்தவாறே 'இன்னாள் வந்திலள்' என்றோம். பின்னை போகமாட்டிற்றிலர்கள்''—(போகாமல்காத்து) அவர்களைத் தலைக்காவலிட்டோ செய்தது? A ''திருவாணைநின்னாணை'' என்று ஆணையிடவேணுமோ? ''நீபோந்திலை'' என்று ஒருவார்த்தை சொல்லுங்காட்டில் விலங்கிட்டாற்போலே கால்நடை தாராமல் நின்றார்கள்; போவார்க்குக் காலையொழியப் போகப்போமோ? ''அவர்களை அங்கே நிறுத்தினிகோளாகில், நீங்கள் இங்கேவந்ததென்?'' என்ன - (உன்னைக்கூவுவான்) போகைதானே உத்₃தே₃ஶ்யமாகப் போனாற்போலே, உன்னைக்கூவுகைதானே ப்ரயோஜநமாக வந்தோம். (வந்துநின்றோம்) 1. ''உத்தரம் தீரமாஸாத்₃ய க₂ஸ்த₂ ஏவ வ்யதிஷ்ட₂த'' என்னும்படியே உன் பக்கலிலே வந்து கால்கள் தரையிலே பாவிநிற்கப்பெற்றோம். ராவணப₄வநத்தை விட்டுப் பெருமாளெல்லையிலே புகுந்தபின்பிறே அவன் த₄ரித்துநின்றது. ''நீ போந்திலை'' என்றபோதைத் துணுக்குத்தீர, உன்வாசலிலே வந்து நல்தரிக்கப் பெற்றோம்.

''அப்பெண்கள் திரளெல்லாங்கிடக்க, என்வாசலிலே வந்து கால்பாவுகைக்கு ஏற்றமென்? நீங்களென்னையொழிய த₄ரியாதிருக்க, நான் உங்களுக்குப் புறப்பட்டு முகங்காட்டாதிருந்தேனென்று போரவெறுத்திகோளிறே'' என்ன— கோதுகலமுடைய பாவாய்) ''உ௱ வாசலிலே புகுந்து போகவே க்ருஷ்ணன்பக்கல் முகம்பெறலாம்படியன்றோ உன்மதிப்பு, எங்களுக்கு வெறுப்பென்? உன்வாசலிலே வந்து உன் பேரைச் சொல்லி அழைக்கைக்குமேற்பட ஏற்றமுண்டோ எங்களுக்கு? அவனாலும் ஸிரஸாவஹிக்கப்படுவாளாய், எங்களுக்கு உன்னையொழியச் செல்லாதபடியிருப்பாயாய், எங்களுக்கு க்ருஷ்ணன் பக்கல் புருஷகாரபூ₄தையாயிருப்பாளொருத்தியன்றோ நீ'' (பாவாய்) நிருபாதி₄கமான ஸ்த்ரீத்வத்தையுடைய உனக்கு எங்கள் ஆற்றாமை தெரியாமையில்லையிறே. B பெண்ணின் வருத்தமறியாதவன்படியாகவோ நீயும்? ''முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே'' என்று ப₄ட்டர். ஒரு பிறவி பிறந்து அறியவேணுமிறே அதுக்கு. (எழுந்திராய்) புறப்பட்டு எங்கள் திரளிலே வந்து கலக்கவேண்டா. அங்க₃ப்ரத்யங்க₃ங்களினுடைய பரிஸ்பூ₄ரணங்களே அமையும். (எழுந்திராய்) நாங்கள் உன் வாசலிலே வந்தெழுப்ப, நீ எழுந்திருந்தாய் என்னும் ஏற்றம் எங்களுக்குத் தாராய்.

A திருவாய் 10-10-2, B நாச்-திரு 13-1.

''எழுந்திருந்து நாமெல்லாங்கூடிப் பெறப்புகுகிற ப்ரயோஜநமென்?'' என்ன—(பாடி) ''க்ருஷ்ணன், பெண்கள்'' என்று வாய்க்காவலிட்டுக் கிடக்கிற ஊரிலே இவ்விரண்டுநாளுங் கழிந்தால் அவனை நமக்குப் பாடக்கிடைக்குமோ? ஆஸுரப்ரக்ருதிகளான ஹிரண்யாதி₃கள் படைவீடுகள்போலே திருநாமஞ்சொல்லப் பொருர்களாய்த்து—பெண்கள் ப்ரஸங்க₃த்திலே மோஹிப்பர்கள் என்று. அவ்விழவுதிர 1. ''க்ருஷ்ணநாம புந:புந:'' என்கிறபடியே வாயாரத் திருநாமத்தைப்பாடி. (பறை கொண்டு) நாட்டுக்குப்பறை, தங்களுக்குக் கைங்கர்யம். கிட்டினவாறே ''உன்றன்னோடுற்றோமேயாவோம்'' (29) என்னக்கடவர்களிறே. 'இவை பின்னை அவன் நமக்குத் தரப்புகாநின்றானே?' என்ன—(மாவாய்பிளந்தானை) நம் விரோதி₄களைப் போக்கி நம் அச்சந்தவிர்த்த உபகாரகனன்றே. தாரானோ? (மாவாய்) ஸ்ரீநாரத ப₄க₃வான் ''நாம் முடிந்தோம்'' என்று கதறிக்கொண்டுவந்து விழும்படியிறே வந்து தோன்றினபடி. நமக்காகக் கேஶியைக்கொன்று திருவாய்ப்பாடியிலும் ஸ்ரீப்₃ருந்தா₃வநத்திலுமுண்டான வன்னியமறுத்து, பெண்ணும் பேதையும் சகடச் சாத்தாகப்போம்படி பண்ணினவன், நங்காரியம் செய்யானோ? 'அது பண்டிறே; இப்போது அவனல்லனே; 2. ''மது₄ராம் ப்ராப்ய கோ₃விந்த₃: கத₂ம் கோ₃குலமேஷ்யதி । நக₃ரஸ்த்ரீகலாலாபமது₄ ஶ்ரோத்ரேண பாஸ்யதி ॥'' என்கிறபடியே பெரிய நாக₃ரிகனாய், படைவீட்டிலேயேறி நக₃ரஸ்த்ரீகளுந் தானுமாய்ப் போனவன், நம்மைப்பார்க்குமோ? நங்காரியஞ் செய்யுமோ?' என்ன—(மல்லரைமாட்டிய) 'அங்கும் 3. ''ந ஸமம் யுத்₃த₄மித்யாஹு:'' —அங்குபோயும் நம்மோட்டைப் பெண்கள் கார்யமன்றோ செய்தது? அதுவும் நம் பேறன்றோ?' என்ன—(தேவாதிதேவனை) 'இப்போது அவனை ப்₃ராஹ்மணர், ஸர்வேஶ்வரனென்றுகாணும் சொல்லுவது. (தேவாதிதேவனை) 4. ''விது₃: க்ருஷ்ணம்—ஸர்வே தே₃வா தே₃வகீபுத்ர ஏவ'' 5. ''க்ருஷ்ண ஏவ ஹி'' 6. ''யதோ வா இமாநி'' இத்யாதி₃களிற்படியே காரணபூ₄தனென்று உபாஸ்யனாகக் காணுஞ் சொல்லுகிறது; அப்படி பெருமையுடையவன், அப₃லைகளான நம்மைப் பார்க்குமோ?' என்ன; 'அது நம்பேறன்றோ; அவனிருந்தபடியே உத்₃தே₃ஶ்யனன்றோ நமக்கு? நாம் போய் ஸேவிக்கிறோம்'—(சென்று நாம் சேவித்தால்) அத்தலை இத்தலையாய், அவன் வருகையும் ஸேவிக்கையும் தவிர்ந்தால், நாம் சென்று ஸேவிக்குமத்தனையன்றோ? அப்படி ஸேவித்தால் நம் கார்யஞ் செய்யாதொழியுமோ? செய்திலனாகில் ஸ்ரீப₄ரதாழ்வான் பட்டதுபடுகிறோம். 7. ''ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா'' என்னும்படியே அவன் நெஞ்சிலே புண்படுத்துகிறோம். 8. ''ஏபி₄ஶ்ச ஸசிவைஸ்ஸார்த்த₄ம்''. 'கீழ்ச்சொன்னவையெல்லாம் நமக்கில்லையேயாகிலும், ஆர்த்தி கண்டால் காகத்துக்கிரங்கினமாத்ரம் நமக்கிரங்கானோ?'— (ஆவாவென்றாராய்ந்தருள்) 9.''க்ருபயா பர்யபாலயத்'' என்று உகவாதார் பெறுவது உகந்தார்க்குக் கிடையாதோ? முறைகெட நாம் சென்று ஸேவித்தால், வந்தேறியான ப்ரணயித்வமன்றோ போகலாவது; ஆர்த்தர்பக்கல் பண்ணும் க்ருபையும் போமோ? தானுளனாகில் உண்டானது போமோ? பாடிப் பறை கொள்ளுகிறோம்; போய் ஸேவிக்கிறோம்; அத்தலைக்கு ப்ரியமாகக் கைங்கர்யம் பண்ணுகிறோம். இப்படிகளாலே அத்தலையை உகப்பிக்கையிறே ஸ்வரூபம். 10. 'ப்ரஹரிஷயிஷ்யாமி'யிலேயிறே அந்வயம். 11. ''ப்ரீயதே ஸததம் ராம:'' — ப₂லம் கொடுக்க அவஸரம் பெறான் என்கிறது. ஆனபின்பு எழுந்திராய்' என்கிறார்கள். 8.

ஈராயிரப்படி — எட்டாம் பாட்டு

அவ:— எட்டாம்பாட்டு. பின்னையும் ஒருபெண்பிள்ளை வாசலிலே சென்று எழுப்புகிறார்கள்.

வ்யா:— (கீழ்வானமித்யாதி₃) 'கிழக்கு வெளுத்தது, எழுந்திராய்' என்கிறார்கள். 'ஆண்களும் வ்ருத்₃தை₄களும் உணருவதுக்கு முன்னே எழுந்திராய்' என்கிறார்கள். '1. "பா₄ஸ்கரேண ப்ரபா₄ யதா₂", "திங்கள் திரு முகத்துச் சேயிழையார்" (30) என்கிறபடியே, நீங்களெல்லாம் கிழக்கு நோக்கி 'விடிந்ததோ இல்லையோ?' என்று பார்க்க, உங்கள் முகத்தினொளி கீழ்திக்கிலே சென்று தாக்கி உங்கள் முகத்திலே வந்து ப்ரதிப₂லிக்கையாலே கிழக்கு வெளுத்ததாயிருக்கிறதத்தனை: இது அந்யதா₂ஜ்ஞானம்; மற்றடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன— (எருமை சிறுவீடு இத்யாதி₃) "சிறுவீடு—பனிப்புல்லு மேய்ச்சலுக்குக் காலமே விட்டு அவை மேய்கைக்காக எங்கும் பரந்தனகாண்; ஸ்ரீநந்த₃கோ₃பர்க்கு முத்திறமுண்டு; அவற்றின் பின்னே க்ருஷ்ணனும் போம்; பின்னை யாரைக் காண்பது? எழுந்திராய்" என்ன; "உங்கள் முகத்தில் ஒளியைக்கண்டு இருள் திரண்டு போகிறினவித்தனை" என்ன, 'விடிந்ததில்லையென்று உன்னால் சொல்லலாவதுண்டோ' என்ன "பஞ்சலக்ஷம் குடியில் பெண்களுக்காக நீங்கள் இத்தனை பேரோவுள்ளது? அல்லாதார் உணராமையாலே விடிந்ததில்லை" என்ன— (மிக்குள்ள பிள்ளைகளும்) அவர்கள் ஆராயாதே போனார்கள்; நீ எழுப்பக் கிடந்தாய். (போவான் போகின்றாரை) போகைதானே ப்ரயோஜனமாகப்போனார்களென்ன; "நாம் இனி அங்கென் அவர்கள் போனார்களாகில்?" என்ன— (போகாமல்காத்து) அவர்களைக் காற்கட்டச் செய்தோம். A "திருவாணை நின்னாணை" என்ன வேண்டாவே இவர்களுக்கு. (உன்னைக் கூவுவான்) நீங்கள் தான் எழுப்புகிறதென்னென்ன, "இன்னார்வாசலிலே வந்து எழுப்பினார்கள்" என்னும் தரம் பெறுகைக்காக; எங்களுக்கு இதுவே ப்ரயோஜனம். (வந்து) 2. "உத்தரம் தீரமாஸாத்₃ய". (நின்றோம்) 2. "கூஸ்தா₂ ஏவ வ்யதிஷ்டத". (கோதுகலமித்யாதி₃) எங்கள் திறத்தாரோ மிகுத்தள்ளுண்டார்? (கோதுகலமுடைய) இங்கே புகுந்து போகவே எம்பெருமான் கைக்கொள்ளவேண்டும்படி அவனாலே கொண்டாடப்படுமவள். (பாவாய்) 3. "நாரீணாமுத்தமா வதூ₄:" என்று நிருபாதி₄கமான ஸ்த்ரீத்வமுடையளாகை. (எழுந்திராய்) நாங்கள் உன்னை உணர்த்த உணர்ந்தாயாகிற பெரிய தரத்தை எங்களுக்குத் தாராய். 4. "ஆத்மாநம் பூஜயந்ராம" இத்யாதி₃. ப₄ட்டர் விடியுந்தனையும் கண்வளர்ந்தருள, சிஷ்யர்களெல்லாரும் திருவாசலிலே வந்திருக்குமாபோலே, (பாடிப் பறை கொண்டு) நாட்டுக்கு நோன்புக்குப் பறை; தங்களுக்கு ஸேவிக்கை ப₂லம்.

(மாவாய் பிளந்தானை) 'நாம் சென்றால் நம் அபேக்ஷிதம் செய்யுமோ?' என்னில்: நமக்காகக் கேசியைப் போக்கி நம்மையும் தம்மையும் உண்டாக்கித் தந்தவனன்றோ; ஸ்ரீப்₃ருந்தா₃வனம் கேசியோடே வன்னியமற்றது; பின்பு பெண்ணுக்கும் பேதைக்கும் ப₄யங்கெட்டு உலாவித் திரியலாய்த்து. (மல்லரை

A திருவாய் 10-10-2.

மாட்டிய இத்யாதி₃) இப்போது பெரிய நாக₃ரிகனும் நமக்கு விநியோக₃ப்பட ஸுலப₄னாயிருக்கை. (மல்லரைமாட்டிய) 1. "ஸக்₂ய: பஶ்யத" என்கிறபடியே அவ்வூரில் பெண்களுக்கு உதவின இது தங்களுக்கும் உதவிற்றென்கிறார்கள். (தேவாதி தேவனை) 2. "ஜாதோऽஸி தே₃வதே₃வேஶ" 3. "ஸோஹம் தே தே₃வதே₃வேஶ" A "அவரை நாம் தேவரென்றஞ்சினோமே". (சென்று நாம் சேவித்தால்) 4. "பத்₃ப்₄யாமபி₄க₃மாச்சைவ" என்றும், 5. "விபீ₄ஷணமுபஸ்தி₂தம்" என்றும், 6. "உபஸ்தே₂யைருபஸ்தி₂த:" என்றும் அவன் நெஞ்சு புண்படுகைக்குடலாக அவனிருந்த விடத்தே சென்று அவன் செய்வதை நாம் செய்துவிடுகிறோம். நாம் 7. "ஏஹி பஶ்ய ஶரீராணி" என்று விரஹம் தின்ற உடம்பைக்காட்டுகிறோம். 8. "ப்₄ராது; ஶிஷ்யஸ்ய தா₃ஸஸ்ய"—ப்ரணயித்வம் போனாலும் பொதுவான ஆர்த்த ரக்ஷணம் விடுமோ? (ஆவா வென்றாராய்ந்தருள்) 9. "ஆந்ருஶம்ஸ்யம் பரோ த₄ர்ம:" என்று சொல்லிவைத்தும் அதுஅநுஷ்டி₂யாதே இருக்குமோ? அவன் பக்கல் ஒரு தட்டில்லை; நம் குறையத்தனை; கடுகப் புறப்படவமையும் என்கிறார்கள். 8.

நாலாயிரப்படி—எட்டாம்பாட்டு

அவ:—எட்டாம்பாட்டு (கீழ்வானம்) "இதுக்குமுன்பு சென்ற காலங்களுமெல்லாம் தப்பிக் கிழக்கு வெளுத்தது கிடாய்" என்று உணர்ந்த பெண்பிள்ளைகளெல்லாரிலும் கொண்டாட்டமுடையாளொரு பெண்பிள்ளை வாசலிலே சென்று எழுப்புகிறார்கள்.

வ்யா:—(கீழ்வானம்) "இடிவிழுந்தாலும் கிடந்துறங்குமத்தனையோ! கிழக்கு வெளுத்ததுகாண், எழுந்திருந்துகொள்ளாய்" என்கிறார்கள். "ஆண்களும் வ்ருத்₃த₄ர்களும் உணர்வதுக்கு முன்னே எழுந்திராய்" என்கிறார்களாகவுமாம். B "வெண்ணிறத்தோய் தயிர்" என்று தயிர் வெளுக்கத் தோய்ந்தவாறே விடிந்ததென்றறிகையாலே உறங்காதே பலகால் தயிரைப் பாராநிற்பர்கள்; அத்தாலே 'கிழக்கு வெளுத்தது' என்ன, "இரவெல்லாம் கிழக்குநோக்கி விடிந்ததோ இல்லையோ என்று பார்க்கிற உங்கள் முகத்தினொளி கீழ்தி₃க்கிலே சென்று தாக்கி உங்கள்முகத்திலே வந்து ப்ரவேஶிக்கையாலே கிழக்கு வெளுத்ததாயிருக்கிறது. அது அந்யதா₂ஜ்ஞானம்; மற்றடையாளங்களுண்டாகில் சொல்லுங்கோள்" என்ன—(எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) 'சிறுவீடு—பனிப்புல்மேய, காலத்திலே விட்டு வயல்களெங்கும் பரந்தனகாண்' என்ன, 'ஸ்ரீநந்த₃கோ₃பர்க்கு முத்திறமுண்டு; அவற்றின்பின்னே க்ருஷ்ணன்போம்; பின்னை யாரைக் காண்பது? எழுந்திராய்' என்ன, "நீங்கள் 'திங்கள் திருமுகத்துச் சேயிழையார்' (30) ஆகையாலே உங்கள் திருமுகத்திலொளியைக்கண்டு இருள் திரண்டு போகிறதித்தனை; அந்யதா₂ஜ்ஞானம்." அருணோத₃யத்துக்கு அஞ்சி இருள் சிதறிப்போகிறதென்னவுமாம். C "மேட்டிள மேதிகள் தளைவிடுமாயர்கள்" என்று இவள் தமப்பனார் எம்பெருமானை எழுப்பினார்; இவர்கள் இவளை எழுப்புகிறார்கள். (சிறுவீடு) 'சிறுவீடு பெருவீடு' என்று பெரியாழ்வார் வயிற்றில் பிறந்து அக்₃நிஹோத்ரத்தில் வாசியறிகை தவிர்ந்து இடைமுடியும் இடைநடையும் இடைப்பேச்சுமாய் இவற்றின் வாசியறிவதே! "எருமை பரந்ததல்ல; ஆதி₃த்ய கிரணங்

A திருநெடு 21. B பெரியாழ் திரு 3-8-9. C திருப்பள்ளி-4.

களுக்கு உளாந்து இருள் சிதறிப்போகிறபடிகாண்'' என்று இவர்களுக்குச் சொல்ல, 'நாங்கள் ப்ரமித்தோமாயிடுக, விடிந்ததில்லை என்று உன்னால் சொல்லலாவதுண்டோ?' என்ன, 'அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களுக்கு நீங்களாயிரம் பெண்களிவ்வளவோ வுள்ளது? அல்லாதாரெல்லாம் உணராமையாலே விடிந்ததில்லை' என்ன; 'அவர்களோ தவதவ நாறுகிறார்கள்; உன்னிலும் பிள்ளைகள்; அவர்கள் ஆராயாதே போனார்கள்; நீ எழுப்பக்கிடந்தாய்' (போவான் போகின்றாரை) 'போகையே ப்ரயோஜநமாகப் போனார்கள்,' என்ன, 'நான் இனி அங்கு என் அவர்கள் போனார்களாகில்?' என்ன—(போகாமல் காத்து) ''அவர்களைக் காவலிட்டோ செய்தது;' செய்யாதன செய்யோம்'(2) என்ற வார்த்தையை அறிந்திகொளோ? என்று நம்முடைய வ்யவஸ்தையை உணர்த்தி நீ வந்ததில்லையென்ன, விலங்கிட்டாற்போலே நின்றார்கள்; காலையொழிய நடக்கப்போமோ?'' 'நீங்கள் அவர்களை ஆணையிட்டுத் தடுத்திகொளோ?' என்ன, A ''வாசம்செய் பூங்குழலாள் திருவாணை'' என்ன வேண்டாவே இவர்களுக்கு; நீ வந்திலை யென்னவமையும்; கால் போகமாட்டார்கள்.' 'நீங்கள்தான் நின்றதென்?' என்ன—(உன்னைக்கூவுவான்) இன்னார் வாசலிலே வந்து எழுப்பினார்களென்று தரம்பெற, எங்களுக்கு இதுவே ப்ரயோஜநம் போரும். (வந்து) 1. ''உத்தரம் தீரமாஸாத்₃ய''; (நின்றோம்) 1. ''க₂ஸ்த₂ ஏவ வ்யதிஷ்ட₂த''.

(கோதுகலமுடைய) எங்கள் திறத்தாரோ இங்குத் தள்ளுண்டு நிற்பார்? B ''புள்ளுவம் பேசாதே போகுநம்பி'' C ''கழகமேறேல் நம்பி'' என்னுமிங்குத்தைக்கு எங்களோடு அவனோடு வாசி என்? (கோதுகலமுடைய) இங்கே புகுந்துபோகவே எம்பெருமான் கைக்கொள்ளவேண்டும்படி அவனாலே கொண்டாடப்படுமவள். அவனிலும் ததீ₃யரை உகக்கும் வேண்டப்பாடாகவுமாம். (பாவாய்) 2. ''நாரீணாமுத்தமா வதூ₄:'' நிருபாதி₄கஸ்த்ரீத்வமுடையளாகை. (எழுந்திராய்) நாங்கள் உன்னை உணர்த்த உணர்ந்தாய் என்கிற பெரிய தரத்தை எங்களுக்குத் தாராய். 3. ''ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்ச₂ஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா'' இத்யாதி₃வத். ப₄ட்டர் போதுவிடியுந்தனையும் கண்வளர்ந்தருள, ஶிஷ்டர்களெல்லாரும் கொண்டகோலங்களும் தாங்களுமாய் வந்து கிடக்குமாபோலே. 'எதுகார்யமாக நீங்கள் எழுப்புகிறது?' என்ன—(பாடிப்பறைகொண்டு) நாட்டார் நோன்புக்குப் பறை. தங்களுக்கு ஸேவிக்கை ப₂லம். (பாடி) ''ஹிரண்யாய நம:'' இறே. பண்டு வாய் காவலிடுவர்கள்; இப்போது அது வேண்டாவே.

(மாவாய் பிளந்தானை) 'நாம் சென்றால் நம் அபேக்ஷிதம் செய்யுமோ?' என்னில்; நமக்காகக் கேஶியைப்போக்கி, நம்மையும் தன்னையும் உண்டாக்கித் தந்தவனன்றோ; ப்₃ருந்தா₃வநத்தில் கேஶியோடே வன்னியமறுத்துப் பின்னை பெண்ணுக்கும் பேதைக்கும் ப₄யம்கெட்டு உலாவித்திரியலாய்த்து. (மல்லரைமாட்டிய தேவாதிதேவனை) 'அவன் பண்டன்றோ காணச்சிறையாய்க்கிடந்தது. அவன் இப்போது பெரியனாய், 4. ''மது₄ராம் ப்ராப்ய'' இத்யாதி₃ப்படியே நாக₃ரிகனாய், நமக்கு வினைக்கொம்பாய்ப் போனான்; நம் க்ருஷ்ணனை இப்போது ப்₃ராஹ்மணரடைய ஸர்வேஶ்வரன், தே₃வதே₃வனென்றுகாணும் சொல்லுகிறது' என்ன; (மல்லரை மாட்டிய) அங்குப்போயும் நம்

A திருவாய் 10-10-2. B பெரு-திரு 6-7. C திருவாய் 6-2-6.

கார்யமன்றோ செய்தது. 1. "ஸக்₂ய: பஶ்யத" என்கிறபடியே அவ்வூரில் பெண்களுக்கு உதவினதும் தங்களுக்கு உதவினதென்றிருக்கிறார்கள். 2. "ஜாதோஸி தே₃வதே₃வேஶ" 3. "ஸோஹம் தே தே₃வதே₃வேஶ" A "அவரை நாம் தேவரென்றஞ்சினோமே" என்றும். 'அவன் வேண்டப்பாட்டோடேயிருக்கிலோ?' என்னில் — (சென்றுநாம் சேவித்தால்) அது ஆர்க்கழகு? நம் முறையை நாம் பெற்றோமாகிறோம். அவன் முறைகெடில் அலைந்திறே அவர்களிருப்பது. (சென்று) 4. "உபஸ்தே₂யைருபஸ்தி₂த:" 5. "ஶரண்யஶ்ஶரணுக₃தம்" 6. "பத்₃ப்₄யாமபி₄க₃மாச்சைவ" 7. "விபீ₄ஷணமுபஸ்தி₂தம்" 8. "ஸம்ப்ராப்தம்" என்று அவன் நெஞ்சு புண்படுகைக்கு உடலாக அவனிருந்தவிடத்தே சென்று அவன் செய்வுத்தை நாம் செய்கிறோம். 9.'ஏஹி பஶ்ய ஶரீராணி'— விரஹம் தின்ற உடம்பைக்காட்டுகிறோம். B "மாசுடையுடம்பொடு தலையுலறி" 10. "உபவாஸக்ருஶாம் தீ₃நாம்". (சேவித்தால்) ஸ்ரீ ப₄ரதாழ்வான் படுத்துமத்தை நாம் படுத்துகிறோம். 11. "ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா" என்னப்பண்ணுகிறோம். 12. [ஏபி₄ஶ்ச ஸசிவைஸ் ஸார்த்த₄ம்] பெருமாள் இரங்குகைக்காக ஆர்த்தர் பலரையும் திரட்டிக்கொண்டுபோனபடி. அவர்களுக்குக் கைகேயீஸம்ப₃ந்த₄மில்லையே. இரங்கவுமாமே. 12. [ஶிரஸா யாசிதோ மயா] பசியர் வயிற்றைக்காட்டுமாபோலே திருவடிகளிலடிமைசெய்யப் பெருமையால்உருவின தலையைக் காட்டுகிறார். 13. "யாவந்ந சரணௌ" 12. [ப்₄ராது:] உம்முடைய தம்பியல்லேனோ. 12. [ஶிஷ்யஸ்ய] உம்மோடேயன்றோ நாம் மந்த்ரங்கள் கேட்டது. 12. [தா₃ஸஸ்ய] உமக்கு விற்கவும் ஒத்திவைக்கவும் அடியனல்லேனோ? 12. [ப்ரஸாத₃ம் கர்த்துமர்ஹஸி] கீழ்ச்சொன்னவை ஒன்றுமில்லாவிட்டாலும் ஆபத்துக்கண்டால் காகத்துக்கு இரங்கினாற்போலேயாகிலும் இரங்கவேண்டாவோ? (நாம் சேவித்தால்) அத்தலை இத்தலையானால். ஆர்க்கழகு? அவன் ப்ரணயித்வம் போனாலும் பொதுவான ஆர்த்தரக்ஷணம் போமோ?

(ஆவாவென்றாராய்ந்தருளும்) 'ப்ரணயித்வம் குடிபோனாலும் ஸத்தாப்ரயுக்தமான ஆர்த்தரக்ஷணம் போமோ? 14. "ஆந்ருஶம்ஸ்யம் பரோ த₄ர்ம:" என்று சொல்லிவைத்து அநுஷ்டி₂யாதே பேசாதிருக்குமோ? அவன் பக்கல் ஒருதட்டில்லை. நம் குறையே; புறப்பட்டுக்கொள்' என்கிறார்கள். 8.

ஸ்வாபதே₃ஶவ்யாக்₂யாநம் — எட்டாம் பாட்டு

அவ :— எட்டாம்பாட்டு. (கீழ்வானம் இத்யாதி₃) இப்பாட்டில் ப₄ாக₃வத ஶேஷத்வபர்யந்தமான ப₄க₃வச்சே₂ஷத்வமுடையளாகையாலே ப₄க₃வத₃பி₄மதரானவரை எழுப்புகிறார்கள்.

வ்யா :— (கீழ்வானம் வெள்ளென்று) "வெள்ளென்று" என்றது — வெள்ளென்றது என்றபடி. 'அசேதநத்துக்கும் சைதந்யமுண்டாம்படி ஸத்த்வோத்தரமான காலமாயிற்று : எழுந்திராய்' என்ன; 'அசேதநத்துக்குச் சைதந்யம் உண்டாய்த்தது, ஸத்த்வோத்தரமான காலக்ருதமல்ல; C "மரங்களுமிரங்கும் வகை" என்கிறபடியே உங்கள் ஸ்வாநுமாநக்ருதம்; வேறு அடையாளம் உண்டோ?' என்ன;

A திருநெடு 21, B நாச்-திரு 1-8, C திருவாய் 6-5-9.

ஒன்பதாம் பாட்டு

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூப(ம)ம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— தூ மணி மாடத்து — தூய்மையை இயற்கையாக உடைய ரத்னங்களினால் இழைக்கப்பெற்ற மாளிகையில், சுற்றும் — எல்லாவிடத்திலும், விளக்கு எரிய — மங்குள தீபங்கள் ஒளிவிடவும், தூப(ம)ம் கமழ — (அகில் முதலியவற்றின்) புகைமணம் வீசவும், துயில் அணைமேல் — (படுத்தாரைத்) தூங்கச்செய்யும் படுக்கையின் மேல், கண் வளரும் — கண்ணுறங்குகிறவளான, மாமான் மகளே — மாமன் மகளே! மணி கதவம்

ஸ்வா:- (எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) அஜ்ஞாநமானது ஸத்த்வோதயகாலத்திலே விடப்பட்டு, தனக்கு அபாஶ்ரயம் தேடிப் போகாநின்றது காணென்ன;— 'அதுவும் உங்கள் ஸந்நிதியாலே ஸந்நிஹித சேதந அஜ்ஞாநம் போம்; உங்களைப் பிரிந்தவாறே பழையபடியே உண்டாம்; அது ஸத்வகுணக்ருதமன்று' என்ன;—'ஆனால், விடியாமைக்கு அடையாளம் என் சொல்லுகிறாய்?' என்ன; 'உங்களையொழிந்த பகவத்ப்ரவணர் உணராமை' என்ன;—

(மிக்குள்ள பிள்ளைகளும்) 'நம்மையொழிந்த பாகவதரெல்லாரும் போனார்கள்' என்ன, — (போவான் போகின்றாரைப் போகாமல் காத்து) பகவத்ஸந்நிதிக்குப் போகையே ப்ரயோஜநமாகப் போமவர்களை, பாகவதரை முன்னிட்டல்லது திருவடி தொழக்கடவோமல்லோமென்கிற நியமத்தையுணர்த்தி, போகாமல் தடுத்து. (உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்) உன்னையெழுப்பினோமென்கிற அதிஶயம் பெறுகைக்காக உன்வாசலிலே வந்து நின்றோம். (கோதுகலமுடைய பாவாய்) பகவதபிமாந விஷயபூதராய் அநந்யார்ஹரான ஸ்வாமிநீ! (எழுந்திராய்) நீரெழுந்திருந்தால் நமக்கு ஏதேனும் குறையுண்டோ?

எழுந்தால் செய்யவேண்டுவதென்னென்ன, சொல்லுகிறார்கள் — (பாடிப் பறைகொண்டு) பாடுகையாகிற புருஷார்த்தத்தை லபித்து. (மாவாய் பிளந்தானை) அஹங்கார நிராஸகனை. (மல்லரை மாட்டிய) காம க்ரோத நிவர்த்தகனை. (தேவாதிதேவனை) நித்யஸூரி நிர்வாஹகனை. (சென்று) ப்ராப்யத்வரையாலே சென்று, (நாம்) அவன் வர இருக்கக்கடவ நாம். (சேவித்தால்) அத்தலை இத்தலையானால். (ஆவாவென்று) க்ருபை பண்ணி. (ஆராய்ந்தருள்) விசாரிக்கும். 8.

தாள் — மாணிக்கக் கதவுகளின் தாள்களை, திறவாய் — திறந்துவிடவேண்டும்; மாமீர் — மாமியே!, அவளை எழுப்பீரோ — உம்முடைய மகளைத் துயிலெழுப்ப வேணும்; உன் மகள் தான் — உன்னுடைய மகள், ஊமையோ — வாய் பேசமாட்டாத ஊமைப்பெண்ணோ? அன்றி — அல்லாவிடில், செவிடோ — காதுகேளாத செவிடியோ? அனந்தலோ — (களைப்பினால்) உறங்குகிருளோ? ஏமப்பட்டாளோ — காவலிடப்பட்டாளோ? பெருந் துயில் மந்திரப்பட்டாளோ — நெடுநேரம் தூங்கும்படி மந்திரத்தாற் கட்டுண்டாளோ? மாமாயன் — நினைக்கவொண்ணாத ஆச்சரியச் செயல்களை உடையவன், மாதவன் — லக்ஷ்மீநாதன், வைகுந்தன் என்று என்று — ஸ்ரீ வைகுண்டநாதன் என்று இம்மாதிரியாக, நாமம் பலவும் நவின்று — பல பல திருநாமங்களை நாங்கள் சொல்லிவிட்டோம் (அப்படியும் உன்மகள் எழுந்திருக்கவில்லையே!)

மூவாயிரப்படி — ஒன்பதாம் பாட்டு

அவ :— ஒன்பதாம்பாட்டு. a ''க்ருஷ்ணன் வந்தபோது வருகிருன்'' என்று b தான் போகையை அநாத₃ரித்துக் கிடக்கிருளொருத்தியை எழுப்புகிருர்கள். c அதாவது — ஸ்வரூபத்தை உணர்ந்து வந்து அநுப₄விக்கையும் அவன் கார்யமிறே. 1. ''தத் தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்'' என்று இருப்பாளொருத்தி என்கை.

வ்யா :— (தூமணிமாடத்து) A ''துவளில் மாமணிமாடம்'' என்று—குற்றம் எடுத்துக்கழிக்கவேண்டாத நன்மையையுடைய மணியாலே செய்த மாடம். ஸம்ஸார க₃ந்த₄முண்டாய்க் கழிந்த முக்தர்க்கும், அஸ்ப்ருஷ்டஸம்ஸாரக₃ந்த₄ரான நித்யர்க்கும் உண்டான வாசி போந்திருக்கை. (சுற்றும் விளக்கு எரிய) மாணிக்கத்தினொளியாலே பகல்விளக்குப்பட்டிருக்கச்செய்தே மங்க₃ளார்த்த₂மாக விளக்கு எரிகிறது. d (சுற்றும் விளக்கு எரிய) e க்ருஷ்ணன் வந்தால் தன் கையைப் பிடித்து உலாவுமிடமடையப் e₁ படுக்கையும் விளக்குமாக்கி வைத்தபடி. புறம்பு நிற்கிறவர்களுக்கு உள்ளே விளக்கெரிந்தது தெரிகிறபடி எங்ஙனே? என்னில்; மாணிக்கக்குப்பிபோலே, புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றுநிற்கும்.

பெ. அ. ஒன்பதாம் பாட்டு. (தூமணி இத்யாதி₃) a''தூமணிமாடம்'' என்று தொடங்கி ''துயிலணை மேல் கண் வளரும்'' என்னுமளவும் கடாக்ஷித்து (க்ருஷ்ணன் வந்த போது வருகிருன்) என்றது, b ''மாமீர்'' இத்யாதி₃யைக் கடாக்ஷித்து, க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்துக்கு உபயுக்தமாக, (தான்போகையை அநாத₃ரித்துக் கிடக்கிருள்) என்றது. c மடலெடுத்தாகிலும் பெற வேண்டும் க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்துக்காகப் போகையை அநாத₃ரிக்கக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிருர் (அதாவது இத்யாதி₃)

d, e 'சுற்றும் ஏற்றின விளக்குகளெரிய' என்று அர்த்த₂ம் விவக்ஷித்து ''சுற்றும்'' என்றதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிருர் (க்ருஷ்ணன் வந்தால் இத்யாதி₃) e₁ (படுக்கையும்) என்றது — அர்த்தா₂பத்தி₃ஸித்₃த₄ம். அதாவது — தூமணி மாடமாகையாலே சுற்றும் விளக்கு வேண்டாமையாலும், மங்க₃ளார்த்த₂மாகில் ஒன்றே அமைந்திருக்கையாலும், ''சுற்றும்'' என்றது வ்யர்த்த₂மாகாமைக்காக ப்ரதிபர்யங்கம் மங்க₃ளதீ₃பம் வேணுமென்கை.

A திருவாய் 6-5-1.

f (தூபம் f_2 கமழ) g புகைகாணவொண்ணுதே பரிமளம் வெள்ளமிட. hA "சீருற்ற வகிற்புகை" இத்யாதி3யிற் சொல்லுகிறபடியே எங்களுக்கு அஸஹ்யமான பரிமளம் உனக்கு ஸஹ்யமானபடி எங்ஙனே? என்கை. i (துயிலணைமேல் கண்வளரும்) j க்ருஷ்ண விரஹத்தையும் ஆற்றவற்றுன படுக்கையிலே உறங்குகிற. k எங்களுக்கு B மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாயிருக்க, உனக்குப் படுக்கை பொருந்திக் கண்ணுறங்குவதே!

l (மாமான்மகளே) m ஸ்வாமிநியாயும் m_2 தோழியாயும் அநுப4வித்ததொழிய ப்ரக்ருதிஸம்ப3ந்த4த்தாலும் ஆண்டாள் அநுப4விக்கிருள்; n "மாமான்மகளே" என்று n_2 இட்டீடுகொள்ளுகைக்கு விடவொண்ணுத உறவு சொல்லுகிருள்; o திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ராக்ருத ஸம்ப3ந்த4ம் தனக்கு உஜ்ஜீவநமென்றிருக்கிருள். p ப4க3வத்ஸம்ப3ந்தி4களுக்கு எல்லாம் p_2 அடிக்கழஞ்சு பெற்றிருக்கிறபடி. q (மணிக்கதவம் தாள்திறவாய்) r நீங்களே திறந்துகொண்டு r_2 புகுருங்கோன்

பெ. அ. f, g "தூபம்" என்றபோதே பரிமளிக்கை அர்த்த2ஸித்3த4மாயிருக்கவும் "கமழ" என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (புகை இத்யாதி3) h இப்பரிமள ப்ராசுர்யத்தை இவர்கள் சொல்லுகைக்கு உட்கருத்தை அருளிச்செய்கிருர் (சீருற்ற இத்யாதி3) i, j துயிலைத் தாராநிற்கும் அணையென்று ஶப்3தா3ர்த்த2ம் திருவுள்ளம்பற்றி, இப்படி விஶேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (க்ருஷ்ண விரஹத்தையும் இத்யாதி3) k இப்படி சொன்னதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிருர் (எங்களுக்கு இத்யாதி3)

l, m "பாவாய்" என்னுதே, இப்படி ஸம்போ3தி4த்ததுக்கு அர்த்த2ம் அருளிச்செய்கிருர் (ஸ்வாமிநி இத்யாதி3) m "நாயகப் பெண்பிள்ளாய்" இத்யாதி3யைக் கடாக்ஷித்து (ஸ்வாமிநியாயும் என்றது) m_2 "சுற்றத்துத்தோழிமார்" என்றதைப்பற்ற (தோழியாயும் என்றது) n ப்ரக்ருதி ஸம்ப3ந்த4த்தைச் சொல்லவேண்டிணுல் மற்றும் முறைகளுண்டாயிருக்க, இப்படி ஸம்ப3ந்த4த்தைச் சொன்னதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (மாமான் இத்யாதி3) n_2 இட்டீடு கொள்ளுகை—வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுகை. o, p ப்ரக்ருதி ஸம்ப3ந்த4ம் த்யாஜ்யமன்றேவென்ன அருளிச்செய்கிருர் (திருவாய்ப்பாடியிலே இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே) p_2 அடிக்கழஞ்சு — ஶ்லாக்4யம். q, r 'மணி' என்று விஶேஷித்ததுக்கு உக்தி-ப்ரத்யுக்திமுகே2ந தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (நீங்களே இத்யாதி3) r_2 "புகுருங்கோ

சி, அ. ஒன்பதாம்பாட்டு. (தூமணி) i துயிலணை — நித்3ரையை உண்டாக்குகிற அணை; d, f, i "சுற்றும்" என்றது—"விளக்கெரிய" "தூபம் கமழ" "துயிலணை" என்கிற பத3த்ரயத்துக்கும் விஶேஷணம். f_2 கமழ—நாற. n ப்ரக்ருதிஸம்ப3ந்த4ம் அபேக்ஷிதமாளுலும் வேறொரு ஸம்ப3ந்த4த்தையிட்டு அழையாதே "மாமான் மகள்" என்கிறது என்? என்ன அருளிச்செய்கிருர் (மாமான் மகள் என்று இட்டீடுகொள்ளுகைக்கு இத்யாதி3) n_2 'இட்டீடு' என்றது — "ஊமையோ அன்றிச் செவிடோ" என்றத்தை, o "ஆத்ம ஸம்ப3ந்த4மன்றோ உத்3தே3ஶ்யம்; ப்ரக்ருதி ஸம்ப3ந்த4ம் கூடுமோ?" என்ன அருளிச்செய்கிருர் (திருவாய்ப்பாடியில் இத்யாதி3) p அத்தை உபபாதி3க்கிருர் (ப4க3வத் ஸம்ப3ந்தீ4த்யாதி3) அதாவது—ப4க3வத்ஸம்ப3ந்த4முடையவர்களுக்கு ஸம்ப3ந்த4ங்களெல்லாம் அதிஶ்லாக்4யமாயிருக்குமென்ற

ஞ.அ. ஒன்பதாம்பாட்டு. (தூமணி இத்யாதி3) i (துயிலணை) துயிலப்பண்ணும் அணை 9.

A திருவாய் 9-9-7, B திருவாய் 9-9-4.

என்ன; மாணிக்கங்களின் ஒளியாலே தாள் தெரிகிறதில்லை, நீயே திறவாயென்கிறார்கள்.

"அவர்கள் அழையாநிற்க, நீ பேசாதே கிடக்கிறது என்?" என்று தாயார் கேட்க, புறம்பு நின்றவர்கள் அதுகேட்டவாறே "மாமீர் அவளை எழுப்பீரோ" என்கிறார்கள். (மாமீர்) அவளுடைய திருத்தாயாரென்று அவளுறவாலே சொல்லுகிறார்கள். பின்னையும் உணரக் காணாமையாலே s சிவிட்கென்று "உன்மகள்தான் ஊமையோ" என்கிறார்கள்; t வ்யவஹார யோக்₃யையன்றே? என்கிறார்கள். u (அன்றிச் செவிடோ) v ஊமைக்கும் கேட்டுவந்து திறக்கலாம்; அதுக்குமேலே, செவியில் துளையில்லையோ? w எங்கள்வார்த்தை கேளாதபடி w_2 அந்யபரையோ? x (அனந்தலோ) y நெடும்போது க்ருஷ்ணநுப₄வம் பண்ணி, படுக்கையிற் சாய்ந்தது இப்போதோ? z (ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) a "ஏமம்" என்பது — காவல், b எழுந்திராமைக்குக் காவலிட்டாருண்டோ? c நெடும்போது உறங்கும்படி மந்த்ரவாத₃ம் பண்ணினாருண்டோ? A "மைய லேற்றி மயக்க உன் முகம் மாயமந்திரந்தான் கொலோ" என்று d அம்மான் பொடி தூவினாருண்டோ? என்கை.

"அவளுணரும்படி திருநாமங்களைச் சொல்லுங்கோள்" என்று திருத்தாயார் சொல்ல, 'நாங்கள் சொன்ன திருநாமங்கள் அநேகமன்றோ?' என்கிறார்கள்; அவைதான் எவையென்னச் சொல்லுகிறார்கள்:— e (மாமாயன்) ஆஶ்சர்ய கு₃ணசேஷ்டிதங்களாலே அப₃லைகளான பெண்களை எழுதிக்கொண்டவன்.

பெ.அ. ளென்ன" என்றதுக்கு — புகுருங்கோளென்று அபி₄ப்ராயமாக என்றபடி; இங்ஙனன்றாகில் மேல் "ஊமையோ" என்னக்கூடாதிறே.

s சிவிட்கென்று — ஶீக்₄ரமாகச் சீற்றமுண்டாய். t வ்யவஹாரம் — வார்த்தை சொல்லுகை. u, v, w "அன்றிச் செவிடோ" என்றதுக்கு இரண்டு அர்த்த₂ம் — 'ஊமையானவளவன்றிக்கே செவிடாயுமிருக்கிறாளோ' என்றும், அங்ஙனன்றிக்கே, 'செவிடுபோலேயிருக்கிறாளோ' என்றும். v அதில் முந்தினது (ஊமைக்கும் இத்யாதி₃) w இரண்டாவது (எங்கள் இத்யாதி₃) w_2 'அந்யபரையோ' என்றது — 'செவியுண்டாயிருக்க க்ருஷ்ணநுப₄வம் நடக்கிறதோ?' என்றபடி. x,y அனந்தல்—ஶ்ராந்தியோடே கூடின உறக்கமென்று ஶப்₃த₃ார்த்த₂ம் திருவுள்ளம்பற்றி ப்ரஸக்திபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நெடும்போது இத்யாதி₃) z, a, b, c "ஏமப்பட்டாளோ, பெருந்துயில் மந்திரப்பட்டாளோ" என்று விவக்ஷித்து ஶப்₃த₃ார்த்த₂ கத₂நபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஏமம் இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) d (அம்மான்பொடி) என்றது — 'அம்மான், அம்மான்' என்று கொண்டு பின்தொடரும்படியான , சொக்குப்பொடி என்றபடி. g (ஶ்ரிய:பதி) என்றது — ஶ்ரிய:பதித்வமென்றபடி.

சி.அ. படி. t (வ்யவஹாரயோக்₃யையன்றோ) என்றது—வாக்₃வ்யவஹாரயோக்₃யையன்றோ என்றபடி. w_2 (அந்யபரையோ)செவி உண்டாயிருக்க க்ருஷ்ணநுப₄வம் நடக்கிறதோ என்று தாத்பர்யாந்தரம். x "அனந்தல்" என்றது தெளிவுபாதியும் நித்₃ரைபாதியுமாயிருக்கிற அவஸ்தை₂. z, ஏமப்பட்டாளோ பெருந்துயிலுண்டாம்படி மந்திரப்பட்டாளோ' என்று "பட்டாளோ" என்றத்தை இரண்டிடத்திலும் கூட்டிக்கொள்வது. a ஏமம்—இரவும், காவலும்,

---

A நாச்—திரு 2-4.

f (மாதவன்) அதுக்கடியான g ஶ்ரிய:பதி; அந்த ஸௌலப்₁யத்துக்கு குருகுலவாஸம் பண்ணின இடம். h (வைகுந்தன்) i ஶ்ரிய:பதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான தே₃ஶவிஶேஷத்தை உடையவன், j அப்பெரிய மேன்மையுடைய ஶ்ரிய:பதியானவன்கிடீர் பெண்களுக்கு எளியனானென்கை.

k மேன்மைக்கு அடியான திருநாமங்களும், நீர்மைக்கு அடியான திருநாமங்களும், இரண்டுக்கும் நிதா₃நமான ஶ்ரிய:பதித்வத்துக்கு வாசகமான திருநாமங்களுமாக ஒரு ஸ்ரீஸஹஸ்ர நாமத்துக்குப் போரும் திருநாமங்கள் சொல்லிற்றென்கிறார்கள்.

l ''நாமம்பலவும் l₂ நவின்று — மாமீர் அவளை எழுப்பீரோ'' என்று அந்வயமாகவுமாம். 9.

பெ.அ. k, l ''என்றென்று நாமம் பலவும் நவின்றோம்'' என்று க்ரியையாக்கி, அதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (மேன்மைக்கு இத்யாதி₃) 9.

சி.அ. f. h, i ''வைகுந்தன்'' என்றதுக்கு ''மாதவன்'' என்றத்தோடே சேர்த்துத் தாத்பர்யம் (ஶ்ரிய:பதித்வத்தாலித்யாதி₃) e, f, h, j அன்றிக்கே ''வைகுந்தன் மாதவன் மாமாயன்'' என்றுகூட்டித் தாத்பர்யாந்தரம் (அப்பெரிய மேன்மையை இத்யாதி₃) e, f, h. k அன்றிக்கே ''வைகுந்தன் மாமாயன் மாதவன்'' என்று கூட்டித் தாத்பர்யாந்தரம் (மேன்மைக்கடியான திருநாமங்களுமித்யாதி₃) l₂ ''நவின்று''—சொல்லி.k,l₂''தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத் தூபம்கமழத் துயிலணைமேல் கண்வளரும் மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய் மாமீர்—உன் மகள்தான் ஊமையோ அன்றிச்செவிடோ அனந்தலோ ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்றோம், சொன்னாலுமெழுந்திராள், அவளை எழுப்பீரோ'' என்று அந்வயமாதல்; இந்த அந்வயத்துக்கு ''நவின்று'' என்றது நவின்றோம் என்றபடி. l இங்ஙனன்றிக்கே ''நாமம் பலவும் நவின்று மாமீர் அவளை எழுப்பீரோ'' என்று அந்வயம்.

இப்பாட்டுக்கு ஸ்வாபதே₃ஶம். 1. ''தத் தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்'' என்று பூர்வார்த்த₂ நிஷ்ட₂ராயிருப்பாரை, ப₄க₃வத் ப்ரேமாதிஶயத்தாலே ததே₃கபோ₄க₃ராயிருக்குமவர்கள் போ₄கா₃ர்த்த₂மாக ப்ரேரிக்கை அவர்களுக்கு ஸ்வரூபம் என்கை. 9.

ஆறாயிரப்படி—ஒன்பதாம்பாட்டு

அவ:—ஒன்பதாம் பாட்டு. பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லாரும் திரண்டு, ''உன்னை யொழிந்தாரடங்கலும் இங்ஙனே வந்துகிடக்கக் கிடந்துறங்குவதே!'' என்று பழியிட்டெழுப்புகிறார்கள். புறம்பு நிற்கிறவர்கள், இளையபெருமாளைப்போலே யும், முமுக்ஷுக்களைப்போலேயும், உள்ளுக்கிடக்கிறவள் நித்யஸித்₃த₄ரைப்போலேயுமாய், மைத்துனமைமுறையையுடையாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:—(தூமணிமாடம்) நிர்த்தோ₃ஷங்களான ரத்நங்களாலே செய்த மாடம். இவர்கள் விரஹதாபந்திர ஶைத்யோபாஶ்ரயமாக அநுஸந்தி₄க்கிறார்கள். ஆழ்வான் ''ஹிதாம்ஶுத்துக்கு ஒரு வைஷ்ணவனுடைய க்₃ருஹயாத்ரையை அநுஸந்தி₄க்க

அமையும்'' என்றாற்போலே, இவர்களும் இவர்களுடைய மாளிகையின் அழகை அனுபவிக்கிறார்கள். A ''துவளில் மாமணிமாடம்'' என்று—எடுத்துக் கழிக்க வேண்டா. அது, ஜீவாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதிகளைப்போலே; இது பரமாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதிகளைப்போலே; அங்கு—ப்ரத்வம்ஸாபாவம்; இங்கு—ப்ராகபாவம். அபஹதபாப்மத்வாதிகள் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உண்டாயிருக்கச்செய்தே ஹேயஸம்பந்தார்ஹமாயிறே இவன்வடிவிருப்பது. ஹேயப்ரதிபடமாகையாலே அநர்ஹமாயேயிருக்கும் அவன். இவ்வூரில் கழித்த ரத்நங்கள்கொண்டுபோலேகாணும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் மாளிகைகள் செய்தது. ராஜாக்கள், அந்த:புரத்தில் கழித்தவை கொண்டிறே தங்களுக்கு மாளிகைகள் செய்வது. 1. ''ஸ ததந்த:புரத்வாரம்'' B ''மாடமாளிகைசூழ் மதுரைப் பதி நாடி''. —உகந்தருளின நிலமெல்லாம் ஒருகுடியிருப்புண்டு இவளுக்கு. மாலாகார க்ருகம் தன்னதிறே. 2. ''ப்ரஸாதபரமௌ நாதௌ'' — உபயவிபூதியுக்தனாகையாலே ஐஶ்வர்யம் விஞ்சியிருக்கும்; அத்தையும் மேலிடும்படியாயிருக்கும் தண்ணளி. ஆஶ்ரயம் அதுவாகையாலே கழிக்கவொண்ணாமல் கிடக்கிறது நாதத்வம். (சுற்றும் விளக்கெரிய) இதொரு ஸம்பத்தே! ஒருகோடி விளக்கிறே புறம்பேநின்று புகைகிறது. புறம்பு நிற்கிற நம்முடைய ஹ்ருதயங்கள் இருண்டு கிடக்க, உள்ளு விளக்கெரிகிறது வெறுமனன்றிறே; க்ருஷ்ணன் ஸந்நிஹிதனாகவேணுமிறே. திருச்சித்ரகூட பரிஸரத்திலே, பிராட்டியைக் கையைப்பிடித்துக்கொண்டு பெருமாள் உலாவினாற்போலே, இவள் கையைப் பிடித்துக்கொண்டு க்ருஷ்ணன் உலாவுமிடமிறே, அவ்வேபாதி, இடமெங்கும் படுக்கைகளும் விளக்குமாய்க்கிடக்கிறபடி. (எரிய) ப்ரகாஶாவஹமன்று, மங்களாவஹம். 'இவர்கள் புறம்பேநின்று, ''மணிக்கதவந் தாள் திறவாய்'' என்கிறவர்கள், உள்ளெரிகிற விளக்கறிந்தபடியென்?' என்னில்; மாணிக்கக்குப்பியிலே அகவாயிலுள்ளது நிழலிட்டுத் தோற்றுமாபோலே, தூமணி மாடமாகையாலே உள்ளெரிகிற விளக்குத் தோற்றுகிறது. (தூபம் கமழ) பரிமளம் ஸஹித்திருந்தது வெறுமனன்றிறே. விரஹதாபமில்லாதார்க்குப் பரிமளம் பொறுக்குமாகாதே! C ''சிருற்றவகிற்புகை'' என்னும்படியிறே இவர்கள்தஶை. (கமழ) கண்ணுக்குப் புகையின்றிக்கே பரிமளமேயாயிருக்கிறபடி. (கமழ-கண்வளரும்) பரிமளஞ் சிறிது குறையில் கண்ணுறங்காதாகாதே! (துயிலணைமேல் கண்வளரும்) நம்முடைய நெருப்புச் சிலர்க்குப் படுக்கையாவதே! D ''மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி''. இருவர்க்குப் படுத்த படுக்கையிலே ஒருத்திக்குப் பொருந்தும்போது அவனுமங்கேயுண்டாகவேணுமிறே. (துயிலணை) படுக்கைதான் விரஹார்த்தரையும் உறக்கவற்றாயிருக்கை. E ''நஞ்சரவிற்றுயிலமர்ந்த'' என்னுமாபோலே. (கண்வளரும்) இளைய பெருமாளைப்போலே உறங்காமைக்கு நாங்களும், உறங்குகைக்கு நீயுமாய் விட்டதிறே. 'அபிமதலாபமும் அவனால் செய்யலாகில் இவர்கள் பதறுகிறதென்?' என்றிருந்தாள் அவள்; 'உபேயம் அவனேயாகில் இவள் கிடந்துறங்குகிறதென்?' என்றிருந்

A திருவாய் 6-5-1. B நாச்-திரு 4-5. C திருவாய் 9-9-7. D திருவாய் 9-9-4.
E திருநெடு 12.

தார்கள் இவர்கள். (கண்வளரும்) உறங்குவார்க்குப் பாத₃ஸம்வாஹிநிகள் வேண்டாவோ? உள்ளுப்புக்காலும் இதாகாதேசெய்யப்பார்க்கிறது. ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்த₃ங்களன்று நிருபகம், ஶேஷத்வம். (கண்வளரும்) ப₄க₃வத்₃விஷயத்தில் அவகா₃ஹித்தால் கௌரவ்யதை தோற்றச் சொல்லவேணுமிறே. ப₄ட்டர்க்குச்சிலர், ''தொண்டனூர் நம்பி திருவடிச்சார்ந்தார்'' என்று விண்ணப்பஞ்செய்ய; ''அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்து போந்தபடிக்கு 'திருநாட்டுக்கு நடந்தார்' என்று சொல்லவேண்டாவோ?'' என்றருளிச்செய்தார். நம்பியேறுதிருவுடையார் தா₃ஸரிடையாட்டமாகவும் நஞ்ஜீயர் இப்படி அருளிச்செய்தார். (மாமான்மகளே) ஸ்வாமிநியாயும் தோழியாயும் அநுப₄வித்ததொழிய ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தாலும் அநுப₄விக்கிறார்கள். ''மாமான் மகளே'' என்று—இட்டீடுகொள்ளைக்கு விடவொண்ணாத முறைகட்டி(தேடி)க்கொண்டு சொல்லுகிறார்கள். திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ம் தனக்கு உஜ்ஜீவநஹேதுவாக ஆண்டாள் ஆசைப்பட்டபடி. ப₄க₃வத்ஸம்ப₃ந்தி₄களுக்கு எல்லாம் அடிக்கழஞ்சு பெற்றிருக்கிறபடி. அதுதானும், 1. ''ஹே க்ருஷ்ண ஹே யாத₃வ ஹே ஸகே₂தி'' என்று பொறுப்பித்துக் கொள்வதொரு ஸம்ப₃ந்த₄மாகவேணும். 'நீங்கள் ஆர்த்தைகளாய்ப் பதறிவருவுதிகோளென்னுமிடமறிந்து யந்த்ரத்தாலே திறக்கலாம்படிபண்ணிக்கொண்டு கிடந்தேன், திறந்து கொண்டு புகுருங்கோள்' என்ன,—(மணிக்கதவம் தாள்திறவாய்) 'மணிமாடமாளிகையாகையாலும், மணிக்கதவாகையாலும் சுவருக்கும் கதவுக்கும் வாசிதெரிகிறதில்லை, தே₃ஶிகரே திறக்கவேணும், நீயே திறவாய்' என்கிறார்கள். இவர்கள்தான், திறந்து நின்றாலும் சிலர் புகுரவிடவல்லது புகுரார்கள் காணும். (மணிக்கதவம் தாள்திறவாய்) து₃ர்யோத₄நன் நீருக்கும் ஸ்ப₂டிகமண்டபத்துக்கும் வாசியறியாதே தடுமாற, த்₃ரௌபதி₃ சிரித்தாற்போலே மைத்துனமை கொண்டாடிச் சிரிக்கவொண்ணாது; புறம்புள்ளார்க்கு உள்ளுள்ளவை ப்ரகாஶிக்கிறப்போலே உள்ளுள்ளார்க்குப் புறம்புள்ளாரார்த்தி தெரியாமையில்லையிறே.

'இவர்கள் ஆர்த்தைகளாய் வாசலிலே நின்று துவள, இவள் வாய் பேசாதே கிடந்துறங்குவதே!' என்று ஹ்ருத₃யத்திலிரக்கம் முகத்திலே தோற்றும்படியாய் 'நீ ஸ்வப்ரயோஜநபரையாய்க் கிடப்பதே!' என்று மகளைச்சொல்ல உபக்ரமித்தமை தோற்றவிருந்தாள் தாயார்; — (மாமீர்) என்கிறார்கள். அவள் திருத்தாயாரென்று ஸம்ப₃ந்தி₄ஸம்ப₃ந்தி₄களும் இவர்களுக்கு உத்₃தே₃ஶ்யராயிருக்கிறபடி. உள்ளுக்கிடக்கிறவளுகப்பு தாயாரளவுஞ் சென்றபடி. A ''அடிகளடியே நினையுமடியவர்கள் தம்மடியான்'' என்றும் B ''தொண்டர்தொண்டர் தொண்டர்தொண்டன்'' என்றும் சொன்னபடியே; C ''அன்னையுமத்தனும்'' என்றிறே இவளிருப்பது. (அவளை யெழுப்பீரோ) எங்களார்த்திக்கு உணராதவள் உம்முடைய இரப்புக்கோ உணரப் புகுகிறது? இவ்வளவிலும் உணரக்காணாமையாலே, சிவிட்கிட்டு (உன்மகள்) என்கி

A பெரிய திரு 2-6-10. B திருவாய் 7-1-11 C பெரிய திரு 3-7-7

ளுர்கள். பிராட்டி ப்ரணயகோபம் சக்ரவர்த்தியளவும் மேலிட்டு 1. ''பிது:'' என்றுற் போலே, அவள்பக்கல் சீற்றம்இவ்வளவும்வர, அசலிட்டு ''உன்மகள்'' என்கிறுர்கள். (ஊமையோ) வாக்₃வ்யவஹார யோக்₃யதையில்லையோ? ஆர்த்தரை, ஐயோ! என்ன வொண்ணுதபடியோ செல்லுகிறது? (அன்றிச்செவிடோ) ஊமைக்கும் கேட்டுவந்து திறக்கலாம். அதுக்குமேலே செவியில் துளையில்லையோ? ஆர்த்தைகளான எங்களு டைய சொல் கேளாதபடி அந்யபரையோ? அதுக்கும் அங்கேயோ விஷயம்? (அனந் தலோ) க்ருஷ்ணனுக்கு நெடும்போது ஆடல்கொடுத்துப் படுக்கையில் சாய்ந்தது இப்போதோ? நெஞ்சுக்கும் விஷயம்அங்கேயோ? (ஏமப்பெருந்துயில்) எங்களை உறங் காதபடி பண்ணினுற்போலே, இவளையும் உணராதபடி காவலிட்டாருண்டோ? நாங்கள்புக்கு உணர்த்தவொட்டாத வேளையிலே நெடும்போது உறங்கும்படி மந்த்ர ப₃த்₃தை₄யானுளோ? A 'உன்முகம் மாயமந்திரந்தான் கொலோ' என்று—அவனு டைய அம்மான்பொடி ப்ரஸித்₃த₄மிறே.

''நீங்கள் இவள் ப்ரக்ருதியறிந்தால் இங்ஙனல்லகாணுங்கோள் உணர்த்துவது, தென்றலும், சிறுதுளியும்போலே இவளுக்குத் திருநாமங்கள் சொல்லிகோள்'' என்று திருத்தாயார் சொல்ல, ''பல் பன்னிரண்டும் காட்டினேங்காண்'' என்கி றுர்கள்; நீங்கள் சொன்ன 'திருநாமங்கள் எவையென்ன — (மாமாயன்) ஆஶ்சர்ய கு₃ண சேஷ்டிதங்களாலே அப₃லைகளான பெண்களை எழுதிக்கொண்டு, அவர்களுக்கு இஷ்ட விநியோகா₃ர்ஹமாம்படி ப₄வ்யனுயிருக்குமவன். (மாதவன்) அந்த ஸௌலப்₄ யத்துக்கு கு₃ருகுலவாஸம் பண்ணினவிடம். (வைகுந்தன்) பெண்களையேயன்றிக்கே ஆண்களையும் அடிமைகொண்டு ஒருநாட்டுக்காகக் கையாளாயிருக்குமவன். ஶ்ரிய:பதித் வத்தால் வந்த மேன்மைக்குத் தகுதியான தே₃ஶவிஶேஷத்தை உடையவன். ஶ்ரீவைகுண்ட₂த்தைக் கலவிருக்கையாகவுடையனுய், பெரியபிராட்டியார்க்கு வல்லப₄ னுயிருந்துவைத்து, நமக்குக்கையாளான ஆஶ்சர்யதமனென்னவுமாம். (என் றென்று) மேன்மைக்கும், நீர்மைக்கும், இரண்டுக்கும் நித₃ானமான ஶ்ரிய: பதித்வத்துக்கும் வாசகங்களான திருநாமங்களை ஒருகாலிருகாலோ சொல்லிற்று? (நாமம்பலவும் நவின்று) ஸ்ரீஸஹஸ்ரநாமமுட்படச் சொன்னேம். (நாமம் பலவும் நவின்று—மாமீரவளை யெழுப்பீரோ) என்றுமாம். 9.

ஈராயிரப்படி—ஒன்பதாம் பாட்டு

அவ:— ஒன்பதாம் பாட்டு. கீழிற்பாட்டில் முக்தர் படி போலே இருப்பா ளொருத்தியை எழுப்பிற்று; இப்பாட்டில் நித்யமுக்தர்படியேயிருப்பாள் ஒருத்தியை எழுப்புகிறது. தொடர்ந்தடிமை செய்யும் இளையபெருமாளையும், இட்டவிடத்தேயிருக்கும் ஸ்ரீ ப₄ரதாழ்வானையும் போலே.

வ்யா — (தூமணிமாடம்) B ''துவளில் மாமணிமாடம்'' என்று குற்ற மூண்டாய் எடுத்துக் கழிக்கவேண்டாதே எல்லா நன்மையையுமுடைய மணி யாலே செய்த மாடம்; அது முக்தனுடைய அபஹதபாப்மத்வாதி₃கள் போலே;

A நாச்-திரு 2-4, B திருவாய் 6-5-1.

இது அவனுடைய அபஹதபாப்மத்வாதிகள் போலே. திருத்தொலைவில்லிமங்கலத்துக்கு, கழித்தவை கொண்டு செய்தது. அந்த:புரத்துக்கு நல்லதிட்டுச் செய்து, அங்கு கழித்ததிறே தந்தாமுக்கு மாளிகை செய்வது. (சுற்றும் விளக்கெரிய) "தானுறுமாகில் நோற்று வருகிறான்" என்று இருக்கிறாளிவள். மாணிக்கக் குப்பி போலே, புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றாநின்றதென்கை. ப்ரகாஶத்துக்கு ப்ரகாஶம் வேண்டாமையாலே விளக்கு மங்களார்த்தம். புறம்புள்ள விளக்குகள் புகையாநிற்க என்றுமாம்.

(தூபங்கமழ) பரிமளம் ஸஹ்யமானபடி எங்ஙனே தானிவளுக்கு? A "சீருற்ற வகிற்புகை" இத்யாதிப்படியேயிறே அவர்களுக்குச் செல்லுகிறது. புகையுள்ளிட்டனவன்றிக்கே கந்தமே கமழ. (துயிலணைமேல்) B "மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி"யாயிறே இவர்களுக்கிருக்கிறது. இருவர்க்குப் படுத்த படுக்கையிலே ஒருவர்க்குப் படுக்க(உறங்க)ப் போமோ? (கண்வளரும்) இளையபெருமாளைப் போலே உறங்காமைக்கு நாங்களும், உறங்குகைக்கு நீயுமாயிற்றே! என்கிறார்கள். (கண்வளரும்) இங்ஙனேயாகாதே ஸ்ரீ வைஷ்ணவர்கள் சொல்லுவது. C "படுத்த பைந்நாகணை" இத்யாதிப்படியே தமப்பனார் பகவத்விஷயத்திலே சொல்லுவதெல்லாம் இவளும் ததீய விஷயத்திலே சொல்லுகிறாள். (மாமான்மகளே) இட்டீடு கொள்ளுகைக்கு விடவொண்ணாத உறவை ஸம்பாதிக்கிறார்கள். (மணிக்கதவம்) 'எங்களுக்குக் கதவும் சுவரும் தெரிகிறதில்லை, நீயே திற' என்கிறார்கள். தேஶிகர்க்கல்லது தாள் திறக்கத் தெரியாதென்கை. (மாமீர்) D "அடியாரடியார்தம்" E "தொண்டர்தொண்டர்" என்று ஆழ்வாருடைய பாகவதஶேஷத்வத்தில் எல்லைபோலே. இவர்களும் இவளுடைய திருத்தாயாரான இவளை உறவாகச் சொல்லி தூரிக்கிறார்கள். (அவளை எழுப்பீரோ) நீராகிலும்அவளையெழுப்பீரோ என்கிறார்கள். 'அவளை இவர்களுக்குத் தோற்றுமோ?' என்னில், மாளிகையில் தெளிவாலே தோற்றும், தாயார் பாவஜ்ஞையாகையாலே எழுப்பாள்; ஆகையாலே (உன் மகள் தான் ஊமையோ) என்கிறார்கள். அன்றிக்கே, (அன்றிச் செவிடோ) நாங்கள் சொன்ன வார்த்தை கேளாதபடி அந்யபரையானாளோ? (அநந்தலோ) இரவெல்லாம் க்ருஷ்ணனுக்கு ஆடல் கொடுத்து இப்போதோ உறங்குகிறது? (ஏமப்பெருந்துயிலித்யாதி) ஆர்த்தநாதம் கேளாதபடி காவலிட்டுக் கொண்டு, உணராதபடி உறங்குகைக்கு ஆரேனும் மந்த்ரித்தாருளரோ? மந்த்ரம் இவளுக்கு ப்ரஸித்தமிறே. F "உன் முகம் மாயமந்திரந்தான் கொலோ" என்று மாயப்பொடி தூவினாருண்டோ? என்கை. (மாமாயன்) பெண்களுக்குக் காணச்சிறையாய்க் கிடக்குமவன். (மாதவன்) அதுக்கு குருகுலவாஸம் பண்ணினவிடம். (வைகுந்தன்) பெண்களோடொக்க ஆண்களை அடிமை கொள்ளுமவன். அப்பெருமையையுடையவனாய் ஶ்ரிய:பதியாயிருக்கிறவன்கிடீர் பெண்களுக்கு எளியனாயிருக்கிறான். (என்றென்று நாமம் பலவும் நவின்று) மேன்மைக்கும் நீர்மைக்கும் ஏகாந்தமான திருநாமங்களை அனேகம் சொன்னோம் என்கிறார்கள். "நாமம் பலவும் நவின்று மாமீர் அவளை எழுப்பீரோ" என்று க்ரியையாகவுமாம். 9.

A திருவாய் 9-9-7, B திருவாய் 9-9-4, C திருப்பல் 9, D திருவாய் 3-7-10, E திருவாய் 7-1-11, F நாச்-திரு 2-4.

நாலாயிரப்படி — ஒன்பதாம் பாட்டு

அவ :— ஒன்பதாம்பாட்டு. கீழில் பாட்டில் முக்தர்போலேயிருப்பாளொருத்தியை எழுப்பிற்று. இப்பாட்டில் நித்யர்படியையும் மைத்துன முறைமையையும் உடையாளொருத்தியை எழுப்புகிறது. தொடர்ந்தடிமை செய்யும் இளைய பெருமாளையும், இட்டிடத்தே கிடக்கும் ஸ்ரீப₄ரதாழ்வானையும் போலே இருவரும்.

வ்யா:— (தூமணி மாடத்து) A "துவளில்மாமணிமாடம்" என்னுமாபோலே குற்றமுண்டாய் எடுத்துக் கழிக்க வேண்டாத நன்மையையுடைய மணியாலே செய்த மாடம். அது ஜீவாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதி₃கள் போலே. இதுஅவனுடைய அபஹதபாப்மத்வாதி₃கள் போலே. திருத்துழைவில்லிமங்கலத்துக்கு, இங்கு கழித்த வற்றோடு செய்தது. ரஸிகராயிருப்பார் அந்த:புரத்துக்கு நல்லதிட்டுச்செய்து, அங்கு கழித்ததிட்டிறே தந்தாமுக்குச்செய்வது. நிர்தோ₃ஷமாய் உள்ளுள்ளதெல்லாம் தெரியும்படியிருக்கிற ரத்நமயமான மாடத்திலே. (சுற்றும் விளக்கெரிய) மாணிக்கங்களின்ஒளியாலே பகல் விளக்குப்பட்டிருக்கச் செய்தேயும், மங்க₃ளார்த்த₂மாக விளக்கெரிகிறது. 'புறம்பே நிற்கிறவர்களுக்கு உள்ளுள்ளதெல்லாம் தெரியும்படி எங்ஙனே?' என்ன; மாணிக்கக்குப்பி போலே புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றாநின்றது என்கை. (சுற்றும்) என்கிறது இதஸ்தத: க்ருஷ்ணன் இவளைக் கையைப் பிடித்துக் கொண்டு உலாவுமிடமெல்லாமெரிகை. (எரிய) என்கிறது 'எங்களகங்கள் இருட்டிக் கிடக்க, இங்கு விளக்கெரிகிறது வெறுமனன்று' என்கை. புறம்புள்ள விளக்குகள் புகையாநிற்க, உள்ளுள்ள விளக்கு எரியாநின்றது என்கை.

(தூபங்கமழ) உணர்ந்தபோதைக்குக் கண்ணுக்கிலக்கன்றியே, க்₄ராணேந்த்₃ரியத்தாலே அநுப₄விக்கும்படியிருக்கிற புகை. (கமழ) பரிமளம் ஸஹ்யமானபடி எங்ஙனே இவளுக்கு? B "சீருற்றவகிற் புகை" இத்யாதி₃யேயிறே அவர்களுக்குச் செல்லுகிறது. (கமழ) புகையுள்ளிட்டனவன்றிக்கே க₃ந்த₄மே கமழ. (துயிலணைமேல்) க்ருஷ்ண விரஹத்தையும் மாற்றவற்றான படுக்கையிலே. க்ருஷ்ணன்வரிலும் இடம் போரும்படியான படுக்கை. C "மென்மலர்ப் பள்ளிவெம் பள்ளி"யிறே இவர்களது. இருவர்க்குப் படுத்த படுக்கையிலே ஒருவர்க்குக் கண்ணுறங்குமோ? ப்₃ரஹ்மசாரி படுக்கையில் உறங்க மாட்டார்களே. (கண் வளரும்) "இளையபெருமாளைப் போலே உறங்காமைக்கு நாங்களுண்டு. உறங்குகைக்கு நீயுமாயிற்று" என்கிறார்கள்; ஆர் தொடைகுத்த உறங்குகிறது? அங்குத்தைக்குத் தாங்கள் ஒலியல் கொண்டு பரிசர்யை பண்ண ஆசைப்படுகிறார்கள். (கண்வளரும்) இங்ஙனேயாகாதே வைஷ்ணவர்கள் சொல்லுவது. D "படுத்தபைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்கு' என்று தமப்பனார் அவ்விஷயத்தில் சொல்லுமதெல்லாம் இவளுக்குத் ததீ₃யவிஷயத்திலேயிறே. 'தொண்டனூர் நம்பி திருவடிச்சார்ந்தார்' என்று ப₄ட்டருக்கு விண்ணப்பம் செய்ய, "ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவர் அடிமை செய்து போந்தபடியாலே 'திருநாட்டுக்கு நடந்தார்' என்னுங்கோள்" என்றாப்போலே; நஞ்சீயர், பிள்ளையேறுதிருவுடையார் தா₃ஸரையும்அப்படியே அருளிச்செய்தருளினர்.

A திருவாய் 6-5-1. B திருவாய் 9-9-7. C திருவாய் 9-9-4. D திருப்பல் 9.

(மாமான் மகளே) ஸ்வாமினியாயும் தோழியாயும் அநுபவித்ததொழிய இட்டு கொள்ளுகைக்கு விடவொண்ணாத உறவு ஸம்பாதிக்கிறார்கள். பெரியாழ்வார் பெண் பிள்ளை திருவாய்ப்பாடியில் தனக்கு உஜ்ஜீவநமாக ஒரு ப்ராக்ருத ஸம்பந்தமும் உண்டாக்கிக் கொள்ளுகிறாள். (மாமான்) வைஷ்ணவர்களோடு எல்லாவுறவும் ஶ்லாக்யமாயிருக்கிறபடி. A "மாடமாளிகை சூழ்மதுரைப்பதி நாடி நம்தெருவின் நடுவே வந்திட்டு" என்று ஸ்ரீமதுரையிலேயும் ஒருறவும் ஒரு மாளிகையும் ஸம்பாதித்தாளிறே. அங்குத்தைக்கு உறவு ஸ்ரீமாலாகாரர். தானுமொரு மாலாகாரர் மகளிறே. 1. "க்ருஷ்ணராமௌ முதா யுக்தௌ மாலாகாரக்ருஹம் கதௌ". (மாமான் மகளே) தங்கள் ஸம்பந்தம் சொல்லாதே தங்கள் ப்ராதாந்யத்தைச் சொல்லி இவளை ஸேவிக்கிறார்கள்; 2. "ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி" என்னுமாபோலே. அர்ஜுனனுக்கு க்ருஷ்ணனோட்டை மைத்துனமைபோலே இவர்களுக்கு மைத்துனமையகப்படச் சொன்னவாறே உணர்ந்து, 'நீங்களே திறந்து புகுருங்கோள்' என்ன, 'அது மாணிக்கக்கதவுகாண், அப்யாஸமில்லாதார்க்குத் தெரியாதுகாண்' என்று இவர்கள் சொல்ல—(மணிக்கதவம் தாள் திறவாய்) 'துர்யோதனன் நீருக்கும் பளிங்குமண்டபத்துக்கும் வாசியறியாதே அகப்பட்டாற்போலே அகப்படவொண்ணாது; எங்களைச் சிரிக்கவோ பார்க்கிறது? எங்களுக்குக் கதவும் சுவரும் தெரிகிறதில்லை நீ திறவாய்' என்கிறார்கள். தேஶிகர்க்கல்லது தாள் திறக்கத் தெரியாதென்கை.

இப்படி சொல்லவும் இவள் பேசாதே கிடந்தவாறே, இவள் திருத்தாயார் 'இக்காலத்திலே வந்த பெண்பிள்ளைகளுக்கு இவள் வாய்திறவாதே கிடப்பதே' என்று நொந்தமை தோற்ற, அவளுணர்ந்தமையை அறிந்த பெண்பிள்ளைகள் (மாமீரவளை எழுப்பீரோ) என்கிறார்கள். B "அடியாரடியார்" என்றும், C "தொண்டர் தொண்டர்" என்றும் ஆழ்வாருடைய பாகவத ஶேஷத்வம் போலே. 'ஒரு மாதுலனும் ஒரு மாமியாருமே' என்று இவள் ஸம்பந்த ஸம்பந்தம் சொல்லுகிறார்கள். அவள்தம் படி D "அன்னையும் அத்தனுமென்றடியோமுக்கிரங்கிற்றிலள்" என்று பொகட்டுப் போவள். "தாய் என்று பழியிட்டுப் போகவேணுமோ, அடியேனாயிருக்கிற என்னை?" என்னும் திருமங்கையாழ்வாரை 'வெட்டிமையர்' என்றும், எம்பெருமானாரை 'கோயிலண்ணன்' என்றும் ஆண்டாளருளிச்செய்யும். அத்தை எம்பெருமானார் கேட்டருளி, 'நானடியேனல்லேனோ? என்னை இப்படி அருளிச் செய்வதே' என்றாற்போலே இத்திருவாய்ப்பாடியும்.

(அவளை எழுப்பீரோ) 'இவர்கள் தன் வாசலிலே நின்று அழைத்து நோவுபட இவள் பேசாதே கிடப்பதே' என்று இவள் நெஞ்சில் கிடக்கிறது முகத்திலே தோற்றினபடியைக் கண்டு, 'நீராகிலும் அவளை எழுப்பீரோ' என்கிறார்கள். 'அவளை இவர்களுக்குத் தோற்றுமோ?' என்னில், மாளிகையில் தெளிவாலே தோற்றும். 'தாயார்தான் எழுப்பினாலோ?' என்னில், பாவஜ்ஞையாகையாலே எழுப்பாள். 'இவர்களாற்றாமைக்கு உணராத இவள் இவளுடைய ஆந்ருஶம்ஸ்யத்துக்கு உணருமோ? ஆர்த்தத்வநி கேளாதவள் மத்யஸ்தர் வார்த்தையோ கேட்கப்புகுகிறாள்?' என்னவுமாம்.

A நாச்-திரு 4-5. B திருவாய் 3-7-10 C திருவாய் 7-1-11. D பெரியதிரு .3-7-7

பின்னையும் உணரக்காணாமையாலே சிவிட்கென்று (உன்மகள் தானூமையோ) என்கிறார்கள். வ்யவஹாரயோக்₃யையன்றோ என்றபடி. (அன்றிச் செவிடோ) நாங்கள் சொன்ன வார்த்தை கேளாதபடி அந்யபரதையோ? என்கை. (அநந்தலோ) இராவெல்லாம் க்ருஷ்ணனுக்கு ஆடல்கொடுத்து இப்போதோ உறங்குவது? (ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) ஆர்த்தநாத₃ம் கேளாதபடி காவலிட்டுக்கொண்டு உணராதே உறங்குகைக்கு ஆரேனும் சவித்தாருண்டோ? மந்திரம் இவளுக்கு ப்ரஸித்₃த₄ம். A "உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்று அம்மான்பொடி தூவினா ருண்டோ? என்கை.

திருத்தாயார், 'நீங்கள் இவளை எழுப்பும்படி அறிந்திலிகோள்; திருநாமத்தைச் சொல்லுங்கோள் உணரும்படி' என்ன, 'நாங்கள் சொல்லாத ஸ்ரீஸஹஸ்ரநாம முண்டோ?' என்கிறார்கள் —(மாமாயன்) பெண்களுக்குக் காணாச்சிறையாய்க் கிடக்கு மவன். (மாதவன்) அதுக்கு குருகுலவாஸம் பண்ணினவிடம். 1. "லக்ஷ்மீபதி:". (வைகுந்தன்) பெண்களோடொக்க ஆண்களை அடிமைகொள்ளுமவன். அப்பெரிய மேன்மையுடையவனாய், ஶ்ரிய:பதியாயிருக்குமவன்கிடீர் பெண்களுக்கு எளியனா யிருக்கிறான்.

(என்றென்று நாமம் பலவும் நவின்று) "மேன்மைக்கு ஏகாந்தமான திரு நாமங்களையும், நீர்மைக்கு ஏகாந்தமான திருநாமங்களையும்; ஶ்ரிய:பதித்வத்துக்கு ஏகாந்தமான திருநாமங்களையும் சொன்னோம். எழுந்திராதாரை எங்களால் செய்ய லாவதுண்டோ?" என்கிறார்கள். 'உணராதாரை நீரைச் சொரிந்து உணர்த்துங்கோள்' என்னுமாபோலே. [நாமம் பலவும் நவின்று மாமீரவளை எழுப்பீரோ] என்று க்ரியையாகவுமாம்.

9.

ஸ்வாபதே₃ஶவ்யாக்₂யாநம் — ஒன்பதாம் பாட்டு

அவ;—ஒன்பதாம்பாட்டு. (தூமணி இத்யாதி₃) உபாயாத்₄யவஸாய நிஷ்டரான அதி₄காரியை எழுப்புகிறார்கள்.

வ்யா:—(தூமணிமாடத்து) அப்ராக்ருதமாய்ப் பஞ்சோபநிஷந்மயமான தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்திலே. (சுற்றும் விளக்கு எரிய) ஸர்வதோமுக₂மாக ஜ்ஞாநதீ₃பம் ப்ரகாஶிக்க. (தூபம்கமழ) ஜ்ஞாநம் பரிமளிக்க; ஜ்ஞாநம் பரிம ளிக்கையாவது — அநுஷ்டா₂நஶேஷமாயிருக்கை. (துயிலணைமேல் கண்வளரும்) நித்₃ராப்ரத₃மான ஶயநத்திலே கண்வளருகிற, அதாவது—ஸ்வப்ரயத்ந ஸாமாந்ய நிவ்ருத்திபூர்வகமான ப₄க₃வதே₃கோபாயாத்₄யவஸாயத்திலே நிஷ் டா₂னாயிருக்கை. (மாமான்மகளே) "மாமான்" என்றும், "அம்மான்" என்றும் இரண்டும் பர்யாயமாகையாலே, ஸ்வாமியான எம்பெருமானாலே புத்ரத்வேந அபி₄மதராய் அநந்யார்ஹரான பா₄க₃வதரே! (மணிக்கதவம் தாள்திறவாய்) மணிமாடத்தினுடைய மணிக்கதவையும் மணித்தாள்திறவாய். அதாவது— த்வத₃நுப₄வ விரோதி₄யான தே₃ஹாத்மாக்களிரண்டிலுமுண்டான மமகாரத்தைத் தவிர்ப்பியாயென்றபடி. அன்றிக்கே, த்வத₃நுப₄வவிரோதி₄யான ப₄க₃வத்ஸௌந்

A நாச்-திரு 2-4.

துர்யத்திலும் ப₄க₃வத்₃ப₄க்தியிலும் மமகாரத்தைத் தவிர்ப்பியாய் என்கிறுர்கள். இவர்கள் இப்படி சொன்னவிடத்திலும் இவ்வதி₄காரி பேசாதே கிடக்கையாலே இவ்வதி₄காரிக்கு ஜநகையாயிருக்கிற அநந்யோபாயத்வஸ்வரூபஜ்ஞாநமாகிற திருத்தாயார், 'அவர்கள் இப்படியழைக்க, நீ பேசாதே கிடப்பதே?' என்ன, (மாமீர் அவளை எழுப்பீரோ) என்கிறுர்கள். அதாவது—ஸ்வாமிநியானவளே! உனக்கு ஸ்வம்மான அவளை எழுப்பீரோ! என்றபடி. தன்னிடத்தில் அநந்யோபாயத்வஜ்ஞாநம் பிறந்தபின்பிறே ததே₃கோபாயாத்₄யவஸாயம் ஜனிப்பது. இப்படி சொன்னவிடத்திலும் எழுந்திராத இன்னுப்பாலே ''உன்மகள்தான் ஊமையோ'' என்கிறுர்கள். அதாவது—மறுமாற்றஞ் சொல்லவல்லளல்லளோ? என்றபடி. இவளைப் பேசவொட்டாதே வாயை மூடினருண்டோ? என்று ப₃ாவார்த்த₂ம். (அன்றிச் செவிடோ) ஊமையான மாத்ரமன்றிக்கே, நம் வார்த்தை கேளாதபடி செவிடோ? நம் பேச்சுக் கேளாதபடி அங்கே ஆரவாரமுண்டோ? என்று ப₃ாவார்த்த₂ம். (அனந்தலோ) சோம்பலோ? என்றபடி, நெடும்போது நாயகனேடு கூடியிருந்து படுக்கையிலே சாய்ந்தது இப்போதோ? என்று ப₃ாவார்த்த₂ம். தனித்தனியே வாக₃ாதி₃ இந்த்₃ரியங்கள் ப₄க₃வத்₃விஷயத்திலே ப்ரவணங்களாகையாலே ஒரு கார்யத்திலும் ஶக்தையல்லளென்றுமாம். (ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) காவலிடப்பட்டாளோ? மஹாநித்₃ரை உண்டாம்படி மந்த்ரவாத₃ம் பண்ணப்பட்டாளோ? ஸ்வப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் உபாயவிரோதி₄யாகையாலே இதில் அந்வயியாதபடி தடுத்துவைத்தவர்களுண்டோ? அதாவது—நமஸ்ஸு தடுத்ததோ? என்றபடி. உபாய வைலக்ஷண்யம் ப்ரவ்ருத்த்யந்தரத்தில் அந்வயியாதபடி மோஹிப்பித்ததோ? என்றபடி.

இப்படி இவர்கள் இன்னுதாக, திருத்தாயார், 'திருநாமத்தைச் சொல்லுங்கோள் இவளெழுந்திருக்கைக்கு' என்ன, (மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று நாமம்பலவும் நவின்று) (மாமாயன்) அத்யந்தம் ஸுலப₄ன். (மாதவன்) இதுக்கு கு₃ருகுலவாஸம்பண்ணின இடம். (வைகுந்தன்) இந்த ஸௌலப்₄யம் கு₃ணமாகைக்கு ஈடான பரத்வமுடையவன். (என்றென்று நாமம்பலவும் நவின்று, மாமீர் அவளை எழுப்பீரோ) ''ஸ்வார்த்த₂ப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் உபாயவிரோதி₄; பரார்த்த₂ப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் உபாயப₂லமாயும் உபாயாநுகூலமாயுமிருக்குமென்று அறிவித்து, அவளை — உபாயாத்₄யவஸாயநிஷ்டை₂ரை எழுப்பீரோ'' என்று அந்வயம். 9

பத்தாம் பாட்டு

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—நோற்று—நோன்பு நோற்று, சுவர்க்கம் புகுகின்ற—ஸுக2த்தை இடைவிடாமல் அனுபவிக்கின்ற, அம்மனாய்—அம்மா!, வாசல் திறவாதார்—வாசற்கதவைத் திறக்கமாட்டாதவர்கள், மாற்றமும் தாராரோ—ஒரு பதில் வார்த்தையாவது பேசாரோ? நாற்றத் துழாய் முடி—வாசனை வீசுகின்ற திருத்துழாய்மாலையை முடியிலே சூடியுள்ளவனும், நாராயணன்—நாராயணன் என்னும் ஒப்பற்ற திருநாமத்தை உடையவனும். நம்மால் போற்ற பறைதரும்—நம்மால் பல்லாண்டு பாடப்பெற்று. நமக்கு ப்ராப்யமான கைங்கர்யத்தைக்கொடுப்பவனும், புண்ணியனால்—த4ர்மமே வடிவெடுத்தவனுமான எம்பெருமானால், பண்டு ஒரு நாள்—முன்னொரு காலத்தில், கூற்றத்தின் வாய் விழ்ந்த—யமன் வாயில் விழுந்தொழிந்த, கும்பகரணனும்—கும்பகர்ணனும், உனக்கே தோற்று—உனக்குத் தோல்வியடைந்து, பெரும் துயில் தான்—(தன்) பெருந்தூக்கத்தை, தந்தானோ—உனக்குக் கொடுத்துப் போயினனோ? ஆற்ற அனந்தல் உடையாய்--அழகிய உறக்கத்தை உடையவளே! அரும் கலமே—அடையவரிய ஆப4ரணம் போன்றவளே! தேற்றமாய் வந்து திற—தெளிந்து வந்து (கதவைத்) திறப்பாயாக.

மூவாயிரப்படி—பத்தாம்பாட்டு

அவதாரிகை:— பத்தாம்பாட்டு. a பெண்களெல்லாரும், ''க்ருஷ்ணன்'' என்றால் படும்பாட்டை அவன்தான் பட்டு ''தண்ணீர், தண்ணீர்'' என்னும்படி a2 வீறுடையாளொருத்தியை எழுப்புகிறார்கள். b 1. ''ஆநந்த3ம் ப்3ரஹ்மணோ வித்3வாந்'' என்னாதே, b2 2. ''ஏஷ ஹ்யேவாநந்த3யாதி'' என்றிருப்பாளொருத்தி என்றுமாம். c க்ருஷ்ணன் அசல்திருமாளிகையாய் நடுவிட்ட வாசலாகையாலே ஒரு போகியாக அநுப4விக்கிறாளென்றுமாம்.

பெ. அ. பத்தாம்பாட்டு. (நோற்று இத்யாதி3) a ''அருங்கலமே'' என்றதுக்கு—ஹாரத்துக்கு நாயகக்கல்போலேயிருக்குமவள் என்றுதல், நல்ல பெண்ணென்றுதல் வக்ஷ்யமாணமான ஶப்3தா3ர்த்த2த்தைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகையிடுகிறார் (பெண்கள் இத்யாதி3) a2 வீறு — அதிஶயம். b ''சுவர்க்கம்'' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆநந்த3ம் இத்யாதி3) (1. ''ஆநந்த3ம் ப்3ரஹ்மணோ வித்3வாந்'' என்னாதே) என்றதுக்கு—வேத3நம் ஸாத4நமென்றிராதே என்று கருத்து. b2. 2. ''ஏஷ ஹ்யேவ'' என்றதுக்கு இந்த ஈஶ்வரனே ஆநந்த3ஸாத4நனென்று கருத்து. c ''புகுகின்ற'' என்ற வர்த்தமாநார்த்த2த்தைக் கடாக்ஷித்து, க்ருஷ்ணாநுப4வமாகிற ப2லம் கைபுகுந்தவளாக த்ருதீயாவதாரிகை அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணன் அசல் இத்யாதி3)

வ்யா;—d (நோற்றுச் d$_3$ சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்) e வைகினபின்பும் எழுந்திராமையாலே 'அம்மே! அழகிதாக நோற்று ஸுக$_2$ம் பெறக் கோலினாய்' என்று e$_2$ ஸ்தோபி$_4$க்கிறார்களென்றுமாம், f நோற்க வேண்டாதபடி நோன்பின் ப$_2$லம் கைபுகுந்தவளிறே இவள் என்றுமாம். g (நோற்று) h ஸித்$_3$த$_4$ஸாத$_4$னை யாகையாலே உபாயாம்ஶத்தில் நிர்ப்ப$_4$ரையாயிருந்தாள். i அவனுடைய ரக்ஷகத் வத்தை உணர்ந்தால் தனக்கு யத்நம் பண்ண ப்ராப்தியில்லை; j தன் ஶேஷத் வத்தையுணர்ந்தாலும் ப்ராப்தியில்லையிறே. k 1. "விது$_3$: க்ருஷ்ணம் ப்$_3$ராஹ்மணாஸ்

பெ. அ. a, d, e ப்ரத$_2$மாவதாரிகையைத் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (வைகின இத்யாதி$_3$) e (வைகினபின்பும்) என்றது — போதோடின பின்பும் என்றபடி. e$_2$ (ஸ்தோபி$_4$க்கிறார்கள்) என்றது — தங்களோடே நோற்கக்கடவோமென்று அவள் சொன்ன வார்த்தையை நிரர்த்த$_2$கமாக்குகிறார்கள் என்றபடி. c, d, f மூன்றும் அவதாரிகாநுகு$_3$ணமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நோற்க இத்யாதி$_3$) b, g, h த்$_3$விதீயாவதாரிகைக்குச் சேர ப்ரதீகக்$_3$ரஹணபூர்வகம் பா$_4$வம் அருளிச்செய்கிறார் (ஸித்$_3$த$_4$ஸாத$_4$நேத்யாதி$_3$) a, d ப்ரத$_2$மாவதாரிகைக்குச் சேர்ந்திருந்தபோது, 'நோன்பு நோற்று அதுக்குப் ப$_2$லமான ஸ்வர்க்க$_3$ஶப்$_3$த$_3$வாச்யமான க்ருஷ்ணாநுப$_4$வத்தைக் கைபுகுரப் பண்ணிக்கொண்டாய்' என்று ஶப்$_3$த$_3$ார்த்த$_2$மாய், 'இப்படியாகாதேபோனாய்' என்று விபரீதலக்ஷணையாக்கிக்கொள்வது. c, d த்ருதீயாவதாரிகைக்குச் சேர்ந்தபோது, நோற்றுப்பெறவேண்டும் ப$_2$லமான க்ருஷ்ணாநு ப$_4$வத்தை நிரந்தரமாக அநுப$_4$விக்கிறாயென்று ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ம். b, d த்$_3$விதீயாவதாரிகைக்குச் சேர்ந்த பக்ஷத்தில், 'நோற்றவள் போலே க்ருதக்ருத்யையாய்ப் ப$_2$லம் கைபுகுந்ததென் றிருக்கிற அம்மனே' என்று ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ம். அவதாரிகாக்ரமேண பா$_4$வம் அருளிச்செய் யாமல் த்$_3$விதீயாவதாரிகைக்கு அநுகு$_3$ணமான அர்த்த$_2$த்தைக் கடைக்கோடியிலே அருளிச்செய்தது — இவ்வர்த்த$_2$த்திலே உபபாதி$_3$க்கவேண்டுவது உண்டாகையாலே என்று திருவுள்ளம். i, j, k நிர்ப்ப$_4$ரையாயிருக்கைக்கு உபபத்தியையும் ப்ரமாணத்தையும் காட்டுகிறார்(அவனுடைய இத்யாதி$_3$ வாக்யத்ரயத்தாலே.) k$_2$ "தத்த்வத:"—உபாயோபேய

சி. அ. பத்தாம்பாட்டு. (நோற்று) b$_2$ (ஆநந்த$_3$யாதி என்றிருப்பாள்) என்றது தங்களை ஆனந்தி$_3$ப்பிக்குமவன் இவன் என்றிருப்பாள் என்றபடி, d "நோற்று... அம்மனாய்" என்றதுக்கு இரண்டு பொருள். அதாவது — f 'ஸித்$_3$தோ$_4$பாயஸ்வீகாரம் பண்ணுகையாலே க்ருதக்ருத்யையாய்க் கொண்டு ஸுக$_2$த்தை அனுப$_4$விக்கிற அம்மே!' என்னுதல்; e அன்றிக்கே 'அழகிதாக நோற்று ஸ்வர்க்க$_3$த்தைப் பெறவிருக்கிறாய்' என்று க்ஷேபத்திலேயாதல். d$_2$ சுவர்க்கம் — ஸ்வர்க்க$_3$ம். c, f (க்ருஷ்ணன் அசல் திருமாளிகையாய்) என்று அருளிச் செய்த அர்த்த$_2$த்தை விவரிக்கிறார் (நோற்கவேண்டாதபடி இத்யாதி$_3$) g, h "நோற்று" என்கிற பூ$_4$தார்த்த$_2$த்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸித்$_3$த$_4$ஸாத$_4$நையாகையாலே) என்று. i ஸித்$_3$த$_4$ஸாத$_4$னையானால் க்ருத்யாம்ஶமில்லாமைக்கு ஹேது ஏது? என்ன அருளிச் செய்கிறார் (அவனுடைய இத்யாதி$_3$) k, ஸித்$_3$தோ$_4$பாயஸ்வீகாரம் பண்ணினவனுக்கு க்ருத்யாம்ஶம் இல்லை என்கைக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (விது$_3$: க்ருஷ்ணமித்யாதி$_3$)

கு. அ. பத்தாம்பாட்டு. (நோற்றுச் சுவர்க்கம் இத்யாதி$_3$) d, e, f "நோற்றுச்சுவர்க்கம் புகுகின்ற" என்றதுக்கு இரண்டர்த்த$_2$ம் — (வைகினபின்பும் எழுந்திராமையாலே இத்யாதி$_3$). f, h முந்தின அர்த்த$_2$த்தை விவரிக்கிறார் (நோற்க வேண்டாதபடி நோன்பின்

k2 தத்த்வதோ யே தேஷாம் ராஜந் ஸர்வ k3 யஜ்ஞா: ஸமாப்தா;'' என்றிறேயிருப்பது. எழுப்புகிறவர்களுக்கும் l இதுவன்றோ ஸ்வரூபமென்னில்; ஸித்3தோ4பாய நிஷ்டர்2க்கு விளம்ப3ஹேதுவில்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையாலே m பதறுகிறார்கள். n ஸித்3தோ4பாய நிஷ்டர்2க்கும் கர்ம ஜ்ஞாந ப4க்திகளுண்டு; o இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாயிருக்கும். p ஜ்ஞானம் ஸ்வரூபத்திலே அந்விதம்; q ப4க்தி ப்ராப்யருசியிலே அந்விதம். r (சுவர்க்கம் r2 புகுகின்ற) s ஸுக2த்தை இடைவிடாதே அநுப4விக்கிற. இவர்களுக்கு க்ருஷ்ணாநுப4வமிறே ஸுக2ம். t, 1. ''யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ3 நிரயோ யஸ் த்வயா விநா'' என்று, ஸ்வர்க்க3ஶப்3த3ம் ஸுக2வாசி. u (அம்மனாய்) ரக்ஷகையானவளே! நீ ரக்ஷகையாக நாங்கள் உனக்குக் v குழைச்சரக்கான படி அழகிதாயிருந்தது. w அவள் பேசாதே கிடப்பானென்னென்னில்: x திருவடி வரத்தில் பிராட்டி 2. ''ப்ரஹர்ஷேணாவருத்3தா4 ஸா வ்யாஜஹார ந கிஞ்சந'' என்றிருந்தாற்போலே 3. '' ஸம்ஶ்ரவே மது4ரம் வாக்யம் '' என்னும்படியே இவர்கள் பேச்சே அமையுமென்று கிடக்கிறாள்; y ''தங்களடியேனாயிருக்கிற என்னை அம்மனாய் என்பதே!'' என்று கிடக்கிறாளாகவுமாம்.

பெ.அ. பூ4ர்வேந; k3 ''யஜ்ஞா: ஸமாப்தா:'' என்றது—ஸமாப்தா ஏவ என்றபடி; இத்தால் — கர்த்தவ்யாம்ஶமில்லை என்றபடி. l 'இது' என்றது — யத்நம்பண்ண ப்ராப்தியில்லாமலிருக்கை என்றபடி. m (பதறுகிறார்கள்) என்றதுக்கு — உறங்குகிறவளுக்கு அத்4யவஸாயம் தலையெடுத்து ப்ராப்யருசி தலைமடங்கிக் கிடக்கும்; அங்ஙனன்றியே, எழுப்புகிறவர்களுக்கு ப்ராப்யருசி தலையெடுத்து அத்4யவஸாயம் மடங்கி த்வரைப்படுகிறார்களென்று கருத்து. n, o, p, q 'ஆனால், ஸித்3தோ4பாயநிஷ்டர்2க்கு ஒன்றும் செய்யவேண்டாவோ?' என்னில், அருளிச்செய்கிறார் (ஸித்3தோ4பாயேத்யாதி3) r, s அவதாரிகாத்ரயத்துக்கும் சேர யதா2ஶ்ருதத்திலே ஶப்3தா3ர்த்த2ம் (ஸுக2த்தை இத்யாதி3) c, r, s த்ருதீயாவதாரிகைக்குச் சேர அருளிச்செய்கிறாரென்னவுமாம். v குழைச்சரக்கு — ஶப்தையான வஸ்து; அதாவது — ரக்ஷ்யமென்றபடி. w, x, y 'எழுப்புகிறவர்கள், ''மாற்றமும் தாராரோ'' என்று சொல்லும்படி இவள் பேசாதிருக்கைக்கு ஹேது என்?' என்னும் ஜிஜ்ஞாஸு ப்ரஶ்நத்தை அநுவதி3த்து, இரண்டுவித4மாக அருளிச்செய்கிறார் (அவள் இத்யாதி3 வாக்ய த்3வயத்தாலே) இத்தால் — பா4க3வத விஷயத்தில் அநாத3ரத்தால் இருந்தவளுமன்று, உறக்கமுண்டாயுமன்று என்றதாய்த்து.

சி.அ. n, o, p, q 'ஸித்3தோ4பாயநிஷ்ட2னுக்கு க்ருத்யாம்ஶமில்லை என்கிறதென்? கர்மஜ்ஞாநாதி3களுண்டே' என்ன உபாயத்தில் அந்வயியாது என்கிறார் (ஸித்3தோ4பாயநிஷ்டர்2க்கும் இத்யாதி3) r2, s ''புகுகின்ற'' என்ற வர்த்தமானத்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸுக2த்தை இடைவிடாதே இத்யாதி3) t ஸ்வர்க்க3ஶப்3த3ம் ஸுக2த்தைச் சொல்லுமோ? என்ன அருளிச்செய்கிறார் (யஸ்த்வயா இத்யாதி3) u ''அம்மனாய்!''—ஸ்வாமிநீ! z ''மாற்

கு.அ. ப2லம் என்று தொடங்கி) z. a, b, c 'மாற்றமும்' என்ற 'ச' ஶப்3த3த்துக்கு மூன்று தாத்பர்யம். u, z, c ''அம்மனாய் மாற்றமும்தாராரோ'' என்று கூட்டி அருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யம் மிக்கால்

z (மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்) a இவள் வாய்பேசாதே கிடக்கிற இது பொறுக்கமாட்டாமையாலே, ''மாற்றமும் தாராரோ வாசல்திறவாதார்'' என்கிறுர்கள். b வாசல் b_2 செம்மினுல் வாயும் செம்மவேணுமோ? c ஐஶ்வர்யம் மிக்கால் ப₃ந்து₄க்களை ஏன் என்னலாகாதோ? d 1. ''போ₃த₄யந்த: பரஸ்பரம்'' என்கிற ந்யாயமும் தவிர்ந்ததோ? e உடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால், எங்களுக்குப் பேச்சாகிலும் தரலாகாதோ? f கண்ணும் செவியும் ஒக்கப் பட்டினிகொள்ள வேணுமோ? 2. ''மது₄ரா மது₄ராலாபா'' என்றிறே இவள் பேச்சு இருப்பது,

''நீங்கள் பழியிடுகிறதென்? அவன் இங்கு உண்டோ?'' என்ன,—(நாற்றத் துழாய்முடி) கோயிற்சாந்தை உன்னுல் ஒளிக்கப்போமோ? 'இப்போது உண்டாகவேண்டா, அவன் ஒருகால் அணைத்துவிட்டால் அவை அஞ்சாறுகுளிக்குப் பரிமளம் நிற்குமே. கட்டுங் காவலுமாயிருக்கிற வாசலிலே புகுரப்போமோ அவனுக்கு?' என்ன g (நாராயணன்) h அவனுக்கு எங்களைப்போலே கதவு திறக்கப் பார்த்திருக்கவேணுமோ? i வ்யாப்திக்கு ப்ரயோஜநம்—வேண்டினவிடத்தே ஸ்பு₂ரிக்க வல்லனுகையன்ரூே? j உகவாதாரையும் விடாதவன் உகந்த உன்னைவிடுமோ?

k (நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன்) l வெறுமையே பச்சையாக இடைச்சிகளுக்கும் சென்று ஆஶ்ரயிக்கலாம்படியான l_2 தா₄ர்மிகன். m இவர்களுடைய ஆஶ்ரயணம் உபாயம் அன்று, m_2 ருசியாலே. n (புண்ணியன்)

பெ. அ. z, a ''வாய்திறவாய்'' என்னுதே, ''மாற்றமும்தாராரோ'' என்று—க்ஷேபம் தோற்றச் சொல்லக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறுர் (இவள் இத்யாதி₃) z, b ''மாற்றமும்'' என்ற சகாரத்துக்கு—வாசல் திறவாததோடு ஸமுச்சயமென்று திருவுள்ளம்பற்றி பூ₄ாவம் அருளிச்செய்கிறுர் (வாசல் இத்யாதி₃) b_2 'செம்மினுல்' என்றது—ப₃ந்தி₄த்தாலென்றபடி.

k, l நம்மால் போற்றப்படும்படி கைங்கர்யத்தைத் தரும் புண்ணியனென்று ஶப்₃தா₃ர்த்த₂ம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யம் அருளிச்செய்கிறுர் (வெறுமையே இத்யாதி₃) l_2 (தா₄ர்மிகன்) 3. ''த₄ர்மம் சரதி'' என்கிற ஸூத்ரத்தாலே—த₄ர்மாசரணம் பண்ணுமவனென்ருய், பறைதருகையாகிற த₄ர்மம்பண்ணுமவனென்கை. k, m ''போற்றப்பறைதரும்'' என்று—போற்றுதல் ஹேதுவாகத் தோன்றியிருக்க வெறுமையைச் சொல்லக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறுர் (இவர்களுடைய இத்யாதி₃) m_2 (ருசியாலே) என்ற அநந்தரம்

சி. அ. றம்''—வார்த்தை; ''மாற்றமும்'' என்று வெறுத்துச் சொன்ன வார்த்தை. d ஸ்வாபதே₃ஶம்(போ₃த₄யந்த இத்யாதி₃) z, b மாற்றமும் என்ற அபிஸப்₃தா₃ர்த்த₂ம் (வாசலைச்செம்மினுல் இத்யாதி₃) b_2 (செம்மினுல்) மூடினுல். u,z,c ''அம்மனுய் மாற்றமும் தாராரோ'' என்று கூட்டித் தாத்பர்யம் (ஐஶ்வர்யமித்யாதி₃) e அபிஸப்₃த₃த்துக்குத் தாத்பர்யாந்தரம் (உடம்பை க்ருஷ்ணனுக்கு இத்யாதி₃) f வாசல் திறவாமையாலும் வார்த்தை சொல்லாமையாலும் (எங்கள் கண்ணும் செவியும் ஒக்கப் பட்டினிவிடவேணுமோ) என்கிறுர்கள். g, h, i ''நாராயணன்'' என்பதற்கு ஸர்வவ்யாபகத்வ வத்ஸலத்வங்களிரண்டையும் விவக்ஷித்து அருளிச்செய்கிறுர் (அவனுக்கு எங்களைப்போலே இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) k, l, m வெறுமையே பச்சையாக ஆஶ்ரயிக்கையாயிருந்தால் ''போற்றப்பறைதரும்'' என்கிறதென்? என்ன அருளிச்செய்கிறுர் (இவர்களுடைய ஆஶ்ரயணம் உபாயமன்று,ருசியாலே) என்று.

ஆ, அ. இத்யாதி₃)g, j'நாராயணன்'என்றதுக்குத் தாத்பர்யாந்தரம்(உகவாதாரையும்விடாதவன்

o 1. ''க்ருஷ்ணம் த4ர்மம் ஸநாதநம்'' என்று இவர்களுக்கு உபாயம் அவன் தானிறே; ஸ்நேஹோக்தியாகவுமாம்.

இவனால் p (பண்டு ஒருநாள்) q முன்பு, உன்னைப்போலே உணராதே படுத்திருருண்டுகாண் என்கை. (பண்டு ஒருநாள் கூற்றத்தின் q2 வாய்வீழ்ந்த) r தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே அமிழ்ந்து சாவாரைப்போலே, 2. 'ரிபூணும் அபி வத்ஸல'ரான பெருமாள் பக்கலிலே தப்புச்செய்த. s (கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ) t உறக்கத்தில் தலையானவனும் உனக்குத் தோற்றுத் t2 தன் உறக்கத்தையும் தானே தந்து போனானோ? u அவனது—துயில்; உன்னது—பெருந்துயில்; v அவன், v2 ஒருத்தியையிறே பிரித்தது; நீ ஊராகப்பிரித்து உறங்காநின்றாயே.

பெ.அ. ''வந்ததித்தனை'' என்று ஶேஷம். n, o ஆஶ்ரயணம் உபாயமாகாவிட்டால் உபாயம் ஏது? என்ன, அதுக்குப் பரிஹாரமாக, ''புண்ணியன்'' என்றார்களென்று விவக்ஷித்து, ப்ரதீகக்3ரஹணபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (புண்ணியன் இத்யாதி3)

p, q ''கும்பகரணன்'' என்றபோதே பூர்வகாலிகத்வம் தோற்றியிருக்க, ''பண்டொருநாள்'' என்றதுக்கு உபாலம்ப4ம் தோற்ற ப4ாவம் அருளிச்செய்கிறார் (முன்பு இத்யாதி3) q2, r ''வீழ்ந்த'' என்றது— நஶிக்கவென்றாய், அதுதானும் தக்ருதமாய்த் தோன்றுகையாலே. 'புண்ணியனால்' என்றது—கரணார்த்த2மாகத் திருவுள்ளம்பற்றி, த்3ருஷ்டாந்தபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தண்ணீர் இத்யாதி3) s, t, u, v ''கும்பகரணனும்'' என்ற சகாரம் ப்ராத4ாந்யத்திலேயாக்கி, ''உனக்கு'' என்றதை ''தோற்று'' என்றதற்கு முந்துறக்கூட்டி, ஏகாரத்தை ''தான்'' என்ற பத3த்தோடே சேர்த்து, ''தோற்றும்'' என்ற சகாரத்தை ''துயில்'' என்றதோடு அந்வயித்து, ''பெரும்'' என்றதை—பெரிதாம்படியென்றாக்கி, ''கும்பகரணனும்—உனக்கு—தோற்று—பெரிதாம்படி—துயில்—உம்—தானே—தந்தானோ'' என்று அந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உறக்கத்தில் இத்யாதி3 வாக்யத்ரயத்தாலே.) v ''துயிலையும்'' என்ற சகாரம்—அநுக்த ஸமுச்சயமாய்த் தன்னபராத4த்தையும் பெரிதாகத்தந்தானோ என்று விவக்ஷித்து, பெருமையை உபபாதி3க்கிறார் (அவன் ஒருத்தியை இத்யாதி3) இத்தால் ''புண்ணியனால்—கூற்றத்தின் வாய்வீழ்ந்த'' என்று—அபராத4த்தைப்பண்ணி நஶித்தவனென்கையாலே இவ்வர்த்த2ம் லபி4த்ததென்று திருவுள்ளம். ராவணன் பிராட்டியைப் பிரித்தவனாயிருக்க, கும்ப4கர்ணன் பிரித்ததாகச் சொன்னது—அவன் ஸம்வதி3த்துப் பெருமாளோடே எதிர்த்து யுத்3த4த்துக்கு வருகையாலே என்று கொள்வது. 3. 'இத3ாநீம் க2ல்வஹம் நாஸ்மி யஸ்ய மே த3க்ஷிணோ பு4ஜ: | பதிதோ யம் ஸமாஸாத்3ய ந பி3பே4மி ஸுராஸுராத் ||'' என்கிறபடியே—தானே அவனாகவும். தனக்கு அவன் வலக்கையாகவும் அவலம்ப3மாகவும் ராவணன் சொல்லுகையாலே, கும்பகரணனே பிரித்ததாகச் சொன்னதாகவுமாம்.

சி.அ. s, t ''கும்பகரணனும்'' என்கிற சஶப்3த3த்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உறக்கத்தில் இத்யாதி3). t2 ''தான்தந்தானோ'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தன் உறக்கத்தையும் தானே தந்து போனானோ) என்று. அதாவது — வலியாலன்றிக்கே தோற்றுத்தந்தான் என்கை. u 'தோற்று' என்கைக்கு நியாமகம் (அவனது துயில், உன்னது பெருந்துயில்) என்று. v விரோதி4யை த்3ருஷ்டாந்தமாகச் சொல்லுகிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (அவன் ஒருத்தியை இத்யாதி3) v2 (ஒருத்தி) என்றது பிராட்டியை.

கு.அ. இத்யாதி3) s, t ''கும்பகரணனும்'' என்ற ப்ராத4ாந்யத்துக்குத் தாத்பர்யம் (உறக்கத்தில்

w (ஆற்ற அனந்தலுடையாய்) x இப்படி சொல்லக்கேட்டுப் பெரிய அனந்தலோடே ''க்ருஷ்ண க்ருஷ்ண'' என்ன; எங்களுக்கு அங்கேபோய்த் துயிலெழப் பாடவேணுமோ? நீ உணரும்படி காண அமையாதோ? y (அருங்கலமே) z எங்களுக்கெல்லாம் ஶிரோபூ$_4$ஷணமல்லேயோ? z$_2$ ஹாரத்தைப்பண்ணி அதுக்குக் கல்லழுத்தினாற்போலே, நீ புகுந்து இக்கோ$_3$ஷ்டி$_2$யை ஸநாத$_2$மாக்காய் என்கிறார்கள்; a எங்களுக்குப் பெறுவதற்கு அரியளல்லேயோ நீ என்னவுமாம்.

இவர்களார்த்தியைக் கண்டு துணுக்கென்று வரப்புக்காள்; b (தேற்றமாய் வந்து திற) c இரண்டாம் நிலத்திலே கிடக்கிறவளாகையாலே 'தடுமாறாதே தெரிந்துவந்து திற' என்கிறார்கள். d (தேற்றமாய் வந்துதிற) e ஊராகத் திரண்டு கிடக்கிறது, படுக்கையிற் e$_2$ கிடந்தபடியே வாராதே ஸத$_3$ஸ்ஸையாய் வந்துதிற. 1. ''ஸா ப்ரஸ்க$_2$லந்தீ'' என்னும்படி வாராதேகொள் என்கிறார்கள். 10.

பெ. அ. w, x கீழே ''பெருந்துயில்'' என்று சொல்லிவைத்து, இங்கே அனந்தலையிட்டு ஸம்போ$_3$தி$_4$க்கையாலே — அவள் இவர்களிட்ட பழிக்கு அஞ்சி, தன்னுணர்த்தி இவர்களுக்குத் தோற்றத் திருநாமஞ்சொன்னாளென்று ஸங்க$_3$தியைக் காட்டுகிறார் (இப்படி இத்யாதி$_3$) w, z, z$_2$ a 'ஆற்ற — மிகுந்திருக்கிற, அனந்தல் — நித்$_3$ரையை உடையவளே' என்று இதன் உத்$_3$தே$_3$ஶ்யதைதோற்ற இத்தையிட்டு ஸம்போ$_3$தி$_4$த்ததுக்குத் தாத்பர்யத்தை வ்யாவ்ருத்திபூர்வகம் அருளிச்செய்கிறார் (எங்களுக்கு இத்யாதி$_3$ வாக்யத்$_3$வயத்தாலே.) y, a ''கலம்'' என்றவிடத்தில் A ''மனக்கள் மாருடிவரும்'' என்கிற ந்யாயத்தாலே. ''கலன்'' என்றாய், ஆப$_4$ரண விவக்ஷையாகக் கீழருளிச்செய்து, ''கலம்'' என்று விவக்ஷித்து, அது பாத்ரமென்றாய், அத்தால் — நல்லபெண்ணே யென்று அர்த்த$_2$ாந்தரம் அருளிச்செய்கிறார் (எங்களுக்குப் பெறுவதற்கு இத்யாதி$_3$)

b, c தேற்றமாய் வரவேணுமென்கைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (இரண்டாம் நிலத்திலே இத்யாதி$_3$) c இரண்டாம்நிலம் — மேல்மெத்தை. e ''ஒருபோகியாக க்ருஷ்ணாநுப$_4$வம் பண்ணுமவள்'' என்ற த்ருதீயாவதாரிகைக்குச் சேரத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஊராக இத்யாதி$_3$) 10

சி. அ. q$_2$ ''வாய்''– இடம். ''பறை தரும் புண்ணியன் – இப்படிக்கொத்த புண்ணியனால் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணன்'' என்னுதல்; ''புண்ணியனால் நோற்றுச்சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்'' என்னுதல். w ''ஆற்றஅனந்தல்'' — பெரிய அநந்தல். y ''அருங்கலன்'' — பெறுதற்கரிய ஆப$_4$ரணம். d ''தேற்றம்'' — தெளிவு. c, e 'தடுமாறாதே தெளிந்து வந்து திற' என்கிறார்களாதல்; அன்றிக்கே 'ஸம்ப$_4$ாக$_3$ சிஹ்நங்களையும் மறைத்துக்கொடு வந்து திற' என்கிறார்களாதல்.

இப்பாட்டுக்கு ஸ்வாபதே$_3$ஶம் 2. ''ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'' என்றும், 3. ''அஹம் ஸ ச மம ப்ரிய:'' என்றும் அவன் பக்ஷபதித்திருப்பார்திறத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபமென்கிறது. 10.

ஆ. அ. தலையானவனித்யாதி$_3$) y கலன் — ஆப$_4$ரணமென்றபடி. y, z, z$_2$ இதுக்கு இரண்டு தாத்பர்யம் — z (எங்களுக்கு ஶிரோபூ$_4$ஷணமென்னுதல்) z$_2$ அன்றிக்கே (ஹாரத்தைப்பண்ணி) என்று தொடங்கி. e$_2$ (கிடந்தபடியே வாராதே) என்றது நக்$_3$நையாய் வாராதே என்றபடி. 10.

A, தமிழிலக்கண வழக்கு.

ஆறுயிரப்படி—பத்தாம்பாட்டு

ஆறுயிரப்படி:—பத்தாம்பாட்டு. ஒரு கிடையிலே பல பிள்ளைகள் ஓதாநின்றால் ஒருவனுக்கு ஒத்துப்போய் ஸமர்த்த₂னுமானால் அவனே அவர்களுக்கெல்லாம் நிர்வாஹகனுமாபோலே, இவ்வூரில் பெண்பிள்ளைகளெல்லாரிலும் க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தில் விதக்₃தை₄யாய், எல்லாப் பெண்களையும் க்ருஷ்ணன் படுத்துமத்தை க்ருஷ்ணன்தன்னைப் படுத்துவாளொருத்தியாய், அவன்தான் ''தண்ணீர் தண்ணீர்'' என்னும்படி வீறுடையாளொருத்தியாய், இவர்கள் தாழ்த்ததுக்கு அவனையிட்டுப் பொறுப்பிக்கும்படி அவன்பக்கல் போரமுகமுடையாளுமாய், க்ருஷ்ணன் திருமாளிகைக்கு அசல் திருமாளிகையுமாய், நடுவு இடைச் சுவர் தள்ளிப்பொகட்டு ஒரு போகியாகத் தண்ணீர்த்துரும்பற்று ஒரு படுக்கையிலே அவனுந்தானுமாக எப்போதும் அநுப₄விப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். 1. ''ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந்'' என்னாதே, 2. ''ஏஷ ஹ்யேவாநந்த₃யாதி'' என்று அவன் ஆநந்தி₃ப்பிக்கவிருப்பாளொருத்தி.

வ்யா:—(நோற்று) க்ருஷ்ணனைப் பிரிந்தபோதேபிடித்துக் குளிப்பது நோற்பதாகாநிற்க, இவள்படி பத்தொன்பதாம் ப₄ாஷையாயிருப்பாளொருத்தி, 'ஒக்கநோற்கக்கடவோம், ஒக்கக்குளிக்கக்கடவோம், க்ருஷ்ணனோடொக்க அநுப₄விக்கக் கடவோம்' என்று சொல்லி, நோன்பின் ப₂லம் கைபுகுந்து, க்ருஷ்ணநுப₄வம்பண்ணிக் கரைச்சலற்றுக்கிடந்து உறங்கவமையுமோ? ஸித்₃த₄ஸாத₄நையாயிருப்பாளொருத்தி. 3. ''ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:'' 4. ''யோ மாமேவமஸம்மூடோ₄ ஜாநாதி புருஷோத்தமம் | ஸ ஸர்வவித்₃ப₄ஜதி மாம் ஸர்வபா₄வேந பா₄ரத ||'' 5. ''க்ருதக்ருத்யஶ்ச பா₄ரத'' 6. ''க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே'' A ''செய்தவேள்வியர்'' என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே ஸித்₃த₄ஸாத₄நையாகையாலே உபாயாம்ஶத்தில் நிர்ப்ப₄ரையாயிருந்தாள். 'ஸித்₃த₄ஸாத₄நராயிருப்பார்க்குக் கர்த்தவ்யமொன்றுமின்றிக்கேயொழிகிறபடி எங்ஙனே?' என்னில்: அவனுடைய ரக்ஷகத்வத்தை உணர்ந்தால் தனக்கு யத்நம்பண்ண ப்ராப்தியில்லை, தன் ஶேஷத்வத்தை உணர்ந்தாலும் ப்ராப்தியில்லை; விரோதி₄ப்ராப₃ல்யத்தை உணர்ந்தாலும் ஒன்றுஞ் செய்ய ப்ராப்தியில்லை; இதரோபாயங்களுக்கும் அவன் ப்ரஸாத₃ம் வேண்டியிருக்கையாலே ஒன்றுஞ் செய்ய ப்ராப்தியில்லை. ஆனபின்பு ''நாராயணனே'' என்று—அவனுடைய உபாயபா₄வத்தை அநுஸந்தி₄த்துவைத்து, விடிவோறே எழுந்திருந்து குளிக்கக்கடவதோ? என்றிருக்கிறாள். புறம்புநின்று எழுப்புகிறவர்களுக்கும் இப்படியிருக்கையன்றோ ஸ்வரூபமென்னில்: அவர்களுக்கு நினைவு 'உபாயமென்கிற ஶப்₃த₃த்தை விஶ்வஸித்திருக்கவோ? உபேயத்துக்காகவன்றோ உபாயஸ்வீகாரம்; ஸித்₃தோ₄பாயநிஷ்டர்க்கும் ப்ராப்யத்தில் த்வரையில்லையாகில் சேதநனன்றிக்கேயொழிய

A திருவாய் 5-7-5.

மத்தனை' என்று விளம்பஹேது இல்லாமையாலே, ப்ராப்யத்தில் த்வரையாலே பதறுகிறார்கள். ஸித்தோபாயநிஷ்டர்க்கும் கர்ம ஜ்ஞாந பக்திகளுண்டு—இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாயிருக்கும்; ஜ்ஞாநம் ஸ்வரூபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்ய ருசியிலே புகும். ஆனபின்பு ப்ராப்யத்தில் த்வரையில்லையாகில் அசித்தோடொக்குமத்தனை என்கிறார்கள். (சுவர்க்கம் புகுகின்ற) ஸுகத்தை விடாதே அநுபவிக்கிற. ''ஸ்வர்க்கம்'' என்று— ஸுகத்தைச் சொல்லுகிறது. ஸாக்ஷாத்ஸுகஶப்தவாச்யனாகையாலே, க்ருஷ்ணனை ''சுவர்க்கம்'' என்கிறது. 1. ''யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா'' என்னக்கடவதிறே. ஆநந்தரூபனாய் ஆநந்தகுணகனாய் ஆநந்தாவஹனாயிருக்கிற க்ருஷ்ணனுடைய அநுபவமிறே ஸாக்ஷாத்ஸுகமாகிறது. (புகுகின்ற) அநுபவத்தில் விச்சேதமில்லாமை சொல்லுகிறது. உபாஸந வேளையில் ஸ்மர்த்தவ்ய விஷயத்தினுடைய அநுஸந்தாநத்தாலே வருவதொரு ஸாரஸ்யமுண்டு; அதுதான் காதாசித்கமாகையாலே ஹேயஸம்பந்தமற்று அவ்வருகேபோனால் அவிச்சிந்நமாக அநுபவிப்பதொரு அநுபவமுண்டு; அது இங்கே கைபுகுந்திருக்கை. (அம்மனாய்) அழகிதாக இத்திரளுக்கு ரக்ஷகையானாய்! நீ ரக்ஷகையாக நாங்கள் குழைச்சரக்கானபடியென்! எங்களை க்ருஷ்ணனோடே அநுபவிப்பித்து, அவ்வநுபவம் உன் முலையோடும் தோளோடுமணைந்தாற்போலேயிருக்கவேண்டாவோ? 2, ''ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம்'' என்கிறபடியே இவர்கள் பேச்சிலினிமையாலும், 3. ''ப்ரஹர்ஷேணாவருத்தா ஸா'' என்று — இவர்களைக் கண்ட ஹர்ஷத்தாலே, விக்கி வார்த்தை சொல்லமாட்டாமையாலும், 'தங்களடியேனான என்னை, ''தாய்'' என்று பழியிடுவதே' என்று ஸ்வரூபத்தை அநுஸந்திக்கையாலும், ''இவர்கள் க்ருஷ்ணாநுபவம் பண்ணுகிறோமென்று பழியிடாநின்றார்கள். இவ்வளவிலே ஒன்று சொல்லுவோமாகில் இவர்கள் சொன்னதுக்கு இசைந்து, மதியாமல் உத்தரஞ்சொன்னோமாவுதோம்'' என்று பேசாதேகிடந்தாள்; இவள் நினைவறியாதே தாங்கள் புறம்பே நின்று துவளுகிற துவட்சி பொறுக்கமாட்டாமையாலே, — (மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்) என்கிறார்கள். வாசலைச் செம்மினால் வாயையுஞ் செம்மவேணுமோ? கண்ணைப் பட்டினிகொண்டவோபாதி செவியையும் பட்டினிகொள்ளவேணுமோ? ஐஶ்வர்யம் விஞ்சினால் பந்துக்கள் ஆர்த்தரானால் ஏனென்னலாகாதோ? படுகுலையடித்தால், தண்ணீர்வார்த்தால் ஆகாதோ? போகத்தைத் தடுத்தால் எங்கள் ஸத்தையையும் அழிக்கவேணுமோ? (மாற்றமும் தாராரோ) உன்னுடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால், எங்களுக்குப் பேச்சாகிலும் தந்தாலாகாதோ? க்ருஷ்ணனை அருக்கினால் உன்னையுமருக்கவேணுமோ? உன் சரக்குத் தரப்பார்த்திலையாகில் எங்கள் சரக்குத்தந்தால் ஆகாதோ? உன்னுடைய க்ருஷ்ணனைத் தாராவிட்டால் எங்களுடைய உன்னைத் தந்தாலாகாதோ? (மாற்றமும்) 4. ''மதுரா மதுராலாபா'' என்று இவள் பேச்சுக்கு அவனும் தோற்றிறேயிருப்பது.

இப்படி இவர்கள் பழியிடாநின்றால் ஒரு உத்தரஞ் சொல்லியாகிலும் பிழைப் போமென்று 'நீங்கள் சொல்லுகிற பழிக்கு அவனிங்குண்டோ?' என்ன — (நாற்றத் துழாய்முடி) நீயும் மறைத்து உன் களவுக்கு அவனும் பெருநிலைநின்றால் கோயிற்சாந்தை உன்னுலொளிக்கப்போமோ? A ''அன்றிமற்றோருபாயமென்'' என் னும்படி மாளிகைச்சாந்தை மறைக்கப்போமோ? 'இப்போது அவனுண்டாக வேணுமோ? அவன் ஒருகால் அணைத்துவிட்டால் நூறுகுளிக்குநிற்கும். நாமெல்லாரு மொக்க இப்போதேயெழுந்திருந்து போந்த பின்பு படுக்கையிலே சாய்ந்தேன்; அந்தியம்போதே பிடித்து வாசலைப்பற்றிக்கொண்டு நின்றிகோள்; கட்டும் காவலு மாயிருக்கிற வாசலிலே புகுரப்போமோ அவனுக்கு?' என்ன — (நாராயணன்) எங் களைப்போலே கதவு திறக்குந்தனையும் பார்த்திருக்க வேணுமோ அவனுக்கு? அவனுக்கு உன்பக்கல் புகுந்தால் புறப்படவன்றோ வழியரிது. (நாராயணன்) ஜீவத்₃வாராவன்றோ அநுப்ரவேஶம், விட்டுப்போகாதார் பேரன்றோ இது. உகவாதார்க்கும் ஸத்தையை நோக்கி, உகந்தார்க்கும் வத்ஸலனுயிருக்குமவ னன்றோ. ஆசைப்பட்ட உன்னை விடுமோ? வ்யாப்திக்கு ப்ரயோஜநம் வேண்டின விடத்தே ஸ்பு₂ரிக்கவல்லனுகை அன்றோ? (நாற்றத்துழாய்முடி நாராயணன்) ஆசைப் பட்டாரை ரக்ஷிக்கைக்குத் தோள்மாலையிட்டிருக்கிறவனன்றோ. ''பேசாதே கிடக்கில் வாய் திறந்திலளென்னுநின்றார்கள்: வாய் திறக்கில் உத்தரஞ்சொல்லிற்று என் பார்கள்'' என்று உறங்குவாரைப்போலே கிடந்தாள் — (நம்மால்போற்ற வித்யாதி₃) (நம்மால்) வெறுமையே பச்சையான இடைச்சிகளுக்கும் சென்று ஆஶ்ர யிக்கலாம்படியிருக்கிற தா₄ர்மிகன். (நம்மால்) அவனுக்கு ஆகாதாருண்டாய் முடிந்தானல்லகிடீர்! ஜந்மவ்ருத்தாதி₃கள் ஏதேனுமமையுங்கிடீர்! (போற்ற) இவர்கள் குடிப்பிறப்பிருக்கும்படி. B ''பல்லாண்டு?'' என்றிருக்குமவர்களிறே. இவர்களாஶ்ர யணம் உபாயமன்று. (போற்ற) செய்யவேண்டுவது பெரிதாய் முடிந்தானல்லன் கிடீர்! (பறைதரும்) ''உக்கமுந் தட்டொளியும்'' (20). (புண்ணியனுல்) தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழாக விழுந்து சாவாரைப்போலே. (புண்ணியனுல்) அத்₃ வேஷமாத்ரமுடையார்க்குத் தன்னைப் பெறுகைக்கு ஸுஹ்ருதமும், ருசிஜநகனும், உபாயமும், ப்ராப்யனுமாயிருக்கிறவனுலே. 1, ''ஸுஹ்ருத₃ம் ஸர்வபூ₄தாநாம்'' என்றது புறம்பாம்படி, 2. ''யதி₃ வா ராவண: ஸ்வயம்'' என்னும்படி, 3. ''ரிபூணமபிவத்ஸல''ரானவராலே கிடீர் முடிந்தது. (புண்ணியனுல்) 4. ''க்ருஷ் ணம் த₄ர்மம் ஸநாதநம்''

(பண்டொருநாள்) முன்பு உன்னைப்போலே உணராதே நோவுப்படுத்தின னொருவனுண்டுகாண். (ஒருநாள்) உணர்ந்திலனென்று ஒருகாலத்திலே கேட்டிருந்

A திருவாய் 8-9-10. B திருப்பல்-1.

தோம், இன்று அநுபவியாநின்றோம். (கூற்றத்தின் வாய்வீழ்ந்த) தான் சிறை யிட்டுவைத்த ம்ருத்யுவினுடைய ஆஸ்யத்திலே விழுந்த. (புண்ணியனுல் கூற்றத்தின் வாய் வீழ்ந்த) பதார்த்த தர்ஶநத்துக்காக ஏற்றின விளக்கிலே விட்டில்புக்கு முடிந்துபோமாபோலே, இவர் திருவுள்ளத்தால் அவன் அநர்த்தத்துக்கு நினைவில்லை யென்கை. (கும்பகரணனும்) உறக்கத்தில் தலையானவனும் உனக்குத்தோற்றுத் தன்னுறக்கத்தையுந் தானேதந்து போனானே! நீயும் அவனுமாக ஸமயம்பண்ணி உறங்கப்புக்கு நீ ஜயித்தபின்பு 'நான் இது கைக்கொள்ளுமவனல்லேன்' என்று விட் டானோ? ஸ்ரீபரசுராமாழ்வானை வென்று, பெருமாள் அவன் கையில் வில்லை வாங் கினாற்போலே, நீயும் அவனைவென்று, நித்ரையைக் கைக்கொண்டாயோ? (பெருந் துயில்) அவனளவோ உன்னுடைய நித்ரை? அவனதோ துயில்; உன்னதோ பெருந்துயில். அவனுக்கு ஆறுமாஸம் உறங்குகையும், ஆறுமாஸத்துக்கு ஒருநாள் உணர்ந்திருக்கையுமென்று ஒரு வ்யவஸ்தையுண்டிறே; அங்ஙனமொன்றில்லையோ உனக்கு? நீ காலதத்வமுள்ளதனையுமுறங்குகிறாயன்றோ? இவள் அரைக்ஷணம் புறப்படாதொழிய நெடுங்காலமாய்த் தோற்றுகிறது இவர்களுக்கு. அவன்ஒருத்தி யுடைய பிரிவுக்கு ஹேதுபூதனானனத்தனையிறே; நீ ஒருராகப் பிரிக்கைக்குஹேது பூதையாய் உறங்குகிறாயிறே.

1. ''ந க்ஷமாமி'' என்கிற அஸஹ்யாபசாரம் பண்ணினவனை அரைக்ஷணம் உணராதேயிருக்கிற நமக்கு ஒப்பாகச் சொல்லாநின்றார்களென்று, இவர்களுக்குச் சென்றுமுகங்காட்ட வேணுமென்று, துணுக்கென்று தானுணர்ந்தமை தோற்ற ''க்ருஷ்ண க்ருஷ்ண'' என்றாள்; — (ஆற்ற அனந்தலுடையாய்) இதொரு உணர்த்தியிருந்தபடியென்! எங்களுக்கு அங்கேபோய்த் துயிலெழப்பாடவேணுமோ? நீயுணரும்படி காணவமையாதோ? (ஆற்றவனந்தல்) ஆர்த்தத்வநி கேளாதபடி அனந்தலினுடைய மிகுதி; ஜால்கரந்த்ரத்தாலே, இவளுணர்ந்தபடியைப் பார்த் தார்கள்; தங்கள்கோஷ்டிக்கு நாயகரத்நம்போலேயிருந்தாள்; — (அருங்கலமே) என்கிறார்கள். எங்களுக்கெல்லாம் ஶிரோபூஷணமல்லையோ நீ? ஒரு ஹாரத்தைப் பண்ணி அதிலேயொரு ரத்நத்தை அழுத்தினால் அந்த ரத்நம் அந்த ஹாரத்தை விளக்குமாபோலே, இத்திரளை ஸநாதமாக்கப்பாராய். (அருங்கலமே) எங்களுக்குப் பெறுதற்கரியவளல்லையோ நீ? அவள்புறப்பட அவனுமொக்கப்புறப்பட்டுத் தங்களைத் தலைமேலே கொள்ளுமென்றிருக்கிறார்கள். இவர்கள் ஆர்த்தியைக்கேட்டு, துணுக் கென்று வரப்புக்காள்; — (தேற்றமாய்வந்து திற) பயப்பட்டு மேல்நிலங்களில் நின்று தடுமாறாதே வந்திழிந்து திற. அங்ஙனன்றிக்கே, ஊராகத் திரண்டு கிடக்கிறது, அவர்களிலே உன்னையும் நியமிக்கவல்லாருண்டு; அவர்கள்முன்னே படுக்கையில் சாய்ந்தபடியே வாராதே, உன்னைப்பேணிக்கொண்டு — ஸதஸ்யையாய், வந்து திற—

2. ''ஸா ப்ரஸ்கலந்தீ'' என்னும்படி வாராதேகொள்.

ஈராயிரப்படி — பத்தாம்பாட்டு

அவ:— பத்தாம்பாட்டு. க்ருஷ்ணனுக்கு அசலகமாய் இடைச் சுவர் தள்ளிப் போகட்டு ஒருபோகியாக அனுப₄விக்கிருளொருத்தியை எழுப்புகிருர்கள்.

வ்யா:— (நோற்று) ஸித்₃த₄ஸாத₄னே. இவனுடையவும் தன்னுடையவும் ஸ்வருபங்களேயுணர்ந்தால் யத்னம் பண்ண ப்ராப்தியில்லே. "நாராயணனே நமக்கே பறை தருவான்" (1) என்கிறபடியே அவன் தலையிலே ப₄ாரத்தைப் போகட்டோமாகில் நமக்கு நீரிலே புக்கு முழுக வேணுமோ? என்றிருக்கிருளிவள். உபேயத்துக்கன்ருே உபாயம்; ஸித்₃தோ₄பாய நிஷ்டர்க்கு விளம்ப₄ஹேது வில்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையில்லாதார் சேதனரன்றென்றிருக்கிருர்கள். (அம்மனுய்) ரக்ஷ்யரக்ஷகப₄ாவம் மாறி நிற்கவோ பார்க்கிறது? அழகிதாக நிர்வாஹகையானுய்! (சுவர்க்கம் புகுகின்ற) ஸுகமனுப₄விக்கை. 1. "யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்க₃:". நிர்வாஹகையாயிருப்பார்க்குக் கண்ணுறங்க விரகுண்டோ? இவர்கள் பேச்சைக் கேட்டு ஈடுபட்டுப் பேசாதே கிடந்தாள். 2. "ஸம்ஸ்ரவே மது₄ரம் வாக்யம்".பழியிடுவதேயென்று பேசாதே கிடந்தாளாகவுமாம்."அம்மனுய்— என்பதே தங்கள் அடியேனுயிருக்கிறவென்னை" என்று பேசாதேயிருந்தாளாகவுமாம். 3. "ப்ரஹர்ஷேணுவருத்₃த₄ா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந" என்று ப்ரீதியாலே விக்கிப் பேசாதே இருக்கிருளாகவுமாம்.

இவர்கள் பொறுக்க மாட்டாமை (மாற்றமும் தாராரோ) என்கிருர்கள். ஏதேனுமொருபடியால் இவள் பேச்சேயமையும்இவர்களுக்கு. A "துளம்படு முறுவல் தோழியர்க்கருளாள்" என்கிறபடியே இவளுடைய பேச்சு உஜ்ஜீவனமாய் த₄ாரகமாயிறே இவர்களுக்கிருப்பது. த₄ர்மபுத்ரன் 'க்ருஷ்ணனுக்கும் அர்ஜுநனுக்கும் என்புகுகிறதோ?' என்றஞ்சினவளவிலே, யுத்₃த₄த்தில் ஸ்ரீபாஞ்சஜந்யத்₄வனி கேட்டு த₄ரித்தாப்போலே இவர்களுக்கு இவள் பேச்சு. உடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால் பேச்சாகிலும் தரலாகாதோ? 4. "மது₄ரா மது₄ராலாபா கிமாஹ மம பா₄மிநீ"யிறே அங்கு செல்லுகிறது. கண்ணின் பட்டினி தீராதாகில் செவியின் பட்டினியாகிலும் தீர்க்கலாகாதோ?

'நீங்கள் பழியிடுகிறதென்? இங்கு அவனுண்டோ?' என்ன — (நாற்றத் துழாய்முடி) மாளிகைச் சாந்து உன்னுலொளிக்கப்போமோ? "அந்தியம் போதே வாசலேக் கைக்கொண்டீர்கள்; அவனுக்குப் புகுர வழியுண்டோ?" என்ன— (நாராயணன்) அவனுக்கு எங்களேப் போலே கதவு திறக்கப் பார்க்கவேணுமோ? புறப்படுகைக்கு வழிதேடுமத்தனையன்ருே?

(நம்மால்) வெறுமையே பச்சையாகவுடைய நம்மால், (போற்ற) குடிப் பிறப்பால் வந்தது: உபாயமல்ல. (பறைதரும்) 'இப்படி பெரியவன் நமக்குப் பறை தருமோ?' என்னில் "நாராயணனன்ருே; பறை தரும்" என்றுமாம். (புண்ணியனுல்) 5. "க்ருஷ்ணம் த₄ர்மம் ஸநாதநம்".

A பெரிய திரு 2-7-2

(புண்ணியனால் பண்டொருநாள்) 'முன்பும் உன்னைப் போலே ஒருத்தனுண்டு காண் உணராதே படுத்தினான்' என்கை. (புண்ணியனால் கூற்றத்தின்வாய் வீழ்ந்த) A "கொடுவினைப்படைகள் வல்லையாய்" 1. "ததோ ராமோ மஹாதேஜா:" என்று நீரிலே நெருப்பு எழுந்தாற்போலே சீறுகைக்குள்ள அருமை. (கும்பகரணனும்) பிராட்டியைப் பிரித்த ராஜத்3ரோஹியோடே கூட்டுகிறார்கள். அவன் ஒருத்தியைப் பிரித்துவைத்து உறங்கினான்; நீ ஊராகப் பிரித்து வைத்து உறங்குகிறாய். (தோற்றுமுனக்கேயித்யாதி3) ஸ்ரீ பரசுராமன் கையில் வில்லை, சக்ரவர்த்தித்திருமகன் வென்று வாங்கினாற்போலே கும்ப4கர்ணன் நித்3ரையை வென்று வாங்கிக் கொண்டாயோ?

(ஆற்ற அநந்தலுடையாய்) 'இனி கிடக்கில் த்3ரோஹிகளாவுதோம்' என்றஞ்சிப் புறப்பட்டு முகங்காட்டுவோமென்று உணர்ந்தபடி தெரிய "க்ருஷ்ண க்ருஷ்ண" என்றாள்; நீ உணரும்படி கண்டு வாழ அமையாதோ? (அருங்கலமே) இனித் தெளிவு கண்டனுப4விக்கவேணும். "ஹாரத்தைப் பண்ணினால் அதுக்குக் கல்லழுத்த வேண்டாவோ? இக்கோ3ஷ்டி2யை ஸநாத2மாக்காய்" என்றவாறே பதறிப் புறப்படப்புக — (தேற்றமாய் வந்து திற) மேலில் நிலங்களில் நின்றும் தடுமாறி விழாதே தெளிந்து திற. 2. "ஸா ப்ரஸ்க2லந்தீ" இத்யாதி3வத். 10.

நாலாயிரப்படி—பத்தாம் பாட்டு

அவ:— பத்தாம் பாட்டு. (நோற்று) க்ருஷ்ணன் அசலகமாய் இடைச்சுவர் தள்ளிப்பொகட்டு ஒருபோகியாக அநுப4விக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:- (நோற்று) நோற்கக்கடவ நோன்பும் இவ்விரவிலே நோற்று, நோன்பின் ப2லமான க்ருஷ்ணனாகிற ஸ்வர்க்க3ம் உன் கை புகுந்ததாகாதே செல்லுகிறது? 3. "க்ருஷ்ணம் த4ர்மம் ஸநாதனம்" என்னுமாபோலே. ஆப4ாஸத4ர்மங்கள் இவளுக்கு அஞ்சிக் கைவிட்டதித்தனையிறே. இவளுக்கு ஸாத4னமான த4ர்மம் எம்பெருமானேயிறே. ஸாத4நாநுஷ்ட2ானம் பண்ணாதே இவனே உபாயமென்று அறுதியிட்டால், ப2லத்தில் அந்வயிக்குமத்தனையிறே. 'அவனுடைய ஸ்வரூபத்தை உணர்ந்தார்க்கு யத்நம் பண்ண ப்ராப்தியில்லை. தன் ஸ்வரூபமுணர்ந்தார்க்கு யத்நம் பண்ண ப்ராப்தியில்லை. விரோதி4யினுடைய ப்ராப3ல்யத்தை உணர்ந்தார்க்கும் யத்நம்பண்ண ஸித்3தி4யில்லை. ப்ராப்யத்தினுடைய சீர்மையை உணர்ந்தார்க்கும் யத்நம்பண்ண ப்ராப்தியில்லை. இதரோபாயங்களுக்கும் அவனே வேண்டுகையாலே யத்நம்பண்ண ப்ராப்தியில்லை' என்றிருந்தாள். 4. விது3: க்ருஷ்ணம் ப்3ராஹ்மணாஸ் தத்த்வதோ யே B "செய்த வேள்வியர்" 3. "யே ச தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:" 'வேத3விதோ3 விப்ரா:' 5. "ஸ ஸர்வவித்3ப4ஜதி மாம் ஸர்வப4ாவேந ப4ாரத" 6. "க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே". ரக்ஷ்யரக்ஷகப4ாவம் வ்யவஸிதமானால் ஜ்ஞானமேயிறே வேண்டுவது. "நாராயணனே நமக்கே பறைதருவான்" (1) என்கிறபடியே அவன் தலைக்கே ப4ரம் பொகட்டோமாகில் நமக்கு நீரிலேபுக்கு முழுக வேணுமோ? என்றிருக்-

A திருவாய் 9-2-10. B திருவாய் 5-7-5.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம்

அவ :— பத்தாம்பாட்டு. (நோற்றுஇத்யாதி₃) இப்பாட்டில் உபாயநிஷ்டரை எழுப்புகிறார்கள்.

வ்யா :— (நோற்று) ஸித்₃த₄ஸாத₄ந பரிக்₃ரஹம்பண்ணி. (சுவர்க்கம்) ஸுகரூபமான ப்ராப்யத்தை. (புகுகின்ற) அநுப₄விக்கிற, (அம்மனாய்) ஸ்வாமிநியானவளே! (வாசல்திறவாதார்—மாற்றமும் தாராரோ) த்வத₃நுப₄வவிரோதி₄யான வாசலை — அஹங்காரத்தை நீக்கி எங்களை உன்னை அநுப₄விப்பியாவிடிலும், நாங்கள் கேட்டு வாழும்படியான ஒரு வார்த்தையும் அரிதோ? அவன் எழுந்திருக்கவொட்டாவிடிலும் இருந்தவிடத்தேயிருந்து வார்த்தை சொன்னாலாகாதோ? என்று பூ₄ர்வார்த்த₂ம்.

'இப்போது அவன் இங்குஉண்டோ? ஏன் பழியிடுகிறிகோள்?' என்ன,—(நாற்றத்துழாய்முடி) 'இப்போது அவன் இங்கு இல்லாவிடில் இப்பரிமளம் ஏது?' என்ன; 'அவன் ஒருகாலணைக்க ஒன்பது குளிக்குப் பரிமளம் நிற்குமே' என்ன; 'கட்டுங் காவலுமான இடத்தே அவனுக்குப் புகுரப்போமோ?' என்ன, —(நாராயணன்) 'வேண்டுமிடத்தே ஆவிர்ப்ப₄விக்கைக்கன்றோ அவனுடைய வ்யாப்தி' என்ன; (நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியனால்) நம்மாலே போற்றப் பட்டவனைக்கொண்டு புருஷார்த்த₂ப்ரத₃னான நாராயணனாலே.

(பண்டொருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ) முன்பு ஒரு தமோபி₄பூ₄தமான காலத்திலே ம்ருத்யுவினுடைய வாயிலே விழுந்த தாமஸனான கும்ப₄கர்ணனும், உன் துயிலுக்குத் தான் தோற்று, உனக்கே தன்னுடைய பெருந்துயிலையும் தானே தந்தானோ? இவ்விடத்திலே ''கும்பகரணன்'' என்கிறது — தமோகு₃ணத்தை. தமோகு₃ணந்தன்னையன்றியிலே இவளுக்கு உண்டான நித்₃ரையைக் கண்டு இவளுடைய நித்₃ராஜநகத்வஶக்திக்குத் தான் தோற்றுத் தன்னுடைய நித்₃ராஜநகத்வஶக்தியையும் தந்தானோ? என்று ரஹஸ்யம். ஸாத்விகனான இவ்வதி₄காரிக்கு நித்₃ரையாவது — 1. ''ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த: பா₃ஹ்யம் கிஞ்ச ந வேத₃'' என்கிறபடியே ஸ்வாநுப₄வத₃ஶையிலே இதரவிஷயங்கள் தோற்றாதிருக்கை.

இப்படி இவர்கள் சொன்னவாறே அவள் எழுந்திருந்து சோம்பல் முறிக்க—(ஆற்ற அனந்தலுடையாய்) மிகவும் சோம்பலையுடையவளே! சோம்பலாவது—வ்யாபாராந்தராக்ஷமதை. அத ஏவ, (அருங்கலமே) து₃ர்லப₄மான ஆப₄ரணமே! ''ஆற்றவனந்தலுடையாய், அருங்கலமே'' என்கையாலே— 2. ''கிமிவ ஹி மது₄ராணாம்'' என்கிறபடியே சோம்பல்முறிக்கையும் து₃ர்லப₄மான ஆப₄ரணம் போலே அத்யாகர்ஷகமாயிருக்கிறது என்றுமாம். இவர்களாற்றாமையைக் கண்டு சடக்கென வந்து திறக்கப்புக, 'தேற்றமாய்வந்துதிற' என்கிறார்கள். 'நாங்கள் புறக்கட்டிலேயிருக்கிறோமாகையாலே, இருந்தபடியே வாராமே ஸத₃ஸ்யையாய் வந்து திற' என்கிறார்கள். 'தேற்றமாய் வந்துதிற' என்கையாலே—இவ்வதி₄காரிக்கும் லோககர்ஹை வாராமல் லௌகிகாநுவர்த்தநம் கார்யமென்றதாய்த்து. 10.